கல்கி



KALKI 4.4.1971 40 காசு



she is the bearer of tradition...
IN
CENTURY SAREES
THE
CENTURY
SPG. & MFG. CO., LTD.
CENTURY BHAVAN,
WORLI, BOMBAY-25 DD.
Century — For 100% cotton textiles
Adroit/CM/ 43

G.E.C. 'எவரெஸ்ட்'
மின்விசிறிகள் ஏன் மிகச்
சிறப்பாக உழைக்கின்றன.
காரணம், ஜிஇஸியின் அகில
உலக தொழில்களை
நுண்ணறிவுடன் இவை
தயாரிக்கப்படுகின்றன.
'எவரெஸ்ட்' மின்விசிறிகள்
நன்கு உழைப்பதுடன்
அழகிய தோற்றமும்
கொண்டவை.

ஜிஇஸி எவரெஸ்டின்
சிறப்பு அம்சங்கள்:

* ஓசையற்ற அமைதியான உழைப்பு
* மறுபடியும் வர்ணப்பூச்சு தேவையில்லை
* ஆண்டுக்கணக்கில் தொந்தரவற்ற சேவை

தென்றலின்
சுகமும்
எழிலான
வாழ்வும் பெற
'எவரெஸ்ட்' மின்விசிறி
களை உபயோகியுங்கள்.



G.E.C.

தி ஜெனரல் இலக்ட்ரிக் கம்பெனி ஆஃப் இந்தியா
லிமிடெட் கல்கத்தா . கௌஹாத்தி . புவனேஸ்வர்
பாட்னா . கான்பூர் . புதுடில்லி . சண்டிகர் . ஜெய்ப்பூர்
பம்பாய் . அஹமதாபாத் . நாகபுரி . ஜபல்பூர் . சென்னை
கோயம்புத்தூர் . பெங்களூர் . சிக்கந்தராபாத் . எர்ணாகுளம்

KALPANA G.E.C. 554.Tm.

சாதாரண, பங்குனி 21
ஏப்ரல் 4, 1971


பொருளடக்கம்

மேலட்டை : சிலையும் சிறுமியும்
வண்ணப்படம் : எஸ். ஹரிஹரன்

★

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

கல்கிக்கு வரும் கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள் முதலானவற்றில் பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவை, போதிய தபால் தலைகளுடன் கூடிய முகவரியிட்ட உறையோடு வந்திருந்தால் அவ்வப்போது திருப்பி அனுப்பப்படுகின்றன. போதிய தபால் தலைகளுடன் வராத கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகள் பற்றி இக்காரியாலயம் பொறுப்பேற்பதற்கில்லை.



சென்னை, ஆஸ்திக ஸமாஜத் தலைவரும் வீனஸ் ஹவுஸ் அதிபருமான ஸ்ரீ எஸ். ஜி. ரத்தினம் அய்யர் அவர்களின் குமாரர் சிரஞ்சீவி ஜி. **வெங்கடேஸ்வரனுக்கும்** ஆனந்தா பிக்சர்ஸ் அதிபர் ஸ்ரீ வி. எஸ். லக்ஷ்மணன் அவர்கள் புதல்வி சௌ. **சுஜாதா**வுக்கும் திருமணம் மார்ச் 18ம் தேதி சென்னை ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கும் மாலையில் நடைபெற்ற வரவேற்பிற்கும் ஏராளமான நண்பர்களும், உறவினர்களும், பிரமுகர்களும் வருகை தந்து மணமக்களை வாழ்த்தினர்.


வரலாறு காணாத வகையில் வாரி வழங்குங்கள்,
உங்களுடைய உதவி இப்போது எனக்குத் தேவையில்லை!
பணக்காரர்களுக்குத் தான் வரி விதிக்கப் போகிறேன்.
வரி
தொழிலதிபர்கள் வியாபாரிகள்
பொதுஜனம்
-சாமா

மலர் 30

இதழ் 36

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்



தர்மவாழ்வைத் தொடங்குவோம்

தனி வாழ்வுக்கும் சமூக வாழ்வுக்கும் அரசியல், இலக்கியம், பொருளாதாரம், விஞ்ஞானம் எல்லாம் வேண்டியவை தாம். ஆனால் இவையெல்லாம் தனி மனித வாழ்வுக்கும், சமூக வாழ்வுக்கும் வெற்று உடலம் போலத்தான். அந்த உடலுக்கு உயிரூட்டும் பிராணவாயு தெய்வ பக்தியே.

தேசம் முழுமைக்கும் இன்று ஒரு துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் துர்ப்பாக்கியம் தமிழகத்தை இரட்டிப்புத் தீவிரத்துடன் தாக்கியிருக்கிறது. மதம், சம்பிரதாயக் கட்டுப்பாடுகள், தெய்வ பக்தி இவற்றின் முழு எதிரி என்று தம்மை முழு மூச்சுடன் பகிரங்கப்படுத்திக் கொள்பவரின் 'திருமுன்னரே' அவரது ஆசியும் 'அநுக்கிரகமும்' பெற்றுப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டிருக்கிறது. தமிழக மந்திரி சபை.

''தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்; தர்மம் மறுபடி வெல்லும்'' என்று பாரதி பாடி வைத்ததை நினைவு கொண்டு, தர்மம் நிச்சயமாக வெல்லத்தான் போகிறது என்று உறுதி பெறுவோம். நம்முடைய பண்டைய பாவங்களுக்காக இன்று கூலி தருகிறோம் என்ற உணர்வுடன் இறைவனை உளம் நெகிழ்ந்து பிரார்த்தித்து, அவரவர் கடமையைச் செய்து வந்தால் இறைவன் நிச்சயம் செவி சாய்ப்பான். தமிழகத்தின் பொல்லாத சாபத்திடு நீங்கி இங்கு தெய்விகம் மீண்டும் பொலியும்.

இனி தமிழகம் ஆஸ்திகர்கள் வாழத் தகுதி இழந்து விட்டது; இந்த ராஜ்யத்தை விட்டே வெளியேறிவிட வேண்டும் என்று சில மகா புருஷர்கள் உள்படப் பலர் எண்ணத் தொடங்கிவிட்டனர். புனிதத் தமிழ் மண்ணுக்கு இந்த இழுக்கும் அழுக்கும் நீங்கும் வண்ணம் நாம் அனைவரும் உறுதியான பக்தி செலுத்தி, இறைவன் உள்ளத்தை உருக்கி அவனருள் பெற்று, இந்த நாட்டைத் தர்ம பூமியாக்க வேண்டும்.

ஸ்ரீ ராம நவமி வருகிறது. சத்திய, தர்ம மூர்த்தியாக வந்த பரமனே ஸ்ரீ ராமன். அந்த ராமனை முன் வைத்தே — அந்த ராமனை உள்ளத்தில் உறைவித்தே — காந்தியடிகள் சுதந்திரம் பெற்றுத் தந்தார். ராமராஜ்யமாக சுயராஜ்ய இந்தியா திகழ வேண்டும் என்பதே மகாத்மாவின் கனவாக இருந்தது. அந்தக் கனவு பகற் கனவாகி விடக்கூடாது. நூற்றுக்கு நூறு மெய்யாக வேண்டும். அந்த அளவுக்கு நாம் உண்மை ஆஸ்திகர்களாவதற்குத் தர்ம மூர்த்தியான ராமனைச் சரண் புக வேண்டும். இந்த ராம நவமியன்று இந்த திவ்விய விரதத்தைத் தொடங்குவோம்.

சென்றுபோன ராமநவமிகளுக்கும் வரப் போகும் ராமநவமிக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. சென்ற ஆண்டுகளில் கேளிக்கையும் கோலாகலமும் உற்சாகமுமாக உற்சவம் எடுத்தோம். ஆனால், இவ்வருடமோ நாம் அவ்விதம் ராம நவமி கொண்டாட வேண்டியதில்லை. ஆம், இதுவே இன்று தர்ம விக்கிரகமாக வாழ்ந்து வரும் ஸ்ரீ காமகோடி ஆசாரியர்களின் ஆக்ஞை. விருந்தும், பாட்டுக் கச்சேரியும், படாடோப உற்சவமுமாக இவ்வாண்டு ராமநவமி நடத்துவதை ஸ்ரீ ஆசாரியர்கள் ஆமோதிக்கவில்லை. ராஜ்யத்துக்கு ஆத்ம சுத்தி உண்டாக்குவது போல் அன்று இருபத்தியொரு வயதுக்கு மேற்பட்ட அனைவரும் உபவாசம் இருக்க வேண்டும் என்று ஆசாரியப் பெருமான் உத்தரவிட்டிருக்கிறார். பகட்டான திருவிழாக் கோஷம் இன்றி, அவரவரும் ''ஸ்ரீராம் ஜயராம் ஜயஜயராம்'' என்ற மகா மந்திரத்தை மனமார மனனம் செய்ய வேண்டும் என அருளியிருக்கிறார்கள். ஒரு கோடி தமிழ் மக்களாவது, ஸ்ரீ ஆசாரியரின் ஆணையைச் சிரமேற்கொண்டு ராமநவமியன்று பூரண உபவாசம் இருந்து உள்ளம் கனிந்து ராம நாம ஜபம் செய்து, ஜயன் அநுக்கிரகத்தைப் பெறுவோமாக!

வருகிற ஸ்ரீ ராமநவமி நமது தமிழகத்தில் தர்ம வாழ்வுக்குத் தொடக்க அத்தியாயமாகத் திகழ ஆஞ்சநேயன் அருள்வானாக!

ராஜாஜியின் கருத்துக்கள்

கிழக்குப் பாகிஸ்தான் தனி நாடாகப் பிரிகிற வாய்ப்பு மாறிவிட்டதென்றும், அது பாகிஸ்தானுக்குள்ளேயே அதிகப்பட்ச சுயாட்சி பெற்ற மாநிலமாக இருக்க உடன்படிக்கை ஏற்பட்டு விடும் என்றும் தோன்றியது. ஆனால் இப்போது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது.

சுதந்திர இந்தியாவில் பெரும்பான்மை வகுப்பினரின் ஆதிக்கம் ஏற்பட்டுவிடும் என்று ஜின்னா கொண்ட அச்சத்தின் மீதே பாகிஸ்தான் பிறந்தது. அப்போது ஹிந்துக்களான தலைவர்கள் தந்த வாக்குறுதியிலும் அந்த வாக்குறுதியை மதித்த ஹிந்துக்கள் கொண்ட இந்தியாவிடமும் ஜின்னாவுக்கு நம்பிக்கை இல்லை. இப்போது பாகிஸ்தானில் எல்லா அதிகார ஸ்தானங்களையும் கைப்பற்றியுள்ளவர்கள் பஞ்சாபிப் பட்டாணியர்களையும் உத்தரப்பிரதேச முஸ்லிம்களையும் சேர்ந்தவர்கள். இவர்களை எதிர்த்தே தற்போது கிழக்கு வங்காளத்தினர் இன அடிப்படையிலும், மொழி அடிப்படையிலும் கிளர்ந்தெழுந்து விட்டனர்.

பெருவாரி மக்களின் கிளர்ச்சியை ராணுவ சக்தி கொண்டு அடக்கப் பார்க்கிறார் ஜனுப் யாஹ்யாகான். இதற்கு அவருக்குத் தேவைப்பட்ட அவகாசத்தைப் பெறவே, இடைக்காலத்தில் பேச்சு வார்த்தைகள் நடத்தியிருக்கிறார் போலும்.

பாகிஸ்தான் பிளந்து போகாதிருக்க வேண்டுமாயின், இறுதியில் கிழக்கு வங்காளத்துக்குப் பூரணமான — அல்லது ஏறக்குறைய பூரணமான — சுயாதிக்க உரிமை தந்தேயாகவேண்டி யிருக்கும். உள்நாட்டுக் கிளர்ச்சியை ராணுவத்தின் மூலம் அடக்கி விடலாம். ஆனால் பிறகு மக்களின் மகத்தான எதிர்ப்பு உள்ளபோது சர்க்காரால் எப்படி நிர்வாகம் நடத்த முடியும்? இறுதியில், மேற்கு பாகிஸ்தானத்தின் ஜனத்தொகையை விட அதிகமான கிழக்கு வங்காளிகளின் விருப்பத்துக்கு அரசாங்கம் விட்டுக் கொடுக்கத் தான் வேண்டியிருக்கும். சுய நிர்வாகத்தில் அந்த மக்களுக்கு உரிய நியாயமான பங்கை அளித்தேயாக வேண்டும்.

ஆசாபங்கம் கொண்ட முஜிப்-உர்-ரெஹ்மான் சீனத்தின் உதவி கோரும் சபலத்துக்கு ஆளாகிவிட்டால், அது பிராணபத்தாக முடியும். அதன் விளைவாகக் கிழக்கு வங்கம் கம்யூனிஸ்ட் சீனத்தின் உபகிரகமாகிவிடும்.

கிழக்கு பாகிஸ்தான், மேற்கு பாகிஸ்தான் இவற்றில் எதற்குமே இந்தியா ஆதரவு தெரிவிப்பதற்கில்லை. ஆயினும் கிழக்கு வங்கத்தில் கம்யூனிஸ்ட் சீன மேலாதிக்கம் ஏற்படக்கூடுமாயின், அப்போது இந்தியாவைச் சேர்ந்த மேற்கு வங்கத்தின் எதிர்காலம் என்னவாகும் என்று எவரும் அனுமானிப்பதற்கில்லை.

★

குப்பைக் காகிதக் கிடங்கு ஒன்றில் முத்திரையிட்ட பல வாக்குச் சீட்டுக் கட்டுக்கள் கிடந்ததாகக் கூறப்பட்டிருப்பது, நடைபெற்ற தேர்தலில் வாக்குச்சீட்டுக்கள் கணிசமான அளவில் ஊழலுக்கு ஆளாயின என்கிற பரவலான சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்கிறது. 'தேர்தல் கமிஷன் ஒரு சுதந்திர அமைப்பு; அதன் வேலை முறையில் சர்க்கார் ஏதும் செய்வதற்கில்லை' என்கிறார் பிரதமர். இன்றையச் சூழ்நிலையில் பிரதமரின் கூற்றைப் பொதுமக்கள் ஏற்பதற்கில்லை. ஆளும் கட்சிக்கு ஆதரவாக முன்கூட்டியே முத்திரையிட்ட வாக்குச் சீட்டுக்கள், வாக்காளர் உண்மையாக முத்திரையிட்ட வாக்குச் சீட்டுக்களுக்குப் பதிலாக மாற்றப்பட்டுள்ளன என்பதாக ஒரு சந்தேகம் பரவியுள்ளது. காகிதக் கிடங்கில் வாக்குச் சீட்டுக் கட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டது இந்தச் சந்தேகத்தை உறுதி செய்கிறது. பிரதமர் அவர்கள் இவ் விஷயத்தில் சிரத்தை காட்டாமல் எதிர்மறைப் போக்குக் காட்டுவது சந்தேகத்தை மேலும் வலிவுபடுத்துகிறது.

தமிழ் நாட்டில் முக்கிய கவனம் வாக்காளர் ஜாபிதா தயாரிப்பில் இருந்திருக்கிறது.



சிருங்ககிரி ஸ்வாமிகள் வருகை

ஸ்ரீ சிருங்ககிரி சாரதா பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் சென்னைக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். ஸ்ரீ சந்திர மௌளீசுவர ஆராதனையும், உபந்நியாசமும் நிகழ்த்தி அநுக்கிரகித்து வருகிறார்கள். ஏப்ரில் 9-ந்தேதிவரை சென்னையில் தங்கியிருப்பார்கள். பின்னர் தமிழகத்தில் பல இடங்களுக்கு விஜயம் செய்துவிட்டு, ஸ்ரீ சங்கர ஜயந்திக்குக் காலடிக்குச் செல்கிறார்கள்.

ஜகத்குரு ஸ்ரீ சிருங்ககிரி ஆசாரியாளுக்கு, நமது அஞ்சலிகளை அளிக்கிறோம். சுவாமிகளின் தமிழக விஜயம் இனிது நிறைவேறிப் பக்தகோடிகள் நற்பலன் பெறுவார்களாக!

தவறான பல பெயர்கள் சேர்க்கப்பட்டன. விலக்கு வாங்க முடியாத வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன. இதர ராஜ்யங்களில் முன்னதாகவே சீட்டுக்களில் முத்திரை போட்டு, உண்மைச் சீட்டுக்களை அப்புறப்படுத்துவதில் முக்கிய கவனம் இருந்திருப்பதாகத் தோன்றுகிறது. ஆள்கிற கட்சியே அக்கறை காட்டிய ஒரு மகத்தான மோசடிச் சிக்கலை அவிழ்ப்பது எளிதல்ல. அது எப்படியானாலும் ''நேர்மையாகவும் சுதந்திரமாகவும்'' இத் தேர்தல் நடந்ததாகச் சொல்வது மாயப் பிரமையே என்பது நிச்சயம்.

★

''இந்தியாவில் ஜனநாயகத்தைக் காப்பதாயின் ஸென் வர்மா பதவியிலிருந்து வெளியேற வேண்டும்'' என ஸ்தாபன காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தேர்தல் கமிஷனை எதிர்த்து அக்கட்சி இயக்கம் நடத்தப் போகிறது என பி. டி. ஐ. கூறுகிறது. தேர்தல் கமிஷன்மீது தாங்கள் சாட்டும் குற்றத்தை நீதிமன்றங்களில் நிரூபித்து, தேர்தல் முழுவதுமே செல்லாது என்று தீர்ப்புப் பெற முடியும் என்று ஸ்தாபன காங்கிரஸின் மத்திய பார்லிமெண்டரி குழு அங்கத்தினர் ஸ்ரீ எஸ். கே. பாட்டீல் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். தேர்தல் மனுக்களைத் தாக்கல் செய்வதன் மூலம் இந்தப் பிரச்னை நீதிமன்றங்கள் முன் கொண்டு வரப்படும் என்று பொதுக் காரியதரிசி ஸ்ரீ ஸாதிக் அலி குறிப்பாகத் தெரிவித்திருக்கிறார். தேர்தல் முழுதும் செல்லுமா, செல்லாதா என்பது குறித்து ஸுப்ரீம் கோர்ட் தீர்ப்பு எப்படி அமைந்தாலும் சரி, இவ்விஷயத்தில் நிர விசாரணை செய்வதால், ''அற்புத வெற்றி'' என்று பறைசாற்றப்படும் வெற்றியின் தார்மீக பலம் எவ்வளவு குறைவானது என்பது நிதரிசனமாகும்.

உருவமும் அருவமும்

கண்ணுக்குப் புலப்படாவிடினும் கடவுள் ஒருவரே உண்மையில் உள்ளவர். குளிரும் காற்றும் மின்சாரமும் கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் இருக்கின்றன அன்றோ? புஷ்பத்தின் வாசனை கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் இருக்கிறது அல்லவா? கற்கண்டில் இருக்கும் தித்திப்பும் படிகாரத்தில் இருக்கும் கசப்பும் கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும் இருக்கின்றன அன்றோ? ஸங்கீத ராகம் கண்ணுக்குப் புலப்படாது; செவிக்குப் புலப்படும். பச்சை, சிவப்பு முதலிய வர்ணங்கள் காதுக்குப் புலப்படா; கண்ணுக்குப் புலப்படும். சூடு, குளிர் இவை செவிக்குப் புலப்படா; தொடுதலுக்குப் புலப்படும். இவ்விதம் உலகில் உள்ள எந்தப் பொருளும் கண் காது, மூக்கு, நாக்கு தொடுதல் இவற்றில் அநேகமாக ஏதாவது ஒன்றுக்குப் புலப்படுவதாகவே இருக்கிறது.



கடவுள் இவை எல்லாவற்றையுமே சிருஷ்டித்து இவற்றுக்கு மேல் நிற்பவர். ஆதலால் அவர் நம் இந்திரியங்களுக்கு அடங்கிப் புலப்படார். அதுவே அவருடைய அருவத் தன்மை. மின்சாரம் கம்பியில் வரும்போது அருவமாக இருப்பினும் காற்றடக்கமான ஒரு கண்ணாடி மூடியையும் அதனுடன் சிறு கம்பியையும் சேர்த்தால் கண்ணுக்கு ஒளி வீசும் ஜோதியாக விளங்குவது போல், அன்பர்களின் இதயமென்னும் மூடியையும் அதனுள் பக்தி என்னும் கம்பியையும் பூட்டினவுடனே ஈசன் ஜகஜ்ஜோதியாக திவ்விய மங்கள ரூபமாய் விளங்குகிறார். சூரியன் ஏரிகளிலும் ஆறுகளிலும் குளங்களிலும் சமுத்திரங்களிலும் உள்ள தண்ணீரைத் தன் கிரணங்களால் இழுத்துக் கொள்ளும்போது உயரச் செல்லும் அந்த நீர் கண்ணுக்குப் புலப்படாமல் அருவமாக இருந்தாலும் அது நீல மேகமாகிப் பொழியும்போது உருவமாக மாறுவது போல, அருவமான ஆண்டவன் பிரம்மா, விஷ்ணு, சிவம், சக்தி என்னும் அநேக உருவமாயும் இருக்கிறார். ஒரு நாட்டில் வசிப்பதற்காக அரசாங்கத்துக்கு வரி செலுத்துவது போல இந்தப் பிரபஞ்சத்தில் நாம் வசிப்பதற்காகக் கடவுளுக்கான கடமையையும் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். அல்லும் பகலும் இறைவனையே நாடி வேறு ஆசைகளை மறந்து ஈசன் அருளைப் பெற்றவன் ஒருவன் இவ்வுலகத்தில் இருந்தானேயானால், அவனைத் தரிசிப்பதனால் உலகிலுள்ள மாந்தர்கள் அடையும் நன்மையே, பொருள் முதலிய எல்லாவற்றையும் பெறுவதைவிட மேலானது.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி
காமகோடி ஆசாரியர்கள்

காணிக்கை

ஆர்வி



அத்தியாயம் 51

பம்பாயில் விமானத்தினுள் வந்து உட்கார்ந்தபோது தனக்கு முன்னால் இருந்த ஸீட்டில் பழைய மொரீஷஸ் தீவு மங்கையைப் பார்த்தபோது பாஸ்கரனுக்கு வியப்பினால் மூச்சு முட்டியது. இப்படியா ஒவ்வொரு தடவையும் இவள் வந்து சேருவாள் என்று அவனுக்கு ஆச்சரியம் பிடிபடவே யில்லை. விமான நிலையத்துக்குள் வந்தது முதல் இந்த நிமிஷம் வரையில் இவள் எப்படி அவன் கண்ணில் படாமல் போனாள்?

அவன் எல்லாவற்றையும் கவனிக்கிற மனநிலையில் என்னவோ இல்லை தான். இருந்தாலும் சென்னையிலிருந்து வந்திருந்த காமேசுவரன் கண்ணில் பட்டானே! அவன்கூடச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, துக்கமும் விசாரித்துவிட்டுப் போனானே — அப்பொழுது இவள் அவன் பார்வையிலிருந்து தப்பியிருக்கக் கூடும்.

விமானத்தினுள்ளே அவர்கள் இந்தத் தடவை அடிக்கடி பேசிக் கொள்கிற அளவில்தான் உட்கார்ந்திருந்தார்கள். இருவரும் ஒரே சமயத்தில் பார்த்துக்கொண்டார்கள். மெல்லப் புன்னகையும் செய்து கொண்டார்கள்.

''இது எப்படி நாம் ஒவ்வொரு தடவையும் சேர்ந்து பயணம் செய்யும்படி நேர்கிறது?''

''அதைத்தான் நானும் கேட்கிறேன். ஆனால் அதனால் உங்களுக்கு வருத்தம் ஒன்றும் இல்லையே!''

''சேச்சே! இப்போது எனக்குப் பேச்சுத் துணைக்கு நீ கிடைத்தது எவ்வளவு ஆறுதலாய் இருக்கிறது தெரியுமா?''

இப்படி அவன் சொன்னதைக் கேட்டு அவள் மகிழ்ச்சி யடைந்ததாகத் தோன்றிற்று. சென்னை வருகிற வரையில் அவர்கள் பல விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். அஜிதாவைப் பற்றிச் சற்று அளவுக்கு அதிகமாகவே பேசி விட்டார்கள். இன்னும் நேரம் இருந்தால் அவள் மேலும் என்னவெல்லாம் சொல்லி யிருப்பாளோ, தெரியாது. அதற்குள் விமானம் மீனம்பாக்கத்தில் இறங்கி விட்டது. பேச்சும் நின்று விட்டது. அவன் ஒரு பக்கம், அவள் ஒரு பக்கமாகப் பிரிந்து விட்டார்கள்.

ஜெர்மனியில் வந்து இறங்கியதுமே அவனுக்குத் தன் அம்மாவைப் பற்றிய செய்தி கிடைத்து விட்டது. இரண்டு வாரங்கள் போல் பல நாடுகளைச் சுற்றியதே போதும் என்று அடுத்த விமானத்திலேயே பம்பாய்க்குப் புறப்பட்டு விட்டான். பம்பாய் வந்தவன் மறு விமானத்திலேயே சென்னைக்கும் வந்து விட்டான். இருந்தும் அம்மாவின் காரியங்கள் முடிந்து பதினைந்து நாட்களாகிவிட்டன. விமான நிலையத்துக்கு அவன் வண்டி வந்திருக்கும்; அஜிதாவும் அவனைச் சந்திப்பதற்காக வந்திருப்பாள். யார் வந்திருக்கிறார்களோ என்று பார்க்க விரும்பி அவன் கூட்டத்தை விட்டு விலகி வந்தான். அவன் கண்கள் வர்ண ஜாலமாய்த் திகழ்ந்த மேடைப் பகுதியைத் துழாவின. அவன் வண்டியை யார் கொண்டு வந்திருக்கிறார்களோ, என்னவோ, யாருமே கண்ணில் படவில்லை. அஜிதாவையும் காணோம்!

ஆனால் லவுஞ்சில் யாமினி எங்கே வந்து நிற்கிறாள்? அவன் தன் கூலிங் கிளாஸைக் கழற்றிவிட்டுச் சரியாகப் பார்த்தான் மறுபடியும். யாமினியே தான்! இன்னும் யார் பக்கத்தில்? அவன் யாரோ தெரியவில்லை. யாமினியின் கையில் ஒரு வயதுக் குழந்தை அரவிந்தன்! அவன் அப்

படியே திகைத்து நின்று யாமினி யையும் குழந்தையையும் பார்த்த படியே இருந்தான். அது அவனு டைய குழந்தைதான். இப்பொழுது தான் முதன் முதலாகத் தன் குழந் தையைப் பார்க்கிறான். அம்மாவின் காரியங்களை முன்னிட்டு அவள் வந்திருப்பாள். அவன் விமானத்தில் வரப் போவதை அண்ணா சொல்லி அவளையே அனுப்பி யிருக்கிறார் போலிருக்கிறது! இப்படி எண்ணிக் கொண்டே அவன் இன்னும் சிறிது அருகில் போனான். குழந்தை நல்ல நிறமாக, கொழு கொழுவென்று சுருட்டைச் சுருளாக, அவன் ஜாடையாக இருப்பதைப் பார்த்து அவன் நெஞ்செல்லாம் கனத்தது. அடுத்த அடி எடுத்து வைப்பதற்குக் காலிலே திராணி இல்லை. அப்படியே பாய்ந்து சென்று தாயையும் பிள்ளை யையும் சேர்த்து அணைத்துக் கொள்ள வேண்டும் போல் கைகள் இரண்டும் நெஞ்சோடு சேர்ந்து துடித்தன. அவன் அதேபோலச் செய்தும் இருப்பான். ஆனால் அதற்



குள் யாமினி திரும்பி விட்டாள். கண்கள் அவனைப் பார்த்து விட்டன. அதிர்ச்சியும் திகைப்பும் சேர்ந்து அவள் சிலையாக நின்று விட்டாள். அவனைப் பார்க்க நேரும் என்று அவள் நினைக்கவில்லை. அவளை யறியாமலே அவள் கால்கள் சற்றுப் பின்வாங்கின. யாரிடமிருந்தோ தன்னுடைய சுய மதிப்பையும் தன் குழந்தையையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்கிற ஜாக்கிரதை உணர்ச்சி அவளை உந்தியது. அப்படியும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே தான் இருந்தாள். நாளைக்கு அரவிந்தனும் பெரியவனாகி விட்டால் இப்படித் தான் இதே அச்சாக இருப்பான்! இந்தக் கற்பனை தோன்றியதுமே, இதயத்தின் ஏதோ ஒரு மூலையில் இனம் புரியாத ஓர் ஆனந்தம் கிளர்ந்தெழுந்து அவளைப் பரவசமூட்டியது. இன்னொரு பக்கம் இரக்கமில்லாமல் வஞ்சிக்கப்பட்டு விட்டோம் என்கிற ஏமாற்றமும் ஆத்திரமும் தோன்றிக் கோபத் தீயை மூட்டி விட்டன. இப்படி இரண்டு விதமான உணர்ச்சிகளுக்கிடையே சிக்குண்டு அவள் தவித்துத் தயங்கி, நிலை தடுமாறி நின்றாள்.

திடீரென்று உள்ளத்தில் மூண்டிருந்த தீ பற்றி எரிந்தது.

அவள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, ''பாஸ்கர்!'' என்று அவன் தோளைத் தொட்டு அழைத்தாள் அஜிதா.

பாஸ்கரன் அதற்குப் பிறகு என்ன செய்தானோ தெரியாது. அவள் மின்னல் தோன்றி மறைவது போல் சுசிலாவுக்குப் பின்னால் மறைந்துகொண்டு விட்டாள். அவளுக்கு வந்த ரோசத்திலும் கோபத்திலும் விமானகூடமே இடிந்து விழுந்து விடாதா என்று இருந்தது. சுசிலாவின் தலைப்புத் துணியைப் பற்றி மெல்ல இழுத்தபடியே வெளியில் சென்ற கூட்டத்தினுள் கலந்து விட்டாள். அவர்கள் கண்களிலிருந்து தப்பி வெளியில் வந்த பிறகுதான் அவளுக்கு நல்ல மூச்சு வந்தது. வந்தவுடனேயே ஒரு டாக்ஸி கிடைத்தது இன்னும் கலகலப்பாக இருந்தது.

''டிரைவர்! அவசரம்; கொஞ்சம் வேகமாகப் போகணும்! கூட வேணும்னாலும் தந்துடறேன்!'' என்று கேட்டுக் கொண்டாள் அவள்.

டாக்ஸியின் வேகம் மிருதியாகிக் கொண்டிருந்தது.

''என்னடி இவளே, உனக்கு என்ன வந்தது திடீர்னு?''

''அது தெரியல்லியா உனக்கு இன்னும்? நான் தெரியும்னு நினைச்சேனே. நீயும் அத்தையும் ரகசியமாகப் போட்ட திட்டம் பலிக்காமப் போயிட்டதேன்னு கவலைப்படறியா? அப்படியெல்லாம் கவலைப்படாதே. அதான் பலிச்சுட்டதே. அவர் என் பிள்ளையைப் பார்த்துட்டா எல்லாத்துக்கும் தன்னாலே வழி பிறந்துடும்னுதானே நீங்க நினைச்சேள்? அதுதான் நடந்துட்டதே. அவர் தான் தம் பிள்ளையைப் பார்த்துட்டாரே. அப்புறம் உனக்கு என்ன குறை? அவர் இந்த விமானத்திலே வரப்போறார்னு தெரிஞ்சுதானே நீ இப்படி யாரையோ வழியனுப்பற சாக்கிலே என்னைக் கூட்டிண்டு வந்திருக்கே. உன் வேலை வெற்றிகரமா முடிஞ்சு போச்சு. நானும் இன்னிக்கு ராத்திரியே புறப்பட்டுட வேண்டியதுதான். என் வேலையும் முடிஞ்சு போச்சு உன் வீட்டிலே—இன்னியோட.''

''என்னடி இது, இப்படியெல்லாம் பேசறே நீ?''

''புதிசா நான் ஒண்ணும் பேசல்லியே! எங்கிட்டே உனக்கும் சரி, அத்தைக்கும் சரி, நம்பிக்கை இல்லே. என் விவகாரத்தை என்னாலே தீர்த்துக்கொள்ள முடியாதுன்னு உங்களுக்கு நினைப்பு... நீங்க தலையிட்டாத்தான் முடியும்னு உங்களுக்குப் பட்டிருக்கு. அதனால்தான் இவ்வளவு தூரம் எனக்காக மெனக்கெட்டிருக்கேள். என் விஷயத்திலே இவ்வளவு அக்கறை வெச்சிருக்கிறதுக்காக உங்களுக்கு ரொம்ப நன்றி. ஆனால் அன்னிக்கு நான் சொன்னது உனக்கு நினைவில்லையா? நீங்க சும்மா இல்லாமே, என் விஷயத்திலே தலையிட்டால் மறுநிமிஷமே நான் உங்க வீட்டிலே இருக்க மாட்டேன்னு சொன்னேனே, மறந்துட்டியா? நீ மறக்கலாம். ஆனால் நான் எப்படி அதை மறந்துவிட முடியும்? என் வார்த்தையை நான் காப்பாத்திக்க வேண்டாமா? அதனாலே நீ வித்தியாசமாய் நினைச்சுக்காதே. உனக்கு நான் பலவிதத்திலும் கடமைப் பட்டிருக்கேன். அந்த நன்றியோட சாகிற வரைக்கும் இருப்பேன். ஆனால் இப்பப் போனதுமே நான் புறப்பட்டுப் போறேன். இருக்கிறதெல்லாம் இருந்துட்டுச் சாப்பிடாமல் போயிடுவேன்னு பார்க்காதே. போனதுமே சாப்பாடு தான். சாப்பிட்டதுமே புறப்பாடு தான்!''

சுசிலாவுக்குக் கண் கலங்கிக் கண்ணீர் துளித்து விட்டது. யாமினியும் பாஸ்கரனும் ஒரு தடவை சந்திக்க வேண்டும் என்பதுதான் அவளுடைய நோக்கம். தன் பிள்ளையை ஒரு தடவை கண்ணால் பார்த்து விட்டால் அவன் தன்னால் வழிக்கு வந்து விடுவான் என்றுதான் இவ்வளவு தூரம் பாடுபட்டுத் திட்ட

மெல்லாம் போட்டாள். உண்மையில் அவர்கள் இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டது கூட அவளுக்குத் தெரியாது. பாஸ்கரனை அவளும் பார்க்கத்தான் பார்த்தாள். ஆனால் அவன் தான் பாஸ்கரன் என்று அவளுக்குத் தெரியாது. கன்னியாகுமரி போயிருந்த போது பார்த்திருக்கிறாள் என்று பெயரே தவிர, சரியாக எங்கே கவனித்துப் பார்த்திருக்கிறாள்? புகைப் படத்தில் கூடப் பார்த்திருக்கிறாள்; ஆனால் நேரில் பார்த்ததில்லை. அதனால் தான் இன்று அவளால் அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. கண்டு கொண்டிருந்தால் நடந்தது வேறாகத்தான் இருந்திருக்கும். இனி அதைச் சொல்லி என்ன பயன்?

''என் பிள்ளையைக் காட்டிப் பிச்சை கேக்கறப்பலே அவர் கிட்டே அன்புப் பிச்சை வாங்கிக்கணும்னு நீ எதிர்பார்க்கிறியா? என்னை எனக்காக மதிக்காத கணவர்கிட்டே என் பிள்ளைக்காகவாவது திரும்பி வரணும்னு கெஞ்சச் சொல்றியா? என்னைத் தயவுபண்ணி அப்படியெல்லாம் செய்யச் சொல்லாதே. இதைவிட ஒரு பெண்ணுக்கு வேறே என்ன அவமானம் வேணும்?'' என்றாள் யாமினி.

அன்றிரவே யாமினி ஊருக்குப் புறப்பட்டபோது பிரிந்தவர்கள் சேருவதற்கான சந்தர்ப்பங்களை அவர்கள் இழந்து விட்டதாகவே சுசிலாவுக்குத் தோன்றியது.

''இவர் நூறு பெண்களோட பழகினாலும் நான் சந்தேகப்பட மாட்டேன். ஆனால் அவள் ஒருத்தியோட மட்டும் ஒழுங்காகவே பழகினால்கூட அதை என்னால் சகிச்சுக்க முடியாது. அவளாலே ஆயிரம் லாபமாக இருக்கட்டும். உண்மையாக நான் இவருக்கு வேணுமானால் 'உன்னைவிட வேறு எதுவும் எனக்கு ஒசத்தியில்லை' — அப்படின்னு அங்கே வந்து சொல்லிட்டு என்னை அவர் அழைச்சிண்டு வரட்டும். அவருக்கு ஒரு லட்சியம் இருக்காப்பலே எனக்கும் ஒண்ணு வேண்டாமா? அதுவரையிலே எனக்கு இங்கே வேலையில்லை'' என்று தீர்மானமாகச் சொல்லி விட்டுப் போனாள் யாமினி.

அத்தியாயம் 52

ஊருக்கு வந்த அன்றே யாமினி தலைவலி என்று படுத்துக்கொண்டவள்தான். இரவெல்லாம் நெஞ்சு வலி என்றும் சொல்லிக் கொண்டிருந்தாள். காலையில் அவளால் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியவில்லை. நல்ல ஜுரம். அத்தை கை வைத்தியமாகவே கஞ்சியும் கஷாயமுமாகச் செய்து கொடுத்தாள்.

ஜுரம் நாலு நாட்கள் வரையில் தணியவே யில்லை. அண்ணா பட்டாபிராமன் அடுத்த ஊரிலிருந்து டாக்டரை அழைத்து வந்து பார்க்கச் சொன்னார். அவருடைய வைத்தியத்தில் ஜுரம் தணிந்ததே தவிர அவளால் பழையபடி எழுந்திருந்து நடமாட முடியவில்லை. ஏதோ திகில் பிடித்தவளைப் போல அவள் சரியாகப் பேசவும் இல்லை, சாப்பாடும் குறைந்து விட்டது.

டாக்டர் ரத்தப் பரிசோதனை யெல்லாம் செய்து பார்த்தார். உடல் சீர் கெட்டதற்கு என்ன காரணம் என்று அவருக்குப் பிடிபடவில்லை. நரம்புத் தளர்ச்சி என்று டானிக்கும் மருந்துமாக எழுதிக் கொடுத்தார்.

''உடல் வியாதியா யிருந்தால் மருந்துக்குக் கட்டுப்படாதா?'' என்றாள் மன்னி, அத்தையிடம்.

''உடல் எப்படி இளைச்சுப் போச்சு, பாரேன். கைவளை நழுவும் பார்த்திருக்கேன்; மோதிரம் கூடவா நழுவி விழுந்துடும்? எங்கேடி மோதிரம்னு கேக்கறேன். முழிக்கிறா... அப்பறம் அது கட்டிலுக்குக் கீழே விழுந்து கிடந்தது. அதைப் பார்த்துட்டுக் கண்ணுலே ஜலம் விடறா. இதை யெல்லாம் என் கண்ணுலே பார்க்கணும்னு ஆண்டவன் என் தலையிலே எழுதி வச்சிருக்கான், பாழும் ஆண்டவன்!'' என்றாள் அத்தை.

யாமினிக்கு மோதிரம் நழுவி விழுந்தது பெரிய அபசகுனமாகப் பட்டது. பாஸ்கரன் திருவனந்தபுரத்தில் முதல் முதல் வாங்கிக் கொடுத்த வைர மோதிரம். பாஸ்கரன் வாங்கிப் போட்டிருந்த ஆபரணங்கள் எல்லாவற்றையும் பார்வதியம்மாளிடம் திருப்பிக் கொடுத்து விட்டு வந்தபோது கூட அவள் அதைக் கையை விட்டுக் கழற்றிக் கொடுக்கவில்லை. அது மட்டும் அவளைச் சேர்ந்தது. அவன் அவளுக்காக வாங்கிக் கொடுத்தது. கல்யாணத்துக்கு முன்பே அவளுக்குக் கிடைத்திருந்த பரிசு. அது ஒன்றுதான் அவளைப் பழைய நினைவுகளோடு இன்னும் இணைத்திருந்தது. ஒரு சிறந்த தூய அன்பின் சின்னம். அது சாகும்வரையில் அவள் கையிலேயே இருக்க வேண்டிய ஒன்று. குழந்தை அரவிந்தன் கூட அவனுடைய அப்பாவைச் சேர்ந்தவன். அவன் மீது அவ

ளுக்கு உரிமை இல்லை. ஆனால் இது அப்படியல்ல. கடைசி மூச்சு உள்ளவரையில் இருக்கக் கூடியது. அது கைவிரலை விட்டு நழுவிக் கீழே விழுந்ததை எண்ணி யாமினி அதைரிய மடைந்தாள். எல்லாமே தன்னை விட்டுப் போய்விடுவதற்கான முன்னறிவிப்புப் போலிருந்தது.

''ஏன் அத்தை, மோதிரம் இந்த மாதிரி நழுவிவிழுப்படாதுதானே?''

''யார் சொன்னா உனக்கு அப்படி? இத்தனை வயசாறது எனக்கு, நான் இதுவரையில் அப்படிக் கேள்விப்பட்டதே யில்லை. அப்படி உனக்கு அபசகுனமா யிருந்தால் அதை எடுத்து நான் காணிக்கையா முடிஞ்சு வச்சுடறேன்! எதை நினைச்சுண்டு நீ வேதனைப் படறயோ, அது பனிபோல நீங்கிப் போகட்டும். எந்தத் தேவிக்கு அதைக் காணிக்கையாச் செலுத்தணும்னு நினைக்கிறியோ, சொல்லிடு!''

அத்தை அந்த மோதிரத்தை எடுத்து மஞ்சள் துணியிலே முடிந்து வைத்தாள். யாமினி கன்னியாகுமரியில் தவம் இருக்கும் அன்னையை நினைத்துக் கண்களை மூடிக் கொண்டு பிரார்த்தனை செய்தாள். ஆனால் அன்று இரவே அவளுக்கு மீண்டும் உடல் நிலை சரியாக இல்லை. அத்தை வந்து தொட்டுப் பார்த்த போது உடம்பிலே சூடு பறந்தது.

குழந்தை வந்து அவளைத் தொட்டுப் பார்த்துவிட்டு, ''அம்மா, அம்மா!'' என்று எழுந்திருக்கச் சொல்லிப் பிடிவாதம் பிடித்து அழுதான்.

* * *

பாஸ்கரன் தன்னுடைய அறையில் இருந்தவாறே கண்ணாடி அடைப்பின் வழியே தான் உருவாக்கிவிட்ட லட்சியத் தொழிற்சாலையைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய லட்சியக் கனவு ஓர் உருப் பெற்று விட்டது. குடிசைத் தொழிலைப் போல் பல சிறு சிறு தொழில்களை இணைத்து இறுதி லட்சியம் நிறைவேறும் வரையில் ஒவ்வொன்றும் தனித் தனியே இயங்கும் வகையில் அவன் செய்து முடித்திருந்தான். அவனுடைய சாதனை பெரிதுதான். பல எலெக்ட்ரானிக் சாதனங்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருந்தான். அதற்கெல்லாம் சர்க்கார் ஆதரவும் உதவியும் கணிசமான அளவுக்குக் கிடைத்துவிட்டன. இனி அதைத் திறமையாக நடத்திக் கொண்டு போனால் போதும்.

ஆனால் பாஸ்கரன் முகத்தில் சோகமே குடிகொண்டிருந்தது. விமான நிலையத்தில் பார்த்த குழந்தையின் முகமும் யாமினியின் முகமும் அவன் கண்ணிலேயே நின்றன. திடீரென்று அவள் எப்படி எங்கே போனாள் என்று தவித்துக் கொண்டிருந்தான். அவள் எங்கே தங்கியிருந்தாள் என்று யாரைக் கேட்டுத் தெரிந்து கொள்வது? அந்தக் குழந்தையின் அழகிய முகத்தை மீண்டும் ஒரு தடவை பார்க்க வேண்டும் என்ற பாசம் அவனைக் குடைந்து கொண்டே யிருந்தது.

ஏதோ தற்செயலாகத்தான் அவனுக்கு மாணிக்கத்தின் நினைவு வந்தது. உடனே மாணிக்கத்தை அழைத்து வரச் சொன்னான். அவனுடைய அண்ணா பட்டாபியும் மன்னியும் அவன் வரவுக்காகத்தான் காத்திருந்தார்கள். ஆனால் மன்னிக்குக் கூட யாமினி இருக்கும் இடம் தெரியாமல் இருந்ததுதான் ஆச்சரியமாய் இருந்தது. சுசீலா என்ற பெயர் மட்டும் மன்னியின் காதில் விழுந்திருந்தது. அந்தப் பெயர்தான் அவனுக்கும் தெரியுமே!

''ஏம்பா மாணிக்கம், அந்தச் சுசீலா வீடு எங்கே இருக்கு?'' என்று தனக்குத் தெரிந்தது போல் கேட்டு வைத்தான் பாஸ்கரன், மாணிக்கம் வந்ததும்.

''நந்தனம் எக்ஸ்டென்ஷனிலே!''

''அங்கே போய் நம்ம அம்மா இருக்காங்களான்னு பார்த்துட்டு போன் நம்பரையும் கேட்டுண்டு வா!''

பாஸ்கரன் ரொம்பச் சாமர்த்தியமாகத்தான் பேசினான். இந்தச் சாமர்த்தியம் இன்றைக்கு இருந்து என்ன பிரயோசனம்? யாமினி ஊருக்குப் போய் விட்டாள் என்பது தெரிந்ததும் அவனுக்குத் தாங்க முடியாத வருத்தம் ஏற்பட்டது. அஜிதாவிடம் எரிச்சலும் கோபமும் உண்டாயின. அவள் மட்டும் குறுக்கிடாமல் போயிருந்தால் அவன் மகனை நழுவ விட்டிருக்கவே மாட்டான்.

அந்த அஜிதாவின் போக்கில் திடீரென்று ஒரு மாறுதல் ஏற்பட்டிருந்ததை அவன் தெளிவாகக் கண்டான். ஒரு வாரம் கழிந்து அவள் வந்திருந்தாள்.

''என்ன பாஸ்கர் உன் மனைவி இருக்கிற இடம் தெரிஞ்சுதா?''

''தெரிஞ்சு என்ன பண்ணறது? அவள் ஊருக்குப் போயிட்டாளாம்!''

''ச்சுச்சுச்சு! பாவம்! குழந்தையைப் பார்க்காதது உனக்குப் பெரிய ஏமாற்றம்தான் இல்லையா? அவ்வளவு கஷ்டப்பட்டியே அன்னிக்கு!''

''என்ன செய்யறது?''

''குழந்தை நினைவாகவே இருக்கு. இல்லே?''

''ஏதோ இருக்கு!'' என்று சொல்லிவிட்டு அசட்டுச் சிரிப்பு சிரித்தான்.

''அது போகட்டும். நீ எனக்கு என்ன செய்யப் போறே?''

''உனக்கு என்ன?''

''அதாவது தொழிற்சாலை சம்பந்தமாகத்தான் கேக்கறேன். வேர் ஆம் ஐ இன் திஸ்?''

''அப்படின்னு?'' என்று உண்மையாகவே திகைத்தான் பாஸ்கரன்.

''அப்படிக் கேட்பேன்னு நினைச்சேன் நானும். உண்மையிலேயே நான் கேக்கறது புரியல்லேன்னு நிதானமா யோசனை பண்ணிப் பார்; தெரியும். ஆமாம்! இது ரொம்பச் சாதாரணக் கேள்வி! நான் அடுத்த வாரம் வந்து பார்க்கிறேன்!'' என்று சொல்லிவிட்டு எழுந்து போனாள் அஜிதா.

விமானத்தில் வந்தபோது மொரீஷஸ் தீவு மங்கை இந்த அஜிதாவைப் பற்றிச் சொன்னதெல்லாம் நினைவுக்கு வந்தது. 'சில லட்சங்களுக்காக இவள் புருஷனையே காலை வாரிவிட்டு விட்டு வந்தவள்' என்று அஜிதாவின் குணத்தைக் குறிப்பிட்டு எச்சரித்திருந்தாள் அவள். அப்பொழுது அதைக் கேட்கவே பிடிக்கவில்லை பாஸ்கரனுக்கு. இப்பொழுதுதான் அவள் சொன்னதில் உள்ள பொருள் உறைக்கத் தொடங்கியது. இத்தனை பணத்தாசையா இவளுக்கு?

'அடுத்த வாரம் வந்து பார்க்கிறேன் என்றால் என்ன அர்த்தம்? நடுவில் சந்திக்க வேண்டாம் என்பதுதானே?' அஜிதாவின் எண்ணம் தெளிவாயிற்று.

அண்ணா ஊருக்குப் போய் ஒரு வாரம் கழித்து நடந்தது இது. இதற்கெல்லாம் அண்ணாதான் காரணம் என்று அவனுக்குத் தெரியாது.

''நீ பணம் போட்டிருக்கேன்னு சொல்றியே... அவனுக்கு ஆண் வாரிசு இருக்கும்மா. அவன் வந்து 'உன் பணமா? ஏது பணம்'னு நாளைக்குக் கேட்டால் என்ன செய்வே?'' என்று அவளைக் கேட்டுவிட்டுப் போய்விட்டார்.

அதற்கு ஏற்றாற்போல் பாஸ்கரன் குழந்தை நினைவாகவே இருந்ததும் சேர்ந்து கொண்டு விட்டது அஜிதாவுக்கு. மறுவாரம் சொன்னது போல வந்தாள்.

''என்ன பாஸ்கர், யோசிச்சுப் பார்த்தியா? புரிஞ்சுதா?''

''உன் எண்ணம் எனக்கு இன்னும் புரியல்லே. எப்பவுமே நீ எனக்குப் புதிர்தான். ஏதாயிருந்தாலும் தெளிவாகச் சொல். புரிஞ்சுக்கிறேன். மொரீஷஸ் பெண் சொன்னபோதுகூட எனக்குப் புரியல்லே. இப்பப் புரிஞ்சுக்கிறேன்!''

''இப்ப இந்தத் தொழிற்சாலையிலே போட்டிருக்கிறதெல்லாம் பெரும்பாலும் என் பணம். சரிதானே நான் சொல்றது?''

''சரிதான்.''

''அது அவ்வளவையும் என் ஷேராக மாத்திக் கொடுத்திடணும். அவ்வளவுதான். நான் கேக்கறதிலே ஒண்ணும் தப்பு இல்லையே!''

பாஸ்கரன் அப்படியே இடிந்துபோய் உட்கார்ந்திருந்தான். பிறகு ''அவ்வளவுதானே? அதாவது நீ எஜமானியா இருக்கணும்னு நினைக்கிறே. இரு. நான் மாத்திக் கொடுத்திடறேன். ஆனால் அப்புறம் எனக்கு இங்கே வேலை இல்லை'' என்றான்.

அஜிதா சிரித்தாள்.

''என்ன சிரிக்கிறே?''

''நீயே இல்லேன்னு வச்சுக்கோ. அப்ப என்ன ஆகும்னு நினைக்கிறே நீ? அதை நினைச்சுத்தான் சிரிச்சேன்!''

''ஓ!''

* * *

பாஸ்கரன் பழைய பாஸ்கரனாகவே இருக்க விரும்பினான். யாமினியின் உள்ளத்தைக் கவர்ந்த கணவனாக, எல்லாவற்றிலுமே பழைய பாஸ்கரனாக இருக்க விரும்பினான்.


அத்தை காணிக்கை முடிந்து வைத்த மூன்றாம் நாள் வாசலில் வண்டிச் சத்தம் கேட்டது.

அத்தை யாமினியிடம் வந்து, ''தேவி உன் காணிக்கையை ஏற்றுக்கொண்டு விட்டா — தெரிஞ்சுக்கோ!'' என்றாள்.

யாமினியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளித்தது.

முற்றும்





விளையாட்டு அரங்கங்களுள் தன்னிகரற்று விளங்கப் போகிறது நியூஆர்லியன்ஸ் நகரில் உருவாகி வரும் ''ஸுபர்டோம்''.

1970ல் கட்ட ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸ்டேடியம் 1973ல் முடிவுறும். பேஸ்பால், கால்பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம் போன்றவை மட்டுமின்றிப் பனிக் கட்டியில் சறுக்கி விளையாடுவதற்கும் ஏற்ற வகையில் அமைக்கப்படுகிறது. இதற்காகச் சற்று நேரத்தில் மைதானத்தில் செயற்கையான முறையில் ஐஸ் தளம் உருவாகச் செய்யலாம்.

மைதானத்துக்கு மேலே மையத்தில் எட்டு டெலிவிஷன் திரைகள் உண்டு. இவை ஒவ்வொன்றும் 50 அடி அகலம், 38 அடி உயரம்! விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அரங்கில் எட்டுத் திசைகளிலும் உள்ள ரசிகர்கள் டெலிவிஷன் திரையிலும் உடனுக்குடன், விநாடிப் போதும் தாமதமின்றி அதே விளையாட்டினைக் காணலாம்!

இதில் விளையாட்டுப் பந்தயங்களில் ஈடுபடுவோருக்குச் சூரிய ஒளியில் கண் கூசுகிறது என்பதற்கு இடமேயில்லை. ஸ்டேடியத்தின் மீது கூரை உண்டு. வெளிப்புற வெளிச்சம் உள்ளே வராது. நாடக அரங்கில் விசேஷ ஒளி அமைப்பு ஏற்படுத்துவது போல், பலவிதமான விளையாட்டுக்கள், பனிக் கட்டியில் சறுக்கி நடனமாடுதல் போன்றவற்றுக்குத் தனித் தனியே, அதற்கு ஏற்ற பிரத்தியேக ஒளி அமைப்பு உண்டு.

அனுமதிச் சீட்டுக்களின் கிரயத்தை மிகவும் மலிவாக்கி அதிகக் கூட்டத்தை ஈர்ப்பதன் மூலம் லாபம் அடைய இந்த அரங்கத்தின் நிர்வாகிகள் யோசித்து வருகின்றனர். உதாரணமாக ஒரு டாலர் டிக்கெட்டில் அறுபதாயிரம் பேர்களை அனுமதித்தாலும் இங்கு இடவசதி உண்டு. இது, ஆறு டாலர் டிக்கெட்டில் பத்தாயிரம் பேர்களை அனுமதிப்பதைக் காட்டிலும் சிறந்தது எனக் கருதுகின்றனர்.

* * *

ஏரியில் ஒரு விமான நிலையம்!



2050ஆம் ஆண்டில் சிகாகோ நகர விமான நிலையம், அன்று நிலவப் போகிற விமானப் போக்குவரத்தைச் சமாளிக்க முடியாமல் திண்டாடும். எனவே, சிகாகோ நகருக்குப் புதிய விமான நிலையம் அமைக்கும் திட்டத்தை இன்றே தொடங்கி விட்டனர்.

ஏராளமான நிலப் பரப்பு விமான நிலையம் நிறுவ அவசியம். நகருக்கு அருகிலும் அது இருக்க வேண்டும். ஆனால் இன்று சிகாகோ நகரிலிருந்து வெகு தொலைவில்தான் விமான நிலையத்துக்கான பெருமளவு நிலப்பரப்பு கிடைக்கும். எனவே, பொறி இயல் நிபுணர்கள் யோசித்து சிகாகோ நகருக்கு அருகில் உள்ள மாபெரும் ஏரியில் விமான நிலையத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளனர்!


மிசிகன் ஏரியில் நாற்பது கோடி கன கஜம் மண்ணையும் குப்பையையும் கொட்டிச் செயற்கைத் தீவு உண்டாக்கி அதில் விமான நிலையத்தை அமைக்கத் தீர்மானித்துள்ளனர்.


சிகாகோ நகரிலிருந்து பத்து மைல் தூரத்தில் இந்த விமான நிலையம் இருக்கும். விமான நிலையத்துக்குப் பிரயாணிகளைக் கொண்டு செல்ல வேண்டுமே? இதற்காக ஏரியின் அடிவாரத்தில் குகைப் பாதை ஏற்படுத்தப் போகிறார்கள். கார்கள் தவிர இதரபோக்குவரத்துச் சாதனங்களும் ஏரியின் அடியில் இயங்கும்.

ஓராண்டில் இருபது கோடி விமானப் பிரயாணிகள் இந்நிலையத்தைப் பயன்படுத்தலாம். இப்போதுள்ள சிகாகோ விமான நிலையத்தை ஆண்டொன்றுக்கு மூன்று கோடி பயணிகள் உபயோகிக்கின்றனர்.

புதிய விமான நிலையத்தில் இரு உணவு விடுதிகளும் மூன்று ஹோட்டல்களும் ஒரு நீச்சல் குளமும் இருக்கும்.

எல்லாவற்றையும்விடப் பெரிய சௌகரியம், விமானங்கள் இறங்கும்போதும் மேலே ஏறும் போதும் போடும் நாராச ஓசையிலிருந்து சிகாகோ நகர மக்கள் விடுதலை பெறுவர்.





ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

70

அன்பை உபாசிப்பவன், சத்தியமே பரம் பொருள் வடிவம் என்று கருதுகிற ஒருவன், நாளைக்கென்று பொருளைச் சேர்க்க மாட்டான். பகவானை நம்பிப் பிழைப்பதானால் நாளையைப் பற்றி நாம் ஏன் சந்தேகப்பட வேண்டும். அன்றாடம் வேண்டியதற்கு மேல் ஆண்டவனுடைய நியதியை மீறிப் பொருள் சேர்த்து வைக்கும் பழக்கத்தினால் உலகத்தில் ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்திக் கொண்டு சங்கடங்களை நாமே உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம். அளவுக்கு மிஞ்சிய பொருள் பணக்காரர்களிடம் சேர்ந்து அவர்களும் அந்தப் பொருளைச் சரிவரப் பராமரிக்காமல் வீணாக்கி வருகிறார்கள். கோடிக் கணக்கில் மக்கள் பசியிலும், குளிரில் உடை யில்லாமலும் தவிக்கிறார்கள். அவனவனுக்கு வேண்டியதை மட்டும் அவனவன் வைத்துக்கொண்டு வாழ்ந்தால் யாருமே கஷ்டப்படமாட்டார்கள். எல்லாரும் திருப்தியுடன் வாழலாம். இப்போது என்ன நிலைமை? ஏழைகள் மட்டுமல்ல; பணக்காரர்களுக்கும் திருப்தி கிடையாது. ஏழைகள் பணக்காரர்களாக வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். லட்சாதிபதி கோடீசுவரனாக வேண்டும் என்று விரும்புகிறான். உணவுக்கு வேண்டியது இருப்பினும் அது போதாது என்று மக்கள் வருத்தப்படுகிறார்கள். இது உண்மையாயினும் உணவுக்கு வேண்டிய அளவாகிலும் எல்லாருக்கும் ஏற்பாடு செய்ய வேண்டியது நியாயம். அனைவரும் திருப்தியாக இருக்க வேண்டுமானால் பணக்காரர்கள் முதலில் ஆரம்பிக்க வேண்டும். தங்களுடைய ஆசையை அடக்கி லோப குணம் மிதமிஞ்சிச் செல்லாமல் பணக்காரர்கள் நடந்து கொண்டார்களானால் ஏழைகளுக்குப் பசியின்றி உணவு கிடைக்கும். திருப்தியாக வாழவும் பயில்வார்கள்.

பொருள் ஈட்டலை விட்டு விட்டுச் சரியான படி துறவு விரதத்தைக் காக்க வேண்டுமானால் மனிதன் பறவைகளைப்போல் வாழவேண்டும். தலைமேல் கூரை யில்லாமலும், குளிரைக் காக்கும் ஆடைகள் இல்லாமலும் நாளைக்கென்று உணவு சேர்த்து வைத்துக் கொள்ளாமலும் பறவைகளைப் போல் பிழைக்க வேண்டும். அன்றைக்கு வேண்டிய உணவு ஆண்டவன் தருவான் என்று இருக்க வேண்டும். இப்படிச் சாதாரண மக்கள் இருக்க முடியாது.

நாம் செய்யக்கூடியது என்னவென்றால், இந்தக் குறிக்கோளை மறவாமல் நினைவில் வைத்துக் கொண்டு அளவுக்கு மிஞ்சிய பொருளைச் சேர்க்காமலும் தினசரி ஓரளவேனும் குறைத்துக் கொள்ள முயற்சி செய்தும் வாழ வேண்டும்.

பண்பாடு அடைந்த மனிதன் 'இது வேண்டும், அது வேண்டும்' என்று தன்னுடைய வாழ்க்கையை மேலும் மேலும் சிக்கலாக்கிக் கொள்ள மாட்டான். தானாகவே யோசித்து வேண்டாததை நீக்கிக் கொண்டு வாழ்க்கையை எளிமையாக்கிக் கொள்வான். தேவைகளின் கணக்கை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்துக் கொண்டு எளிய வாழ்க்கை வாழ்ந்தால் உண்மையான சுகமும் சந்தோஷமும் அடைவோம். பிறருக்குப் பணி செய்ய அவகாசமும் பெறுவோம். ஒவ்வொருவனும் முயற்சி செய்தால் தன் தேவைகளைக் குறைத்துக் கொள்ள முடியும். அப்படிக் குறைத்துக் கொண்டால்தான் சுகம், ஆரோக்கியம், சாந்தி இவற்றைப் பெறுவோம்.

ஆன்மாவானது உடலை ஒரு பாரமாகச் சுமந்து நிற்கிறது. ஆசைகளை அதிகப்படுத்திக் கொண்டோமானால் இந்தப் பாரம் வரவர அதிகமாகிறது. ஆசைகளைக் குறைத்துக் கொண்டாலே தான் சரீர பாரமும் குறையும். சம்சாரச் சுழலினின்று விடுபடுவோம். பரம்பொருளின் தன்மை பெற்றிருக்கும் ஆன்மாவுக்குச் சரீரம் என்கிற தடை என்னத்துக்கு? அது பறவையை அடைத்து வைக்கும் கூண்டைப் போலவேயாகும். அந்தக் கூண்டைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பாபங்களும் செய்கிறோம். உண்மையில் உயிரும் சரீரமும் கூடி யிருக்கும் வரையில் அந்தச் சரீரத்தைச் சேவைக்கு மட்டும் பயன்படுத்தி வாழவேண்டும். மனித வாழ்க்கைக்கு வேண்டியது உணவல்ல, சேவை. அந்தச் சேவைக்காகவே உணவு உண்பதும் நீர் அருந்துவதும் தூங்குவதும் விழிப்பதும். இகத்தில் சுகமும் பிறகு மோட்சமும் தரும்.

சொத்துப் படைத்தவர்கள் எல்லாம் நான் சொல்லி யிருப்பதை ஆராய வேண்டும். பொருளைப் பற்றிய ஆசிரம விரதமானது சொத்தைப் பற்றி மட்டுமல்ல; மூளையில் சேர்த்துவைக்கும் அறிவுக்கும் பொருந்தும். உபயோகமற்ற விஷயங்களை எல்லாம் அறிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படலாகாது. அளவுக்கு மிஞ்சிய கல்வி ஆசையும் நம்முடைய துறவு விரதத்துக்கு மாறுபட்டது. பகவானை நோக்கிச் செல்லும் அறிவே அறிவு. அவனை விட்டு வேறு

வழியில் செல்லும் கல்வி அறிவு ஆகாது. நமக்கு உதவாது. அது நம்முடைய முன்னேற்றத்துக்குத் தடையேயாகும். கீதை பதின்மூன்றாவது அத்தியாயத்தைப் பாருங்கள். எது உண்மையான ஞானம் என்று அதில் சரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அமானித்துவம், அதாவது அடக்கம், அதம்பித்வம் அதாவது ஆடம்பரமின்மை, அஹிம்ஸை, பொறுமை, சீலம், ஆசார்ய உபாசனம், சுத்தம், உறுதியான மனம், புலனடக்கம், வைராக்கியம், ஆணவமின்மை பிறப்பு, இறப்பு, வயோதிகம், நோய் இவற்றிலுள்ள துன்பத்தை உணர்தல், மக்கள் மனைவி வீடு இவற்றிலும், பொருள்களிலும் பற்றில்லாதிருத்தல் — சித்தத்தில் அமைதி. வேண்டியதையும் வேண்டாததையும் ஒரேவிதமாக அனுபவித்தல், பகவானிடத்தில் பக்தி செலுத்துதல், ஜனக் கூட்டத்தை விரும்பாமல் தனிப்பட்ட இடத்தில் வசிக்க மனம் செல்லுதல், ஆன்ம ஞானமே பெரிதாக மதித்து மெய்ப் பொருளைக் காணுதல்—இவை உண்மை அறிவு. மற்றவை யெல்லாம் அறியாமை.

இப்படிக் கீதையில் உபதேசித்திருக்கிறது. நாம் கல்வி, கல்வி என்று இப்போது தேடி அலையும் பல விஷயங்களில் துன்பமே ஒழிய நன்மை யொன்றுமில்லை. அவை சுகம் தரமாட்டா. இங்குமங்கும் மனத்தை அலையச் செய்யும். ஏன், மூளைக் கோளாறும் உண்டாக்கும். பல பாபங்களிலும் மனிதனைச் செலுத்தும்.

இப்படி யெல்லாம் நான் சொல்வது சோம்பல் பிரசாரம் அல்ல. சும்மா இருக்க வேண்டுமென்பது என்னுடைய நோக்கமல்ல. ஒவ்வொரு விநாடியையும் சுறுசுறுப்பாகப் பயன்படுத்தத்தான் வேண்டும். ஆனால் சாத்விக முறையில் பயன்படுத்த வேண்டும்.

கதை சொல்லும் பொம்மை !

தாய்மார்கள் கதைகள் சொல்வதை ஆனந்தமாகக் கேட்டுக்கொண்டே குழந்தைகள் தூங்கத் தொடங்குவார்கள். சில சமயங்களில் தாய்மார்களுக்கு அதிக வேலை இருக்கும்; குழந்தைகளுக்குக் கதை சொல்ல நேரம் இருக்காது. இவ்விதக் குறையை அகற்றுவதற்காக, ''கதை சொல்லும் பொம்மை''யை ஜெர்மன் நிபுணர்கள் தயாரித்திருக்கிறார்கள்.

சமீபத்தில் ஜெர்மனியில் ஹாம்பர்க் நகரில் நடந்த சர்வ தேசப் பொம்மைக் காட்சியில் ''கதை சொல்லும் பொம்மை'' அனைவரது கவனத்தையும் கவர்ந்தது.

இந்தப் பொம்மைக்குள் சிறு ஒலிபரப்புக் கருவி இருக்கிறது. காசெட் எனப்படும் கையடக்க ஒலிப்பதிவு நாடாக்களை இதனுள் செலுத்தி இயக்கினால், பொம்மை ஒரு சுவையான கதையைச் சொல்லும். சுமார் 15 நிமிட நேரத்திற்கு இப் பொம்மை கதை சொல்லும். குழந்தைகள் ஆர்வத்துடன் கேட்கக்கூடிய கதைகள் அடங்கிய ஏழு நாடாக்கள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன.

(யூ. பி. எஸ்.)



சத்தியத்தை அனுபவிச் செல்ல வேண்டும். சேவை செய்வதில் வாழ்நாளைச் செலுத்த வேண்டும். சும்மா இருக்கலாகாது. தீமையை விலக்கி, நன்மை எது என்று அறிந்து அதில் ஈடுபட வேண்டும்.

(எரவாடா சிறையிலிருந்து எழுதியது.)

அனைத்திலும் உன் உரிமையைத் துறந்து விட்டு அவற்றை ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்து விட்டு வாழ்க்கை நடத்துவாய். அவ்வாறு துறப்பதனாலேயே உயிருடன் வாழ்வதற்கு உரிமை ஏற்படுகிறது. மற்றவர்கள் தங்கள் தங்கள் கடமையைச் செய்த பின் நானும் அந்தப் பணியில் இறங்குவேன் என்று சொல்ல வேண்டாம். மற்றவர்கள் செய்தால் செய்யட்டும், அல்லது செய்யாமல் இருக்கட்டும், உன் பணியை முதலில் நீ செய். எஞ்சியதை ஆண்டவனுக்கு விட்டு விடு.

(ஹரிஜன், 6-3-37)

இன்றைக்கு வேண்டியதை மட்டும் நாம் பார்த்துக் கொண்டோமானால் நாளை விஷயத்தைப் பற்றிக் கவலை இல்லை, பகவான் பார்த்துக் கொள்வான்.

(யங் இந்தியா, 13-10-21)

பொருள் இருந்தால்தான் உலகத்துக்குப் பணி செய்ய முடியும் என்று எண்ண வேண்டாம். ஏசு கிறிஸ்து, நபி முகம்மது, புத்தர், நானக், கபீர், சைதன்யர், சங்கரர், தயானந்தர், ராமகிருஷ்ணர் முதலியோர் உலகத்துக்குப் பணி செய்தார்கள் அல்லவா? எவ்வளவு பெரிய அளவில் செய்திருக்கிறார்கள்! லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்கிறார்கள். இவர்கள் தோன்றியதே பெரும் செல்வம் என்று உலகம் கருதுகிறது. இவர்கள் அனைவரும் செல்வத்தைத் துறந்து வறுமையையே நன்மையாகக் கருதி வாழ்ந்தார்கள். கட்டாயத்தில் அல்ல; சுயமாகவே அப்படிச் செய்தார்கள்.

கோடிக்கணக்கானவர்களுக்கு இல்லாததை நாமாகவே வேண்டாம் என்று துறந்து விடவேண்டும். இது தான் நியாயமும் தர்மமும். ஆனால் அப்படித் துறப்பது எளிதல்ல. அதற்கு வேண்டிய மன உறுதி இயல் என்று ஒருவனுக்கு வந்து விடாது. பயிற்சி செய்து கொள்ள வேண்டும். முதலாவதாக உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். 'மற்றவர்கள் அனுபவிக்காத சௌகரியங்கள் எனக்கு என்னத்திற்காக? வேண்டாம்' என்று மனத்தைப் பண்படுத்திக் கொள்ள வேண்டும். அது முடிந்த பின் கூடிய துரிதத்துடன் நம்முடைய வாழ்க்கையை அந்த சங்கற்பத்தை அனுசரித்து வரவர மாற்றிக்கொள்ள வேண்டும்.

(யங் இந்தியா, 24-6-26)



இருபத்துமூன்றும் அத்தியாயம்

படைகள் வந்தன!

தஞ்சைமா நகரம் அன்று முழுதும் ஒரே அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. புயலையும் மழையையும் அவற்றினால் நேர்ந்த சேதங்களையும் மக்கள் அடியோடு மறந்து விட்டார்கள். ''ஈழங் கொண்ட வீராதிவீரரும் சோழ நாட்டு மக்களின் இதயங் கொண்ட இளவரசருமான பொன்னியின் செல்வர் நாகைப்பட்டினத்தில் புயல் அடித்த அன்று வெளிப்பட்டு விட்டார்; பின்னர் தஞ்சையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்; அவரைச் சிங்காதனத்தில் ஏற்றி வைத்துச் சக்கரவர்த்தியாக முடிசூட்டும் நோக்கத்துடன் பெருந் திரளான மக்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள்'' என்னும் செய்திகள், முதலில் வதந்திகளாகக் காற்று வாக்கில் வந்தன. பின்னர் நேரில் இளவரசரை நாகைப்பட்டினத்தில் பார்த்தவர்களே வந்து சொன்னார்கள். இந்தச் செய்தி காரணமாக இரண்டு தினங்களுக்கு முன் வெளியிலே அடித்த புயலைப் போலவே தஞ்சை நகர மாந்தரின் உள்ளத்தில் உத்வேகப் புயல் அடிக்கத் தொடங்கியது. தஞ்சை நகரம் என்றும் கண்டறியாத அளவில் இளவரசருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று மக்கள் தீர்மானம் செய்தார்கள். கோட்டைக்கு வெளியேயிருந்த புற நகரத்தின் வீதிகளை அலங்கரிக்கத் தொடங்கினார்கள். கூட்டம் கூட்டமாகத் தெருக்களிலே நின்று பேசலானார்கள். மேள தாளங்கள், தாரை தப்பட்டைகள் முதலிய வாத்தியங்கள் சேகரிக்கப்பட்டன. ஆடல் பாடல்களில் தேர்ந்தவர்கள் இந்த விசேஷ சந்தர்ப்பத்தில் தங்கள் ஆற்றல்களையெல்லாம் காட்டிவிடுவது என்று எண்ணி ஆயத்தம் செய்யலானார்கள். மாதர்களும் இளஞ் சிறார்களும் தங்களை அலங்கரித்துக் கொள்ளும் விதங்களைப் பற்றிச் சிந்தித்தார்கள். மற்றும் பல அவசரக்காரர்கள் இளவரசரை வரவேற்பதில் தாங்கள் முந்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன், தஞ்சையிலிருந்து நாலா திசைகளிலும் சென்ற சாலைகளில் கொஞ்ச தூரம் முன்னதாகச் சென்று காத்திருக்கத் தொடங்கினார்கள். அப்படி முன்னதாகப் புறப்பட்டவர்களை வேறு சிலர் பார்த்துப் பரிகசித்தார்கள்.

புறநகரம் இந்தப் பாடு பட்டதென்றால், கோட்டைக்குள்ளேயும் ஏதோ முக்கியமான சம்பவங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன என்பதற்கு விரைவிலேயே அறிகுறிகள் தென்பட்டன.

காலையில் வழக்கம்போல் கோட்டை வாசல் திறந்தது, கறிகாய், தயிர் மோர் விற்பவர்களும் அரண்மனையில் அலுவல்களுக்குச் செல்வோரும் வழக்கம்போல் கோட்டைக்குள் சென்று கொண்டிருந்தார்கள். புயல் மழையினால் ஏற்பட்ட சேதங்களைப்பற்றி முறையிட்டுக்கொள்ள விரும்பியவர்கள் இன்று ஒருசிலர்தான் வந்தார்கள். அவர்களும் கோட்டைக்



குள் சென்றார்கள். வழக்கம் போல் வேளைக்காரப்படையும் கோட்டைக்குள் பிரவேசித்தது.

பின்னர், கோட்டை வாசற் கதவுகள் எல்லாம் சடபடவென்று சாத்தப்பட்டன. பெரிய பெரிய இரும்புத் தாள்களைக் கொண்டு கதவுகளை இறுக்கும் சத்தமும் பூட்டுக்களை மாட்டிப் பூட்டும் சத்தமும் கேட்கத் தொடங்கின. பிற்பாடு வந்தவர்கள் காவலர்களால் தடுத்து நிறுத்தப்பட்டார்கள். முற்பகல் நேரத்தில் இம்மாதிரி கோட்டைக் கதவுகளைச் சாத்தித் தாளிடும் காரணம் என்னவென்று ஜனங்கள் பேச ஆரம்பித்த சமயத்தில் இன்னோர் அதிசயம் நடந்தது. கோட்டையைச் சுற்றியிருந்த அகழியைக் கடப்பதற்கு ஏற்பட்ட பாலமும் தூக்கப்பட்டது. அதற்குப் பிறகு யாரும் கோட்டை வாசலை நெருங்குவதற்கே முடியாமல் போய்விட்டது.



கோட்டையின் பிரதான வாசலாகிய வடக்கு வாசலுக்குச் சமீபமாக இருந்தவர்கள் மேற்கு வாசலையும் தெற்கு வாசலையும் பற்றி விசாரித்தார்கள். அந்த வாசல்களும் வடக்கு வாசலைப் போலவே சாத்திப் பூட்டப்பட்டன என்றும், பாலங்கள் தூக்கிவிடப்பட்டன என்றும் அறிந்ததும் மிக்க வியப்படைந்தார்கள்.

''இது என்ன? யுத்தம் ஒன்றும் நடக்கவில்லையே? பகைவர்களின் சைன்யங்கள் படையெடுத்து வருவதாகத் தெரியவில்லையே? அப்படிப் படையெடுத்து வருவதற்கு ஆற்றல் வாய்ந்த பகைவர்கள் வடக்கே, தெற்கே, மேற்கே, கிழக்கே—எங்கும் சமீபப் பிரதேசத்தில் இல்லையே? அப்படி ஒருவேளை வடக்கே இரட்டை மண்டலத்திலிருந்து பகைவர்கள் திடீர் பாய்ச்சலில் வந்து விடுவதாக இருந்தாலும் கொள்ளிடத்தையும் காவேரியையும் மற்றுமுள்ள நதிகளையும் தாண்டி இப்போது எப்படி வர முடியும்? அந்த மாநதிகளில் வெள்ளம் பூரணப் பிரவாகமாக வல்லவா போய்க் கொண்டிருக்கிறது?'' — இவ்விதமெல்லாம் தஞ்சைக் கோட்டையின்புறநகரத்தில் வசித்த ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். ஒரு



வேளை பொன்னியின் செல்வரைக் கோட்டைக்குள்ளே பிரவேசியாமல் தடுப்பதற்காகவே இந்த ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்படுகின்றனவோ என்று சிலர் கேள்விகளைப் போட்டுக் கொண்டு, ''அப்படித்தான் இருக்க வேண்டும்'' என்று மறுமொழி கூறிக் கொண்டார்கள். இந்த வதந்தி பரவப் பரவ நகர மாந்தரின் உத்வேகம் அதிகமாயிற்று. ''விஜயாலய சோழரின் வம்சத்தில் வழி வழியாக வந்த இளவரசரைக் கோட்டைக்குள் வராமல் தடுப்பதற்கு இந்தப் பழுவேட்டரையர்கள் யார்? அப்படிப் பழுவேட்டரையர்கள் உண்மையில் முயல்வதாயிருந்தால், கோட்டை மதில்களையே இடித்துத் தகர்த்துவிட வேண்டியதுதான்!'' என்ற தோரணையில் பேசுவோரும் இருந்தனர்.

வதந்தி என்னும் மாயா பூதம் எப்படிக் கிளம்புகிறது, எப்படி அவ்வளவு விரைவில் பிரயாணம் செய்கிறது என்பது யாராலும் கண்டுபிடிக்க முடியாத மர்மமான காரியம்தான். திடீரென்று இன்னொரு பயங்கரமான வதந்தி மக்களிடையே பரவத் தொடங்கியது. வெகு காலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த சுந்தர சோழ சக்கரவர்த்தியின் மரணம் நேர்ந்து விட்டது என்பதுதான் அவ்வதந்தி. ''சக்கரவர்த்தி காலமாகி விட்டாராமே? அது உண்மையா?'' என்று முதலில் கேட்டார்கள். அன்று அதிகாலையில் வால் நட்சத்திரம் ஒரு நிமிடம் ஜோதி மயமாக ஒளிவீசிவிட்டுப் பூமியை நோக்கி விழுந்து மறைந்ததைப் பார்த்த சிலர், அதையே அத்தாட்சியாகக் கொண்டு, சுந்தர சோழர் காலமானதை ஊர்ஜிதம் செய்தார்கள். ''இது உண்மையாயின் மேலே என்ன நடக்கப் போகிறது?'' என்பது பற்றிக் கவலையுடன் விவாதிக்கப் பட்டதும் இயல்பே யல்லவா? இராஜ்ய உரிமை சம்பந்தமாகத் தகராறுகள் ஏற்படுமா? சிற்றரசர்கள் இரு கட்சிகளாகப் பிரிந்து நின்று சண்டை போடுவார்களா? இத்தகைய உள்நாட்டுச் சச்சரவுகள் காரணமாகச் சோழ சாம்ராஜ்யமே சின்னா பின்னமாகி விடுமா? நூறு ஆண்டுகளாகத் தழைத்து ஓங்கி வளர்ந்து வந்த சாம்ராஜ்யத்தில் மீண்டும் பகைவர்களின் படைகள் உட்புகுமா?

இவ்விதமெல்லாம் ஜனங்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே ''அதோ படை வருகிறது!'' என்ற கூக்குரல் ஒன்று எழுந்தது. பலரும் அங்குமிங்கும் ஓடிச் சென்று பார்த்தார்கள். உயர்ந்த கட்டடங்களின் மீதும் உயரமான மரங்களின் மீதும் ஏறிப் பார்த்தார்கள். அவ்வாறு பார்த்தவர்கள் கண்ட காட்சி ஒரேயடியாக வியப்பையும் திகைப்பையும் அளிப்பதாக இருந்தது.

தஞ்சையிலிருந்து மேற்கேயும் தென் மேற்குத் திசையிலேயும் புறப்பட்டுச் சென்ற மூன்று பெரிய சாலைகள் அக்காலத்தில் இருந்தன. ஒன்று கொடும்பாளூர் வழியாக இராமேசுவரம் போகும் சாலை; மற்றொன்று மதுரை வழியாகத் தென்பாண்டி நாட்டுக்குச்

செல்லும் சாலை. இன்னொன்று உறையூர் வழியாகக் கருவூருக்கும் சேர நாட்டுக்கும் போகும் நீண்டு அகன்ற சாலை.

அன்று பிற்பகலில் மேற்கூறிய மூன்று சாலைகள் வழியாகவும் படைகள் அணி வகுத்து வந்து கொண்டிருந்தன. அவற்றில் முன்னால் வந்த அணிகள் கண்ணுக்குத் தெரிந்தனவே தவிர, பின்னால் அந்த அணி வரிசைகள் எங்கே முடிகின்றன என்பதே தெரியவில்லை. அவ்வாறு அப்படை வீரர்களின் அணிகள் பின்னால் பின்னால் பின்னால் தொடர்ந்து வந்து கொண்டே யிருந்தன.

நல்ல வேளையாக, அப்படைகளின் முன்னணியில் பெரிய புலிக் கொடிகள் பறந்து கொண்டிருந்தபடியால் பகைவர்களின் படைகள் என்று சந்தேகிக்க இடம் ஏற்படவில்லை. சோழ சாம்ராஜ்யத்துச் சைன்யங்கள்தாம் அவை! ஆனால் எதற்காக வருகின்றன? எங்கிருந்து வருகின்றன?

இன்னும் சற்று அருகில் அப்படைகள் நெருங்கி வந்தபோது புலி உருவம் தாங்கிய கொடிகளில் சிறிய அளவில் பதித்திருந்த இலச்சினைகளும் கண்ணில் பட்டன. அவற்றிலிருந்து கொடும்பாளூர்த் தலைமைக்கு உட்பட்ட பராந்தக சோழப் பெரும் படையும், தென்பாண்டிய நாட்டிலிருந்து தெரிந்த கைக்கோளர் பெரும் படையும், ஈழத்துப் போரில் ஈடுபட்டிருந்த அரிஞ்சய சோழப் பெரும் படையும் சேர்ந்து வந்து கொண்டிருந்தனவென்று தெரியவந்தது. இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம் தென் திசைச் சேநாதிபதியான பூதி விக்கிரம கேசரியே மேற்கூறிய படைகளுடன் வந்து கொண்டிருக்கிறார் என்பது தஞ்சை நகர மாந்தர்களுக்குத் தெரிந்து போய்விட்டது. இதிலிருந்து சைன்யங்கள் எதற்காக வருகின்றன என்பதை ஊகித்து உணர்வதும் எளிதாயிற்று. கொடும்பாளூர்ப் பெரிய வேளாரான பூதி விக்கிரம கேசரி; ஈழத்துப் பட்ட சிறிய வேளாரின் திருமகளாகிய வானதியைப் பொன்னியின் செல்வருக்கு மணம் புரிந்து கொடுத்து அவரையே சோழ நாட்டுச் சிம்மாதனத்தில் ஏற்றி வைக்க விரும்புகிறார் என்பது சோழ நாட்டில் எல்லோருக்கும் தெரிந்திருந்த செய்தியேயாகும். மேற்கேயிருந்து இளவரசர் அருள்மொழி வர்மர் பொது ஜனங்களின் ஆரவாரத்துடன் அழைத்து வரப்படுவதும், தெற்கேயிருந்து சேநாதிபதி பூதிவிக்கிரம கேசரி மாபெரும் சைன்யத்துடன் அதே சமயத்தில் தஞ்சையை நோக்கி வருவதும் ஒன்றுக்கொன்று பொருத்தமாய் இருந்தன.

பழுவேட்டரையர்களும் அவர்களுடன் தோழமை பூண்ட சிற்றரசர்களும் மதுராந்தகருக்குப் பட்டம் சூட்டப் பிரயத்தனம் செய்கிறார்கள் என்பதை ஏற்கெனவே மக்கள் அறிந்திருந்தார்கள்.

ஆதலின் அவர்களுடைய அன்புக்கு உகந்த அருள்மொழிச் செல்வரைச் சிங்காதனம் ஏற்றுவதற்காகவே கொடும்பாளூர்ப் பூதிவிக்கிரம கேசரி தமக்கு உட்பட்ட மாபெரும் தென்திசைப்படைகளுடன் வருகிறார் என்று தஞ்சை நகர மக்கள் ஊகித்துக் கொண்டார்கள். இதனால் அவர்களுடைய உற்சாகம் மேலும் கரை புரண்டு ஓடத் தொடங்கியது. சமுத்திரம் போல் பொங்கி வந்த படை வீரர்கள் அனைவரையும் வரவேற்று உபசரிக்கவும் விருந்து அளிக்கவும் அவர்கள் சித்தமானார்கள்.

தஞ்சை நகரத்தில் அக்காலத்தில் பல பெரிய வர்த்தகக் குழுவினர் நடத்திய சத்திரங்கள் இருந்தன. கொடும்பாளூர் மணிக் கிராமத்தார், திருப்புறம்பயம் வலஞ்சியர், உறையூர்த் தர்ம வணிகர், நானா தேசத் திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் ஆகிய வர்த்தகக் குழுவினர் நடத்திய சத்திரங்களில் அன்று பிற்பகலிலிருந்தே ஆயிரக் கணக்கானவர்களுக்கு உணவு அளிக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

இதை அறிந்ததும் நகர மாந்தர்களின் உல்லாசம் அதிகமாகி விட்டது. அங்குமிங்கும் திரிவதும் கூடிக் கூடிப் பேசுவதுமாக இருந்தார்கள். அவர்களில் நூற்றுக்கு நூறு பேரும் அருள்மொழி வர்மரின் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தபடியால், வரப்போகும் சம்பவங்களைப் பற்றிப் பேசுவதில் ஒளிவு மறைவு ஒன்றும் அவசியமாகக் கருதவில்லை. படை வீரர்கள் தஞ்சையை அணுகி வந்து ஆங்காங்கே கூடாரம் அடித்து முகாம் போடத் தொடங்கியதும், நகர மாந்தர்கள் அந்த முகாம்களுக்கே சென்று வீரர்களுடன் சல்லாபம் செய்யத் தொடங்கி விட்டார்கள்.

சூரியன் மறைந்து நன்றாக இருட்டுவதற்குள்ளே தஞ்சை நகரின் மூன்று பக்கங்களையும் சேனா வீரர்கள் சூழ்ந்து கொண்டு விட்டார்கள். நாலாவது பக்கத்தில் வடவாறு தஞ்சைக் கோட்டையை யொட்டிச் சென்றபடியாலும், வடவாற்றில் பெரு வெள்ளம் போய்க் கொண்டிருந்தபடியாலும், அந்தப் பக்கம் வீரர்கள் போவதற்கு வசதியாக

இல்லை அதற்கு அவசியமுமில்லை என்று கருதி விட்டு விட்டார்கள்.

தஞ்சைக் கோட்டையின் பிரதான வடக்கு வாசலை முன்னம் நாம் பார்த்திருக்கிறோம் அல்லவா? முதன்முதலாக, நந்தினி தேவியைத் தொடர்ந்து வந்தியத்தேவன் கோட்டைக்குள் பிரவேசித்த வாசல் அதுவன்றோ? அந்தக் கோட்டை வாசல் கண்ணுக்குத் தெரியும்படியான இடத்தில் சேநாதிபதி பூதி விக்கிரமகேசரியின் ஜாகை அமைக்கப்பட்டது.

இருட்டி ஒரு ஜாமம் ஆன பிறகு சேநாதிபதி கோட்டையைச் சுற்றிப் பார்த்து விட்டுத் தமது ஜாகைக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு முன்னாலேயே அங்கே ஏறக்குறைய நூறு பேர் வந்து சேர்ந்திருந்தார்கள். அவர்களில் வேளிர் படைத் தலைவர்களும், கைக்கோளர் படைத் தலைவர்களும், பாண்டிய மண்டலத்தின் தலைவர்களும், கொங்கு நாட்டுத் தலைவர்களும் இருந்தார்கள். ஈழ நாட்டுப் போரில் வெற்றி கண்ட சோழர் படைத் தலைவர்களும் பலர் இருந்தார்கள். இவர்களைத் தவிர பற்பல வர்த்தக மகா சபைகளின் தலைவர்கள் இருந்தார்கள். முக்கியமாக, 'நானா தேசத் திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர்' என்று உலகமெல்லாம் புகழ்பெற்ற வர்த்தக மண்டலத்தின் தலைவர்கள் வந்திருந்தார்கள். இவர்கள் அயல்நாடுகளுடன் கப்பல் வாணிகம் செய்யும் பெரும் தனவந்தர்கள். வர்த்தகப் பொருள்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களைக் காவல் புரிவதற்காகத் தாங்களே யுத்தக் கப்பல்களை அனுப்பக்கூடிய வசதி வாய்ந்தவர்கள். இவர்களைத் தவிர, தஞ்சாவூர் நகரத்தைச் சேர்ந்த ஐம்பெருங்குழுவினரும் எண்பேர் ஆயத்தின் தலைவர்களும் அழைக்கப்பட்டு அந்தக் கூடாரத்தில் வந்து கூடியிருந்தார்கள்.

இருபத்துநான்காம் அத்தியாயம்

மந்திராலோசனை

ஆரம்பத்தில் வழக்கமான யோக க்ஷேம விசாரணைக்குப் பிறகு கொடும்பாளூர்ப் பெரிய வேளார் அங்கே கூடியிருந்தவர்களைப் பார்த்துக் கூறலுற்றார்:

"நான் யார் யாருக்குத் தூது அனுப்பினேனோ, அவர்களில் ஏறக்குறைய எல்லாரும் வந்து இங்கே கூடியிருக்கிறீர்கள். திருக்கோவலூர் முதுகிழவரான மலையமான் அரசர் மட்டும் வரவில்லை. அவர் வர முடியாததற்குத் தக்க காரணம் இருக்கும் என்றே நினைக்கிறேன். மிகவும் அபாயகரமான காரியம் என்று பலரும் கருதக்கூடிய காரியத்தைப் பற்றி யோசிக்க நாம் இங்கே வந்திருக்கிறோம். சோழ குலத்தாரிடமும் சுந்தர சோழ சக்கரவர்த்தியிடமும் நாம் எல்லாரும் எவ்வளவு பக்தி கொண்டவர்கள் என்பது உலகம் அறிந்தது. அதை எவ்வளவோ தடவை எவ்வளவோ காரியங்களில் நிரூபித்திருக்கிறோம். ஆனாலும் நாம் சக்கரவர்த்தியின் விருப்பத்துக்கு விரோதமாக இங்கே கூடியிருக்கிறோம் என்று நம் எதிரிகள் குற்றம் சாட்டக்கூடும். சக்கரவர்த்தியை எதிர்த்து யுத்தம் செய்யப் படை திரட்டி வந்திருக்கிறோம் என்றுகூட அவர்கள் சொல்லலாம். ஆனால் சக்கரவர்த்தியின் விருப்பம் இன்னதென்பதை நாம் நேர்முகமாகத் தெரிந்து கொள்வதற்குச் சில காலமாக வசதி கிடைக்கவில்லை. சக்கரவர்த்தியை நாம் தனிப்படப் பார்க்க முடிகிறதில்லை. அவருடைய அந்தரங்க விருப்பத்தை அறிய ஒரு நிமிஷம்கூட அவரிடம் தனித்துப் பேச முடிவதில்லை. ஏன் என்பது எல்லாருக்கும் தெரிந்ததே. சக்கரவர்த்தியின் தேக சுகத்தை உத்தேசித்து அவரைத் தஞ்சைக் கோட்டையில் வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. உண்மையில் பழுவேட்டரையர்கள் அவரைச் சிறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் எல்லாரும் என்ன கருதுகிறீர்களோ, தெரியவில்லை...."

சேநாதிபதி இந்த இடத்தில் சிறிது நின்றதும், "ஆம், ஆம்" "அதுதான் உண்மை" "சக்கரவர்த்தியைச் சிறையில்தான் வைத்திருக்கிறார்கள்" என்று அக்கூட்டத்தில் பல குரல்கள் எழுந்தன.

"உங்கள் ஆமோதிப்பிலிருந்து நாம் எல்லோரும் ஒத்த உணர்ச்சியும் ஒரே நோக்கமும் கொண்டவர்கள் என்று ஏற்படுகிறது. விஜயாலயசோழர் காலத்திலிருந்து எத்தனையோ ஆயிரமாயிரம் வீரர்கள் தங்கள் இன்னுயிரைப் போர்க்களத்தில் பலி கொடுத்து இந்தச் சோழ சாம்ராஜ்யம் இந்த மகோந்நத நிலைக்கு வந்திருக்கிறது. சோழநாட்டைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளவே நமக்கெல்லாம் பெருமையாயிருக்கிறது. அப்படிப்பட்ட சோழ குலத்துக்கும் சாம்ராஜ்யத்துக்கும் எவ்விதக் குறைவும்

ஏற்படாமல் பாதுகாப்பதற்கே நாம் இங்கே கூடியிருக்கிறோம். சக்கரவர்த்திக்கு எதிராகச் சதி செய்வதற்கு அல்ல. சக்கரவர்த்தியின் எதிரிகள் அவரை மூன்று வருஷ காலமாகச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறார்கள். அவருக்கு உடல்நிலை சரியாக இல்லை என்று காரணம் சொல்கிறார்கள். தொண்ணூறும் ஆறும் புண் சுமந்த திருமேனியரான விஜயாலய சோழர், எண்பதாவது பிராயத்தில் திருப்புறம்பயம் போர்க்களத்தில் வந்து இரண்டு கைகளிலும் இரண்டு கத்திகளை ஏந்திச் சக்ராகாரமாகச் சுழற்றி அவர் புகுந்து சென்ற விடமெல்லாம் எதிரிகளின் தலைகளை மலை மலையாகக் குவித்தார்! அத்தகைய வீரர் வம்சத்தில் பிறந்த சுந்தர சோழர் தேக அசௌக்கியத்தைக் காரணமாகச் சொல்லிக் கொண்டு வெளியே வரவே மறுக்கிறார் என்றால் அது நம்பக் கூடிய காரியமா? சக்கரவர்த்தியைச் சிறை வைத்திருக்கும் துரோக சிந்தனையாளர் பில்லி சூனிய மாய மந்திர வித்தைகளைக் கொண்டு அவருக்குச் சித்தக் குழப்பத்தையும் உண்டாக்கிவிட்டார்கள் என்று தோன்றுகிறது. சக்கரவர்த்தியின் சித்தம் சரியான நிலையில் இருந்தால் தமக்குப் பீமார்ஜுனர்களைப் போன்ற இரண்டு வீராதி வீரப் புதல்வர்கள் இருக்கும்போது, போர்க்களத்தையே கண்ணால் கண்டறியாத மதுராந்தகனுக்குப் பட்டாபிஷேகம் கட்ட விரும்புவாரா?....''

இப்போது பலர் ஒரே சமயத்தில் ''சக்கரவர்த்தியின் விருப்பம் அதுவென்று நமக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டார்கள்.

''நமக்கு நேர்முகமாகத் தெரியாதுதான். பழுவேட்டரையர்கள் கட்டிவிட்ட கதையாக இருக்கலாம். ஆனால் நம் முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் கூட அதை நம்புகிறார்...''

''அநிருத்தரும் அவர்களோடு சேர்ந்திருக்கலாம்; யார் கண்டது?'' என்றார் கூட்டத்தில் ஒருவர்.

''அப்படியும் இருக்கலாம். அதன் உண்மையை அறிந்து கொள்வது நாம் இங்கே கூடியிருப்பதன் ஒரு முக்கிய நோக்கம். இன்றைய தினம் இத்தஞ்சை மாநகரில் உலவி வரும் வதந்தியை நீங்களும் அறிந்திருப்பீர்கள். அதை நான் நம்பவில்லை. சக்கரவர்த்தியை உயிரோடு தரிசிக்கும் பாக்கியம் நமக்கெல்லாம் கிடைக்கும் என்றே நம்பியிருக்கிறேன். அப்படி அவரைத் தரிசிக்கும்போது பட்டத்தைப் பற்றி அவருடைய விருப்பம் என்னவென்பதை நேரில் கேட்டுத் தெரிந்து கொள்வோம். ஒருவேளை சக்கரவர்த்தியே மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டும் விருப்பத்தைத் தெரிவித்தார் என்றால், அதை நீங்கள் எல்லாரும் ஒப்புக் கொள்வீர்களா?...''

''மாட்டோம்! மாட்டோம்!'' என்ற பெரும் கோஷம் எழுந்தது.

''நானும் ஒப்புக்கொள்ள மாட்டேன். ஏனென்றால் சக்கரவர்த்தி தெளிவுள்ள சித்தமுடையவராயிருந்தால் அவ்விதம் ஒருநாளும் தெரிவிக்க மாட்டார். பராந்தகச் சக்கரவர்த்தியின் காலத்திலேயே பட்டத்து உரிமை பற்றிய விஷயம் தீர்ந்து முடிவாகி விட்டது. சுந்தர சோழரும் அவருடைய சந்ததிகளுமே தஞ்சைச் சிங்காதனம் ஏற வேண்டும் என்று அந்த மன்னர் உயிர்விடும் தறுவாயில் கூறியதை நானே என் செவிகளினால் கேட்டேன். கேட்டவர்கள் இன்னும் பலரும் இங்கே இருப்பார்கள். காலஞ்சென்ற மகானாகிய கண்டராதித்தர் தம் குமாரனுக்கு இராஜ்யம் ஆளும் ஆசையே உண்டாகாத விதத்தில் அவனை வளர்க்க முயன்றார். அவருடைய தர்ம பத்தினியாகிய பெரிய பிராட்டியார் — சிவபக்தியே உருக் கொண்டவரான செம்பியன் மாதேவடிகள் — மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டக் கூடாதென்பதில் பிடிவாதமாயிருப்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். இதற்கெல்லாம் ஏதோ ஒரு முக்கிய காரணம் இருக்கத்தான் வேண்டும். அப்படியிருக்கும்போது சுந்தர சோழர் ஏன் மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட ஆசைப்படுகிறார்? அவர் சித்தம் சரியாயில்லை என்பதற்கு இன்னும் ஓர் உதாரணமும் கூறுகிறேன். வீர பாண்டியனைக் கொன்று பாண்டிய சைன்யத்தை நிர்மூலம் செய்த பிறகு பாண்டியனுக்கு உதவி செய்ய முன்வந்த ஈழத்து அரசனைத் தண்டிப்பதற்காக என் சகோதரன் படையெடுத்துச் சென்றான். அவனுக்கு உதவியாகப் போதிய சைன்யங்களையும் தளவாடங்களையும் அனுப்பத் தவறிவிட்டோம். அதனால் அவன் போர்க் களத்தில் வீர மரணம் எய்த நேர்ந்தது. சோழ நாட்டின் வீரப் புகழுக்கு நேர்ந்த அந்தக் களங்கத்தைத் துடைத்துக் கொள்ளும் பொருட்டு நானும் பொன்னியின் செல்வரும் சென்றோம். ஈழத்துப் படைகளை நிர்மூலமாக்கினோம். அநுராத புரத்தைக் கைப்பற்றினோம். மகிந்தனை மலைநாட்டுக்குள் ஓடி ஒளிந்து கொள்ளச் செய்தோம். தனாதிகாரி பழுவேட்டரையர் எங்களுடன் ஒத்துழைக்கவில்லை என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். உங்களில் இங்கே வந்திருக்கும் வர்த்தக மகாஜனங்கள் உணவுப் பொருள்களை அனுப்பிப் பேருதவி செய்



அமரர் கல்கி எழுதிய
மகுடபதி
அடுத்த இதழில்
ஆரம்பம்
புத்தாண்டில் தொடங்கும்
இதர புதிய அம்சங்கள்:
• விநோத சம்பிரதாயம்
• ஆமிரந்தைக் கண்டவர்
• கவிதை பிறந்த கதை

னீர்கள். ஆனாலும் நம் வீரர்கள் எவ்வளவோ கஷ்டங்களை அநுபவிக்கும்படி நேர்ந்தது. அவ்வளவையும் அவர்கள் பொறுத்துக் கொண்டு மகிந்தன் படைகளை நிர்மூலமாக்கியது எதனால்? சோழ குலத்து மாவீரர்களுக்குள்ளே ஈடில்லா மாவீரராகிய பொன்னியின் செல்வர் அளித்த உற்சாகத்தினால்தான்! அப்படிப்பட்ட வீரப்புதல்வனுக்குத் தந்தையாகிய சக்கரவர்த்தி அளித்த பரிசு என்ன? இராஜத் துரோகம் செய்து விட்டதாக அபாண்டம் சுமத்தி இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி கட்டளையிட்டதுதான்! சித்த சுவாதீனம் உடைய ஒருவர் இவ்வாறு கட்டளை பிறப்பித்திருக்க முடியுமா?...''

''சேநாதிபதி! மறுபடியும் சக்கரவர்த்தியின் கட்டளையைப் பற்றியே பேசுகிறீர்கள். சக்கரவர்த்திதான் அக்கட்டளையை அனுப்பினார் என்பதற்கு என்ன அத்தாட்சி?'' என்று சபையிலிருந்தவர்களில் ஒருவர் கேட்டார்.

''அதற்கு அத்தாட்சி ஒன்றுமில்லை. அதன் உண்மையைப் பற்றி நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பியுந்தான் இங்கே நாம் வந்து சேர்ந்திருக்கிறோம். சக்கரவர்த்தியின் சம்மதமின்றி இத்தகைய கட்டளை பிறந்திருக்கக் கூடுமானால், இந்தச் சோழ சாம்ராஜ்யம் எவ்வளவு பயங்கரமான நிலைமையில் இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். பின்னால் நிகழ்ந்தவற்றையும் எண்ணிப் பாருங்கள். சிறைப்படுத்த வந்த வீரர்கள் இளவரசரைச் சிறைப்படுத்த மறுத்து விட்டார்கள். இளவரசர் தாமாகவே தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து பார்த்திபேந்திர பல்லவனுடைய கப்பலில் ஏறி வந்தார். அந்தக் கப்பல் புயலில் சிக்கிக் கொண்டதாம். அப்போது இளவரசர் கடலில் மூழ்கி மாண்டதாக ஒரு வதந்தி புறப்பட்டது. இதை நான் நம்பவே இல்லை. பொன்னியின் செல்வனைச் சமுத்திர ராஜன் அபகரித்திருக்க மாட்டான் என்று உறுதியாக நம்பினேன். அந்தக் கப்பலில் வந்த மற்ற எல்லாரும் உயிர் பிழைத்திருக்கும்போது இளவரசர் மட்டும் எப்படிக் கடலில் மூழ்கி மாண்டிருக்க முடியும்?— ஆகையால் இளவரசர் கரை ஏறியதும் அவரைச் சிறைப்படுத்தச் சதி நடந்திருக்க வேண்டும். அந்தச் சூழ்ச்சியை அறிந்து கொண்ட இளவரசர் தப்பிச் சென்று எங்கேயோ பத்திரமாயிருக்கிறார். சரியான சமயத்தில் வெளிப்புறப்பட்டு வருவார் என்று நம்பியிருந்தேன். உங்களில் பலரும் அப்படி நம்பியதாகத் தெரிவித்தீர்கள். நமது நம்பிக்கை நிறைவேறியது. நாகைப்பட்டினத்தில் புயல் அடித்த அன்று இளவரசர் வெளிப்பட்டார் என்பதாகவும், சோழ நாட்டு மக்கள் அவரை விஜய கோலாகலத்துடன் வரவேற்றுத் தஞ்சைக்கு அழைத்து வருகிறார்கள் என்பதாகவும் அறிந்தோம். அவர்களுக்குப் பக்க பலமாக இருக்கும் உத்தேசத்துடனேயே நாமும் இவ்விடம் வந்து சேர்ந்தோம். ஆனால் வஞ்சகச் சூழ்ச்சிக்காரர்கள் மறுபடியும் தங்கள் கைவரிசையைக் காட்டி விட்டார்கள்.....''

''என்ன? என்ன?'' என்று பலர் கவலைக் குரலில் கேட்டார்கள்.

''நான் இந்தக் கூட்டத்துக்கு வருவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்புதான் அச்செய்தி கிடைத்தது. இன்று காலையில் திருவாரூரிலிருந்து இளவரசர் புறப்படவிருந்த சமயத்தில், அவர் ஏறி வந்த யானைக்கு மதம் பிடித்து யானைப் பாகனைத் தூக்கி எறிந்து விட்டதாம். யானை தெறி கெட்டு ஓடி விட்டதாம். அப்போது ஏற்பட்ட குழப்பத்தில் இளவரசரும் காணாமற் போய்விட்டாராம்!....''


''ஐயையோ!'' ''இது என்ன விபரீதம்?'' ''தெய்வமும் வஞ்சகர்களின் கட்சியில் இருக்கிறதா?'' — என்று இப்படிப் பலர் அங்கலாய்க்கத் தொடங்

கிறார்கள். அவர்களைச் சேநாபதி கை அமர்த்தி அமைதியாயிருக்கச் செய்தார்.

"செய்தியை முதலில் கேட்டதும் நானும் கதி கலங்கிப் போனேன். ஒருவாறு சமாளித்துக் கொண்டுதான் இந்தக் கூட்டத்துக்கு வந்து சேர்ந்தேன். இளவரசர் அருள்மொழிவர்மர் போர் முனையில் எத்தகைய நிகரில்லாத வீரம் உடையவரோ, அப்படியே அறிவாற்றலிலும் நிகரற்றவர். வஞ்சகர்களின் சூழ்ச்சி வலையில் அவ்வளவு சுலபமாக அகப்பட்டுக் கொண்டுவிடமாட்டார். சீக்கிரத்தில் அவரைப் பற்றி நல்ல செய்தி ஏதேனும் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதற்கிடையில் நாம் என்ன செய்ய வேண்டும், இந்த இக்கட்டான நிலைமையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி உங்கள் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்!"

இவ்விதம் சேநாதிபதி தாம் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்ததும், மற்றவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவர்களுடைய கருத்துக்கள் முக்கியமான விஷயங்களில் ஏறக்குறைய ஒரு மாதிரியாகவே இருந்தன. சில்லறை விவரங்களில் மட்டுமே மாறுபட்டன. அங்கே உள்ளவர்களின் பிரதிநிதிகள் நாளைய தினம் சக்கரவர்த்தியை நேரில் சந்தித்துப் பேச வசதி கோர வேண்டும் என்றும், அதற்கு வாய்ப்புக் கிடைத்தால் சக்கரவர்த்தியிடம், "மதுராந்தகன் சோழ சிங்காதனம் ஏறுவதை நாங்கள் விரும்பவில்லை" என்று தெளிவாகத் தெரிவித்துவிடவேண்டும் என்றும் பலர் கூறினார்கள். "ஒன்று, பழுவேட்டரையர்களுடைய சர்வாதிகாரப் பதவிகளிலிருந்து சக்கரவர்த்தி அவர்களை நீக்கிவிடவேண்டும்; அல்லது சக்கரவர்த்தி தஞ்சாவூரை விட்டுப் பழையாறைக்குப் போய்விட வேண்டும்" என்று இன்னும் சிலர் வற்புறுத்தினார்கள்.

"ஆதித்த கரிகாலருக்கு ஏற்கனவே யுவராஜ்ய பட்டாபிஷேகம் ஆகியிருப்பதால் அவரே அடுத்த பட்டத்துக்கு உரியவர்; அவராகப் பட்டம் வேண்டாம் என்று மறுதளித்தால், அடுத்தபடி சிங்காதனத்துக்கு உரிமையாளர் அருள்மொழி வர்மர்தான். இதைச் சந்தேகத்துக்கு இடம் வையாமல் சக்கரவர்த்தியிடம் தெரிவித்து அவரையும் ஒப்புக் கொள்ளப் பண்ண வேண்டும்" என்றார்கள் வேறு சிலர். சக்கரவர்த்தியைச் சந்திப்பதற்கே வாய்ப்புக்



ஆப்பிள்களுக்குப் போடும் பாலிஷ் அமெரிக்காவில் விற்கப்படுகிறது. இந்தப் பாலிஷ் ஆப்பிள்களைப் பளபளப்பாக்குவதுடன் நெடுநாட்கள் தோல் சுருங்காமலும் பார்த்துக் கொள்கிறது. - பிலிளால் விக் - பாபு

கிடைக்காவிட்டால், கோட்டைக் கதவுகளைத் திறப்பதற்கு மறுத்தால், கோட்டையை முற்றுகையிட வேண்டியதுதான் என்று சிலர் சொன்னார்கள். "முற்றுகை எதற்காக? உடனடியாகக் கோட்டைக் கதவுகளையும் மதில்களையும் தகர்க்கும்படி வீரர்களை ஏவ வேண்டியதுதான்!" என்று இன்னும் சிலர் கூறினார்கள். இளவரசரைப் பற்றிச் செய்தி வரும் வரையில் காத்திருப்பது நல்லது என்றும் ஆதித்த கரிகாலருக்கு ஆள் அனுப்பி அவரையும் தருவித்துக்கொள்ள வேண்டும் என்றும் சிலர் கருதினார்கள்.

"அதற்காகவெல்லாம் காத்திருப்பதில் என்ன பயன்? பழுவேட்டரையர்களின் ஆதிக்கத்திலுள்ள சுந்தர சோழர் பெரும் படை கொள்ளிடத்துக்கு அக்கரையில் மழ நாட்டில் இருந்து வருகிறது. தற்சமயம் கொள்ளிடத்திலும் மற்ற நதிகளிலும் பெருவெள்ளம் போவதால் அப்படைகள் இங்கு வரமுடியாது. ஆகையால் கோட்டையைத் தகர்த்துச் சக்கரவர்த்தியைப் பழுவேட்டரையர்களின் சிறையிலிருந்து மீட்பதற்கு இதுவே தக்க சமயம்" என்று வற்புறுத்தினார்கள் வேறு சிலர்.

இவ்வாறு விவாதம் நடந்து கொண்டிருக்கையில், கூடாரத்தின் வாசலில் காவல் புரிந்து கொண்டிருந்த வீரன் ஒருவன் அவசரமாக உள்ளே வந்து சேநாதிபதியின் காதில் ஏதோ கூறினான். அவர் அக்கூட்டத்தினரைப் பார்த்து "இதோ, வந்து விடுகிறேன். சற்றுப் பேசிக் கொண்டிருங்கள்" என்று சொல்லிவிட்டு வெளியேறினார்.

(தொடரும்)

அனுமன் இரத்தினப்



[ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய ஸ்ரீ ஹனுமத் பஞ்சரத்னம் தமிழில் கவிதை வடிவில் தரப்படுகிறது. ஸ்ரீ ராமநவமியை யொட்டி.]

பொறிக ளைந்தினை யடக்கிப்
  புலனிச்சை தான் துறந்து
நெறிகண்ட நிர்மலராய்
  நித்திய பிரும்ம சாரியராய்ப
பெரிதுயர்ந்த ஆத்மாவின்
  பேரின்பம் நினைத்தவராய்ச்
சொரியு மின்பக் கண்ணீரால்
  சூழு முடல் புளகமுடை (1)

தூதுசெல்ல உத்தமராய்த்
  தூய இராமன் தேர்ந்தெடுத்து
சீதையிடம் கணை யாழியினைச்
  சேர்த்தின்ப மூட்டியவர்
பூதமைந்தி லொன்றிலான
  புவனத்தின் மூச்சான
வாதகுமரன் அனுமனை நான்
  வணங்கியே வழிபடுவேன் (2)

அருணன் முகத்தைப் போல்
  அன்றலர்ந்த தாமரையோ?
கருணையின்பத் தேன் வழியும்
  கடைக் கண்கள் கவர்ச்சியிலில்—
பெருமை மிகும் அஞ்சனையாள்
  பேறுபெற்ற செல்வ மகன்
தரணியிலே உயிர்களுய்யத்
  தாரகத்தை யளித்தவரும். (3)

சம்பரகரன் பகைத்துச்
  சங்கரித்த பிரத்யும்னன்
பிம்பமாய்க் காமதேவன்
  பெய்திட் டெறிந்திடுமாம்
அம்புகளே அண்டிடாத
  அமர்ந்திட்ட உயர் நிலையில்
அம்புஜம் போல லர்ந்திருக்கும்
  அகன்ற திருக் கண்களினால் (4)

பெருந்தன்மை காட்டி நின்று
  பெரும் பகைக்கு அச்சுறுத்தி
அருங்குணமாய் அடியோர்க்கு
  அபயமருள் மிடறுடையோன்
வரங் கொண்டு தவமிருந்த
  வாயுபிரான் நற்குமரன்
தரங்கொண்ட தாரகத்தைத்
  தரணி உய்ய உச்சரிக்க (5)

பாமாலை

தமிழாக்கம்:
—கலாபாரதி—



கனிபோன்ற உதடசைவில்
　காணுகின்ற செவ்வொளியால்
தனிச் சிறப்பாய் மிளிர்பவனின்
　தாளினையே பற்றிடுவேன்
வனத்திடையே இராவணனால்
　வந்த இன்னல் விலக்கியதும்
மனத்திடையே சிதைக்கு
　மகிழ்விக்கும் இராம நாமம்　(6)

பாருலகம் புகழ் முழங்கும்
　பத்துத் தலை இராவணனின்
வீறுகொண்ட வாழ்வதனை
　வீழ்த்திய அனுமனது
சூரியனைக் கனிபோலுண்ணச்
　சூழ்ந்த இரு ஒளிவடிவம்
சீரிய முறையில் வந்து
　சிறப்புறவே காக்கு மெம்மை　(7)


வானர வீரர் தலைவன்
　வாலி சுக்ரீவனல்லர்—
மானுட குலத்தில் தோன்றி
　மாண்புடை இராமன் மற்றும்
வானவர் இனமும் போற்றும்
　வாயு குமார னென்போன்—
பானுவின் கிரணம் பட்டு
　பதுங்கிடும் குமுதம் போல,　(8)

அரக்கர் செருக்கை வாட்டி
　அழித்திடும் ஆற்றலுற்றோன்—
இரக்க மனமும் கொண்டே
　எளியோர்க் கிதமாய்ச் செய்ய
கரக்கும் அன்பொளியாய் வந்து
　சோபத் திருஉருவம் காட்ட
சிறக்கும் என் சிந்தையெல்லாம்
　சேவித்துக் கண்டுகொண்டேன்(9)

வாயுகுமரன் அனுமனது
　வாழ்த்துக் கவிதை ரத்னமிதை
தூயமனமாய் அனுதினமும்
　துதிப்போ ருலகில் நெடுங்காலம்
தீயவை நீங்கி நல்லவை பெற்றிட
　தெய்வத் திருமால் இராமனருள்
பாயு மிதயம் இன்பமுறும்
　பரவசமாக்கும் இராமஜெயம்(10)

ராம்　ராம்　ராம்　ராம்
ராம்　ராம்　ராம்　ராம்]










கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!

[illegible]





[illegible]

தென் கிழக்காசியாவில் திருவாசகமணி

திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் தமது நான்காவது வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு இப்போது தாயகம் திரும்பியுள்ளார். 1950ம் ஆண்டில் இலங்கைக்கும் 1963-64ல் பத்து மாத காலம் தென் ஆப்பிரிக்காவுக்கும் மூன்றாவது சொற்பொழிவுச் சுற்றுலாவில் மலேயா, பினாங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கும் சென்று திரும்பிய திருவாசகமணி, இந்த நான்காவது சுற்றுலாவில் மலேயாவிலும் இந்தோனேசியாவிலும் மீண்டும் ஓர் அரிய சமயத் தொண்டினை ஆற்றியுள்ளார்.

சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி ஆகிய இரு பெரும் தலைவர்களை மையமாகக் கொண்டு இந்து சமயத்தின் சிறப்புக் கொள்கைகளை விளக்கும் அரிய ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் கோலாலம்பூர், மேடான், ஜகர்த்தா ஆகிய மூன்று நகரங்களில் நிகழ்த்தப்பட்டன.

இவையன்றி, பல கோயில்களில் இந்து சமயம் பற்றிய தமிழ்ச் சொற்பொழிவுகள் பல திருவாசகமணியால் நிகழ்த்தப் பெற்றன.

இந்தோனேசிய நாட்டில், வட சுமத்திராவின் தலைநகரான மேடான் நகரில் சுமார் நாற்பத்தைந்து நாட்கள் தங்கியிருந்தார். மேடானிலுள்ள பத்தாயிரம் இந்துத் தமிழர்கள் தங்கள் சமயம் பற்றிப் பல விஷயங்கள் குறித்து ஐயந்திரிபறத் தெரிந்து, தெளிவு பெற்றுள்ளனர். இத்தகைய இந்து சமயக் கூட்டங்களுக்கு ஏனைய சமயத்தோராகிய இஸ்லாமியர், கிறிஸ்துவர், பௌத்தர்களும்கூட மனம் உவந்து விஜயம் செய்து தமிழ்ச் சுவை மாந்திப் பயன் பெற்றமை ஒரு தனிச் சிறப்பாகும்.

திருவாசகமணியைப் பல நிறுவனங்கள் பாராட்டி நன்றி தெரிவித்துள்ளன. திருவாசகமணி யாத்து அச்சேறிய மேடான் மாரியம்மன் திருப்பதிக நூல் ஒன்று அவரது அறுபத்திமூன்றாவது பிறந்த நாள் விழா கொண்டாடம் பெற்றபோது அவரே பாட அரங்கேற்றப்பட்டது.

சர்வ சமய ஒருமைப்பாட்டினை எப்போதுமே தமது இந்து மதச் சொற்பொழிவுகளிடையே இடையறாது வற்புறுத்தி வரும் பண்பினராகிய திரு பாலசுப்பிரமணியம் "மும்மதச் சம்மதம்" என்றதோரு தனித் தலைப்பில் இந்து மதம், கிறிஸ்துவம், இஸ்லாம் ஆகியவற்றின் ஒற்றுமையை விளக்குகின்ற அவரது ஆங்கிலச் சொற்பொழிவினைக் கோலாலம்பூர், மேடான், ஜகர்த்தா ஆகிய மூன்று நகரங்களிலும் ஆற்றியுள்ளார்.

மேடானில் பேசிய ஒரு கூட்டத்துக்கு வந்திருந்த பல இந்தோனேசிய முஸ்லிம் இளைஞர்கள் இந்து மதம் பற்றிக் கேட்ட சரமாரியான கேள்விகளுக்கெல்லாம் ஒரு மணி நேரம் ஆணித்தரமான விளக்க விடையளித்து அவர்களது மனப்பூர்வமான பாராட்டினையும் பெற்றார் திருவாசகமணி.

மேடானில் உள்ள இரண்டாயிரம் தமிழ்ப் பௌத்தர்களிடையே பௌத்த சமயம் பற்றித் தமிழில் பேசிய திருவாசகமணி அந்நகரின் இந்து-பௌத்தத் தமிழ் மக்களிடையே ஒற்றுமையை உறுதியாக்கி நிலைநாட்டினார்.

ஜகர்த்தா நகரில் உள்ள குருத்துவாராவில் சீக்கிய மதக் குரு நானக்கைப் பற்றித் திருவாசகமணி ஆற்றிய ஆங்கிலச் சொற்பெருக்கை இணையற்றது எனச் சீக்கியத் தலைவர்கள் வியந்து மகிழ்ந்தனர்.

"மலேசியாவின் தந்தை" என மக்களால் போற்றப்படும் மாபெரும் தலைவர், அந்நாள் பிரதமர் துங்கு அப்துர் ரஹ்மான் அவர்களை இரண்டாவது முறையாகச் சந்தித்தார் திருவாசகமணி.

இந்தோனேசியா குடியரசுத் தலைவர், ஜெனரல் சுகர்த்தோ, வெளிவிவகார மந்திரி டாக்டர் ஆதம் மாலிக் உள்ளிட்ட பல தலைவர்களையும் அந்நாட்டில் சந்தித்தா .

ஜுப் துங்கு அப்துர் ரஹ்மானுக்கும் ஜெனரல் சுகர்த்தோவுக்கும் தமது திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு நூற் பிரதிகளைத் திருவாசகமணி பாலசுப்பிரமணியம் அவர்கள் தம் அன்புக் காணிக்கையாக வழங்கினார்.



ஜகர்தாவில் எடுத்த படம். இடமிருந்து: திருவாசகமணி, ஸ்ரீமதி ஆதம் மாலிக், டாக்டர் ஆதம் மாலிக், - இந்தோனேசிய வெளி விவகார மந்திரி.

❀

ஜகர்தாவின் கவர்னர் மேஜர் ஜெனரல் ஆலி ஸதிக் செயின் திருவாசகமணியை வரவேற்றபோது எடுத்த படம்.



ராமாயணம்

ராஜாஜி

கடலினின்று எழுந்த சமுத்திரராஜன் கைகூப்பி வணங்கியபடியே, ''ராமசந்திரனே! இயற்கை விதிப்படி நான் நடந்து கொள்ள வேண்டுமல்லவா? தாண்ட முடியாத ஆழமும் நீர் வடிவமும் கொண்டு, ஜலத்தில் வசிக்கும் பெரும் பிராணிகளுக்கும் சிறு பிராணிகளுக்கும் வாழும் இடமாக நான் இருக்க வேண்டிய நியமத்தை நான் எவ்வாறு புறக்கணிக்க முடியும்? கடந்து செல்ல முடியாதபடி அலைகளுடன் வழியடைத்து நிற்பது என் தர்மம். அதை நான் விட்டுவிட இயலாது. வானரர்களைக் கொண்டு கற்பாறைகளும் காட்டு மரங்களும் கொண்டு அணை கட்டச் சொல்வீர். அதற்கு இடம் தருவேன். வேலைக்குத் தக்க மின்றியும் போட்ட கல்லும் மரமும் நீரில் தங்கும்படியும் நான் உதவுவேன். இவ்வளவே நான் செய்ய முடியும். வானரர்களில் நளன் இருக்கிறான். விசுவகர்மாவின் புத்திரனுன அவன் அந்த அணையைத் திறமையாக நிர்மாணிப்பான்! உமக்கு வெற்றி ஆகுக!'' என்றான்.



ராமசந்திரன் உத்தரவின்பேரில் சேதுபந்தனக் காரியம் தொடங்கினார்கள். லக்ஷக் கணக்கான வானரர்கள் பெரிய ஆரவாரத்துடன் வேலை செய்து ஐந்து நாட்களில் அணை கட்டி முடித்தது. இந்த இடத்தில் வால்மீகி முனிவர் அணைக்கட்டு வேலையை விஸ்தாரமாகச் சித்திரித்து விளக்குகிறார். தற்காலத்தில் பெரும் 'அணைகள் கட்டும் அமர்க்களமாகவே முனிவரும் சேதுபந்தனத்தைப் பாடியிருக்கிறார். வானரர்கள் காடுகளிலும் மலைகளி



லும் சென்று ஆயிரக்கணக்கான மரங்களைப் பிடுங்கிப் பெயர்த்துச் சமுத்திரக் கரைக்கு இழுத்து வந்து போட்டார்கள். வேறு பெரிய வானரர்கள் மலைகளையும் பாறைகளையும் பெயர்த்துத் தூக்கி வந்து போட்டார்கள். மரங்களும் மலைகளும் கடலில் விழும்போது, அலைகள் மேலே கிளம்பி ஆகாயத்தை எட்டிக் குதித்தன. நளன் நின்று எல்லா வேலைகளையும் பார்த்து வந்தான். கூட்டம் கூட்டமாக வந்து நின்ற வானரர்களிடமிருந்து வானரத் தலைவர்கள் வேலை வாங்கினார்கள். மலை போன்ற கற்களையும் மகா விருக்ஷங்களையும் போட்டு மேலே கட்டைகளும் புல்லும் பரப்பிச் சமன்படுத்தினார்கள். அணை வேலையின் சப்தம் சமுத்திர ஓசையைச் சிறிதாக்கி விட்டது.

அணை கட்டி முடிந்தது. ஆகாயத்தில் ஸ்வாதி நட்சத்திர வீதியைப் போல் கடலின் மத்தியில் இந்தப் புதுச் சேதுவானது பிரகாசித்தது. மேலே தேவ கணங்களும் பூமியில் வானரர்களும் வெற்றி கோஷம் செய்தார்கள். ''சத்துருவை ஜெயித்துப் பல்லாண்டு பல்லாண்டு வாழ்வாயாக!'' என்று ராமனைத் தேவர்களும் ரிஷிகளும் ஆசீர்வாதம் செய்தார்கள்.

ஆஞ்சநேயன் ராமனைத் தன் தோள் மேல் தூக்கிச் சென்றான். அப்படியே அங்கதன் லக்ஷ்மணனை எடுத்துச் சென்றான். வானரப் படை கடலைக் கடந்து விட்டது.

இவ்விடத்தில் எடுத்துச் சொல்ல வேண்டிய ஒரு வேதாந்த விஷயம் உண்டு. வில் பிடித்து நின்ற ராகவனைக் கைகுவித்து வணங்கிச் சமுத்திர ராஜன் சொன்னான்:

''அன்புக்குரிய ராமசந்திரனே! பூமியும் வாயுவும் ஆகாசமும் நீரும் நெருப்புமாகிய ஐம்பூதங்களும் தத்தம் சுபாவ நிலையில் நிற்கின்றன. அவற்றுக்கு இடப்பட்ட மாறாத அநாதி நெறியில் அவை செல்கின்றன. காமலோப மயக்கங்களால் அல்லது தண்டனைக்குப் பயந்து நான் என் சுபாவத்தை மாற்றிக் கொள்ள முடியுமா? ஜலமானது இறுகிக் கல்லாக முடியுமா? அல்லது என் ஆழத்தை நான் மாற்றிவிட்டு



நடந்து தாண்டும் ஒரு நீர் நிலையாக நிற்க முடியுமா?''

இவ்வாறு சமுத்திர ராஜன் ராம சந்திரனிடம் மிக விநயமாகச் சொல்லிக்கொண்டான்.

முனிவர் சமுத்திர ராஜன் வாய்வழி, நம்முடைய சாஸ்திரங்களின் அடிப்படையான தத்துவத்தை விளக்குகிறார். பிரகிருதிக்கும் ஈசுவரனுக்கும் உள்ள அநாதி சம்பந்தத்தை விளக்குகிறார். ஆண்டவனுடைய நியதியே பிரகிருதி. பிரபஞ்சம் தானாக நடப்பதற்காக இயற்கை நியதிகளை ஆண்டவன் உண்டாக்கி அமைத்து விட்டான். அப்படியே கர்ம விதியும். பஞ்சபூதங்களும் உயிரற்ற பொருள்களும் ஜீவன்களும் இந்தச் சாசுவத நியதியின்படியே நடந்து கொள்ளும்.

மற்ற சமயங்களில் ஆண்டவனுடைய உண்மையையும் பிரபாவத்தையும் நிரூபிப்பதற்காகப் பிரகிருதி விதிகளை மக்கள் காணும்படி திடீர் என்று எதிர்பாராதபடி மாற்றி வியக்கச் செய்ததாகச் சொல்லுவார்கள். சுபாவத்துக்கு விபரீதமான நிகழ்ச்சிகளை வைத்து ஈசுவர நிரூபணம் செய்வார்கள். நம்முடைய சாஸ்திரம் அப்படிச் செய்வதில்லை.

ஒரு மலையைக் கண்ணன் தூக்கினான் என்றால் அது வேறு விஷயம். அதனால் அவன் ஆண்டவன் ஆகி விட்டான் என்று சொல்லவில்லை. ராவணனும் கைலாசத்தைத் தூக்கினான். ராவணன் ஆண்டவன் ஆகிவிடவில்லை.

ஹிந்து சாஸ்திரத்தின்படி ஈசுவரனுடைய சங்கற்பமே இயற்கையும், காரண காரிய விதியும், பஞ்ச பூதங்களின் மாறாத நியதிகளும், கர்ம விதியும். இது பகவத் கீதை ஒன்பதாவது அத்தியாயத்தில் விளக்கப்பட்டு உபதேசிக்கப்படுகிறது. வால்மீகி முனிவர் இதைச் சமுத்திர ராஜன் பேச்சில் சுருக்கமாக வைத்து முடித்தார்.

84. யுத்தம் ஆரம்பித்தது

மால்யவான் என்ற விருத்தனை ராக்ஷசன் ராவணனுக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தான்.

''உன்னுடைய நல்ல காலம் முடிந்தது. நீ செய்து வந்த பாப காரியங்களால் உன் தேஜஸ் குறைந்து போயிற்று. நீ பெற்றிருக்கும் வரங்களை இனி நம்பாதே! சமாதானம் செய்து கொள். இப்போது வந்திருக்கும் சேனையைப் பார். மானிடர்களும் வானரர்களும் கரடிகளுமான சேனை பயங்கரமாக வந்து நிற்கிறது. சேதுபந்தன அற்புதத்தைப் பார். மகா விஷ்ணுவே மனித சரீரத்தில் வந்துவிட்டான் என்று எண்ணுகிறேன்.'' இவ்வாறு கிழவன் சொன்னான்.

இதையெல்லாம் கேட்க ராவணன் விரும்பவில்லை. ''நீர் சொல்லும் சொற்கள் எனக்குக் கர்ண கடூரமாக இருக்கின்றன. நீர் சத்துருவோடு சேர்ந்துவிட்டீர் போலிருக்கிறது. மனித ஜாதிக்குப் பலம் ஏது? தகப்பனால் காட்டுக்குத் துரத்தப்பட்ட ஓர் அற்ப மனிதனைக் கண்டு எல்லோரும் பயப்படுகிறீர்கள். குரங்குகளையும் கரடிகளையும் நம்பி ஒரு மனிதன் வந்திருக்கிறான். இவன் உங்களுக்குப் பெரும் பயத்தைத் தருகிறான். உங்களைப் பார்த்து எனக்கு வெட்கமாக இருக்கிறது.

''என் மேல் உங்களுக்குப் பொறாமையா? ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? நான் ராமனுக்கு வணங்க முடியாது. நீதி சாஸ்திரத்தில் இது குற்றமாயிருந்தால் அது என் சுபாவத்தில் ஏற்பட்ட குற்றம். அதை என்னால் மாற்ற முடியாது என்று வைத்துக் கொள்ளுங்கள். யுத்தம் செய்து மடிந்தாலும் மடிவேன், ராமனிடம் சமாதானம் கேட்க மாட்டேன்'' என்றான்.

''யோசித்துச் செய்ய வேண்டியதைச் செய். லங்கேசன் வெல்க! ராவணன் வெல்க!'' என்று சொல்லிவிட்டு மால்யவான் வருத்தத்தோடு தன் வீடு திரும்பினான். இவன் ராவணனுக்குத் தாய் வழியில் பாட்டன்.

* * *

ராவணன் தன்னுடைய வீரர்களை அந்த அந்த இடத்துக்கு இவர் இவர் பொறுப்பு என்று அமைத்துவிட்டான். பிரஹஸ்தனைக் கிழக்கு வாயிலுக்கும், மகா பார்சுவனையும் மகோதரனையும் தெற்கு வாயிலுக்கும், தன் மகனும் மாயங்கள் கற்ற மகா வீரனுமான இந்திரஜித்தை மேற்கு வாயிலுக்கும் காப்புப் பொறுப்பாக அமைத்துவிட்டு, வடக்கு வாயிலைத் தானே காப்பது என்று முடிவு செய்தான். மகா வீர பராக்கிரமனை விருபாக்ஷனை நகரத்துக்குள்ளிருக்கும் சேனைக்குத் தலைவனாக நியமித்தான்.

இவ்வாறு தன் சேனையையும் வீரர்களையும் விதானப்படுத்தி விட்டுக் காரியங்கள் வெற்றிகரமாக முடியும் என்று திருப்தி அடைந்தான். விநாச காலம் நெருங்கியபடியால் யார் சொல்லியும் கேட்காமல் இவ்வாறு ஏமாந்தான். மந்திரிகள் ஸ்துதியும் ஜெயகோஷமும் செய்து அரசனைச் சந்தோஷப்படுத்தி விட்டுக் கலைந்தார்கள். (தொடரும்)

இமயத்தைக் கண்டோம்!

செந்தமிழ்ப் பற்றும், சீர்திருத்த எண்ணமும், அயபலவாணனின் அடியிணை மறவா நேயமும், வியத்தகு புலமையும், விழுமிய நோக்கமும் கொண்டு, நயத்தகு நாவன்மையும் படைத்த பேரறிஞர்; கற்க வேண்டுபவற்றையெல்லாம் கசடறக் கற்று, அதற்குத் தக்கபடி நடைமுறையில் எஞ்ஞான்றும் நின்று நன்னெறியைக் கடைப்பிடித்தொழுகிய நற்பண்பாளர், திட்டமிட்ட வாழ்க்கையை மேற்கொண்டு கட்ட நட்டங்களைப் பாராமல் கடைசி மூச்சு வரையில் அத்தொன்னெறியில் ஊன்றி நின்றவர்; தமிழெனும் அளப்பரும் சலதியில் திளைத்தும் அவர் பிற மொழிகளை வெறுத்தாரில்லை; அதற்கு மாறாக ஆங்கிலத்தையும், சம்ஸ்கிருதத்தையும் நன்கு பயின்று ஆராய்ந்தவர்; காளிதாசனின் சாகுந்தல நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழர்களுக்கு அக்காவிய நாடகத்தின் மாட்சியை விளக்கியவர்; ஆயிரக்கணக்கில் நூல்களைச் சேகரித்து அவற்றைக் கருத்தூன்றிப் படித்து ஒவ்வொரு நூலுக்கும் தாமே கைப்படக் குறிப்புக்களையும், விளக்கங்களையும் மணி மணியாக எழுதிச் சேர்த்து அந்நூல்களுக்கு அணி செய்தவர்; இத்துணைச் சிறப்புக்களுக்கும் உறைவிடமாகத் திகழ்ந்தவர் மறைமலை அடிகள்தாம் என்பதைத் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கறியும்.

''மறைமலை அடிகளாரின் தமிழ்த் தொண்டு'' என்னும் தலைப்பில், சென்னைப் பல்கலைக் கழகத்தின் கல்வி நினைவுச் சொற்பொழிவுகள் அறக்கட்டளையின் ஆதரவில், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்கள் அரியதொரு சொற்பொழிவு ஆற்றினார்கள். மார்ச் 18, 19, 20 ஆகிய மூன்று நாட்களும் சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டுக் கட்டடத்தில் நிகழ்ந்தது.

ஆராய்ச்சியாளர் எல்லோருமே அப்பாதுரை அவர்கள் கூறியன அனைத்தையும் ஒப்புக்கொண்டு விடுவார்கள் என்று சொல்வதற்கில்லை. கருத்து வேற்றுமைகள் சில இருக்கத்தான் செய்யும். ஆனால் மாறுபட்ட கருத்துடையவர்கூட அப்பாதுரை அவர்கள் தாம் உண்மை என்று முழுமையாக நம்பியவற்றைத் தாம் உறுதியாகப் பேசினார் என்பதை ஒப்புக்கொள்வர்.

பன்மொழிப் புலவரின் சொற்பொழிவில், மறைமலை அடிகளாரின் அறிவாராய்ச்சித் திறன்களைப் பல்வேறு கோணங்களில் தெளிவாகக் காண முடிந்தது.

தமிழில் முதன் முதலில் இறுஞவு நூலை எழுதியவர் மறைமலை அடிகள்தாம் என்று கூறியதோடு தனித் தமிழ் இயக்கத்துக்கு அடிகளார் எத்துணை ஊக்கத்துடன் ஆக்கமளித்தார் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டினார்.

சமயத் தொண்டு, சமூகத் தொண்டு, மொழித் தொண்டு என்று வகுத்துக் கொண்டு இட்டமிட்டுச் செயலாற்றிய மறைமலையடிகள்

'' மதிநுட்பம் நூலோடுடை யார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை ''

என்ற வள்ளுவர் பெருமானின் வாக்குக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர். தனித் தமிழ் இயக்கத்தின் காவலர்; சமூகம், சமயம், சமயக் கோட்பாடுகள் ஆகியவற்றின் சீர்திருத்தச் செம்மல்; பழைமையோடு புதுமைக் கருத்துக்களையும் ஏற்க வேண்டும் என்னும் கொள்கைக்காகப் போராடிய போர் வீரர்; இனம், மொழி, சமுதாயம் ஆகியவற்றில் புரட்சி செய்த புதுமையாளர்.

இத்தகைய சிறப்பியல்புகளுக்கு உறைவிடமாகத் திகழ்ந்த மறைமலை அடிகளைப் பற்றிச் சில தவறான கருத்துக்கள் எப்படியோ இடம் பெற்றிருக்கின்றன. அவர் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளை அனுதினமும் வணங்குபவர்; கடவுட் கொள்கை இல்லாதவர் அல்லர். அடிகளாரிடம் சமயப் பற்றும், சிவபக்தியும் பொங்கிப் பொலிந்த தன்மையை, பன்மொழிப் புலவர் தம் விரிவுரையில் சிறப்பாக 'அறிவுக் கத்தியல் கொண்டு அறைந்து' கூறினார்!

அந்தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், இன்தமிழ், அருந்தமிழ், கொழுந்தமிழ், நற்றமிழ், சொற்றமிழ் என்றெல்லாம் அடிகளார் பல அடைமொழிகளோடு தமிழைச் சிறப்பித்துக் கூறியதையும் எடுத்துச் சொன்ன பன்மொழிப் புலவர் — தமிழ் மண்ணில் பிறந்து, தமிழ் மொழியைப் பயின்று, தமிழில் நிறைய எழுதி, தமிழை நிறைய வளர்த்து, தமிழுக்காகவே வாழ்ந்து இறுதியில் தாம் வளர்த்த தமிழோடு கலந்து விட்டார் என்று முடித்த போது சபையோரின் எண்ணம் முழுதும் மறைந்த மாமேதையின் நினைவில் ஒன்றியது.

பல்கலைக் கழக நூற்றாண்டு விழாக் கட்டடத்தில் மறைமலை அடிகள் எழுதிய நூல்களையும், அவர்தம் கையெழுத்துப் பிரதிகளையும், அவர் கருத்துக்களைத் தாங்கிய அட்டைகளையும் அழகுற வைத்து ஒரு கண்காட்சியாக அமைத்திருந்தனர்.

கல்வி நினைவுச் சொற்பொழிவுகளுக்குத் தலைமை தாங்கிய சென்னை பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் (பொறுப்பு) திரு ந. சஞ்சீவி, மறைமலை அடிகளைப் பற்றிய பன்மொழிப் புலவரின் பேச்சில், முதல் நாள் திருவேங்கடத்தைப் பார்த்ததாகவும், இரண்டாம் நாள் விந்திய பர்வதத்தைப் பார்த்ததாகவும், மூன்றும் நாள் இமயமலையைப் பார்த்ததாகவும் சிறப்பித்துக் கூறினார். அந்தக் கருத்து உண்மைதான் என்பது சொற்பொழிவு முடிந்து மண்டபத்தை விட்டு வெளியே போந்த ரஸிகப் பெருமக்கள் நிமிர்ந்த நன்னடையோடு சென்றதிலிருந்து தெரிய வந்தது.


— காந்தன்



இறை வணக்கத்தின்போது அரங்கில் திரு ந. சஞ்சீவியும், பன்மொழிப் புலவரும்.




சிங்கக் கழுகு
பீட்டர் ஓடான்னல்
12
உன்னை சுட்டி ஏராளமாய் எரிந்துபோகும்.. ஆயின் என்னிடம் 250 அடி நீளத்துக்கு உன்ளது... ஒவ்வொன்றும் 300 கன அடி விதம் பதினைந்து கலன்கள்பிராண வாயு தேவை. அவற்றுக்கு நீ ஏற்பாடு செய்.
மிஸ்டர் ஷா! இதைச் சாதிக்க முடியுமா, உங்களால்?
சூரியோஸ்தமனத்துக்கு ஒரு மணி நேரம் முன்....
மாடஸ்டி! பின்னால் பார்!
அந்தத் துப்பாக்கி ஓசைப் படுத்தாது — ஸைலன்ஸர் பொருத்தப்பட்டுள்ளது. பேசாமல் எங்களுடன் வா. இல்லையேல் அவன் உன்னைச் சுட்டுக் கொன்று விடுவான்.
பிரபோ! இதோ மாடஸ்டி! இவன் தன் படகை எங்கே கட்டுகிறான் என அறிந்து அங்கு காத்திருந்து பிடித்தோம்.
'மாடஸ்டியைத் தெரியுமா?' என்று கேட்டீர்களே: இந்தஅழகி தானா அவள்? பார்த்தால் பொல்லாதவளாய்த் தோன்றவில்லையே ?
வெளித் தோற்றத்தைக் கண்டு ஏமாறுதீர்கள், மிஸ்டர் ஷா.
பத்திரமாய் இருக்கிறார்கள். அவர்களை நீ கண்டுபிடிப்பது இருக்கட்டும்; அதைவிட அதிகமாக நீ கவலைப்பட வேண்டிய விஷயம் வேறொன்று இருக்கிறது, அல்போரினி !
அந்தச் சிறுவனும் சிறுமியும் எங்கே ?
1755



நான் சாகாமல் இருக்க இவன் சீக்கிரம் வழி கண்டு பிடிக்க வேண்டும்... இல்லையேல் இவளைக் காக்க நான் கத்தியைப் பயன்படுத்த நேரலாம்...
மாடஸ்டி வேண்டுமென்றே வந்து அகப்பட்டுக் கொண்டாள்.
மாடஸ்டி! என்னை விட அதிகமாகக் கவலைப்பட வேண்டியவள் நீதான்!
இருக்கலாம்; ஆனால் நான் நடந்ததையெல்லாம் எழுதி பாங்கில் பத்திரப்படுத்தியிருக்கிறேன். எனக்கு ஏதாவது நேர்ந்தால் அந்தப் பாதுகாப்புப் பெட்டியைத் திறந்து பார்க்கச் சொல்லியிருக்கிறேன்.
அப்படியானால் அந்தப் பெட்டியைத் திறந்து நீ எழுதி வைத்துள்ளதை எடுத்துக் கொள்ள எனக்கு அனுமதி அளித்து நீ ஒரு கடிதம் தரவேண்டும். அக்கடிதத்தை நானே நீ எழுதுமாறு செய்கிறேன். அதுவரை நீ உயிர் வாழலாம்.
கத்திக்கு இப்போ வேலை இல்லை.
1756



நள்ளிரவு வேளையில் டான்லோ நீலில் சிங்கக் கழுகின் பீடத்தைச் சுற்றிலும் மணல் மூட்டைகளை அடுக்கி இடையில் நீர் நிரப்பப்படுகிறது.
உஷ்ண கட்டியைப் பயன் படுத்தக் கார்வின் தயாராகிறான்; எஃகுக் குழலுக்கு மத்தியில் மெல்லிய எஃகுக் கம்பிகள் உள்ளன. அவற்றினூடே பிராண வாயு பாய்கிறது. வாயு எரியும் போது எஃகுக் கம்பிகள் உஷ்ணமடைந்து கான்கிரீட்டைக் கூட உருக்கும் சக்தி பெறுகின்றன.
மாடஸ்டி! உன்னை யாரேனும் காக்க வருவார்கள் என்று கனவு காணாதே! கார்வின் நீருக்கு அடியில் வேலை செய்யப் போகிறான். அதனால் உஷ்ணகட்டியின் ஒளி வெனிஸ் நகரில் யாருக்கும் தென்படாது.
1757


அல்போரினி! மாக்ஸ் கண்டு பிடித்த கடிதத்தில் உண்மையில் என்ன எழுதியிருந்தது?
அதுவா! என் கொள்ளுத் தாத்தாவின் ஒன்றுவிட்ட தம்பி லியோ எழுதிய கடிதம் அது. டாஸ்லோ தனக்குத் தான் சொந்தம் என்றும் தன்னைக் கொல்லச் சதி நடப்பதாய்த் தான் சந்தேகிப்பதாயும் எழுதியிருந்தான் !
அவன் எழுதியது உண்மையே. என் கொள்ளுத் தாத்தா, லியோவைக் கொன்றுவிட்டு அவன் சொத்தையெல்லாம் அடைந்தார். ஆயினும் லாபம் இல்லை. ஏனெனில், லியோ தன் சொத்தையெல்லாம் நவரத்தினங்களாய் மாற்றி விட்டான்...
...அவற்றை ஒரு பெட்டியில் வைத்து, சிங்கக் கழுகுக்கு அமைக்கப் பட்ட பீடத்தின் மத்தியில் ஒளித்துவிட்டான் —கடிதம் இதையெல்லாம்தான் கூறியது.
ஆக, நீதான் மாக்ஸைக் கொன்றாய்! உன் முன்னோர்களைப் போலவே நீயும் கொடியவன் !
1758
மிஸ்டர் ஷா! இதற்கு எவ்வளவு நேரம் ஆகும் ?
சில மணி நேரம். பன்னிரண்டு அங்குல ஆழத் துக்குத் துளை இட உஷ்ணசட்டிக்கு இரண்டு நிமிஷம் ஆகும். ஆழம் அதிகமானால் நேரமும் கூடும்.
வெடிமருந்தா?
பீடத்தின் அடிவாரத்தில் நான் துளைகள் போடப் போகிறேன். பிறகு பல துளைகளுக்கும் இடையில் உள்ள கான்கிரீட்டில் விரிசல் ஏற்படச் சிறிய அளவில் வெடிமருந்தைப் பயன்படுத்தப் போகிறேன்.
சிறிய அளவில் என்றேனே. 400 டிகிரி சென்டிகிரேட் உஷ்ணத்தில் கான்கிரீட் பலவீனமடைந்துவிடும். ஆகவே துளைகளுக்கிடையே உள்ள கான்கிரீட் எளிதில் பிளவுபடும்.
1759
(தொடரும்)

சுழிக்காற்று



அத்தியாயம் மூன்று

கௌசிகன்

சாமுண்டிக் கோட்டையில் வண்டி நின்றது. அந்த வட்டாரத்திலேயே அது முக்கியமான ஸ்டேஷனாதலால் ஏராளமான ஜனங்கள் இறங்கலாயினர். மஞ்சுளாவும் நிர்மலாவும் கைகோத்தபடி தங்களை மறந்த நிலையில் சுவாரசியமாகப் பேசிக்கொண்டே முன்னால் நடந்தார்கள். சேகர் காலை இழுத்து இழுத்து நடந்தபடி அவர்கள் பின்னால் வந்து கொண்டிருந்தான். நொண்டி நடந்தாலும் பார்ப்பவர்களுக்கு அது விகாரமாகப் படாதபடி அத்தனை லாகவமாக நடந்து வந்தான் சேகர். அவன் கையிலிருந்த விசேஷ 'வாக்கிங் ஸ்டிக்' குறைக் காலின் பலத்துக்கு உதவினாலும் அதை அவன் உபயோகிக்கும் மாதிரியே ஒரு கம்பீரத்தைக் கொடுத்தது. இயற்கையிலேயே நல்ல எடுப்பான அவனது தோற்றம் அந்த ஊனத்தைக் குறைத்துக் கொண்டிருந்தது.

அந்த வேளைக்குப் போர்ட்டராக மாறியிருந்தான் கோபால். படுக்கை, பெட்டிகளை அநாயாசமாகத் தூக்கிக் கொண்டு வந்த அவனுக்குக்கூடக் கூட்டத்தைச் சமாளித்து முன்னேறுவது சற்று சிரமமாகத்தான் இருந்தது.

மெள்ள மெள்ளக் கூட்டம் ஸ்டேஷனை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தது. வண்டியை விட்டு இறங்கியவர்கள் வீட்டுக்குப் போகும் ஆவலில் பரபரத்தபடி இயங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் மஞ்சுளா மட்டும் அப்படியொரு அவசரத்தைக் காட்டவில்லை. காரணம் மஞ்சுளாவை மட்டும் ஒரு சிறு கூட்டம் சூழ்ந்து கொண்டிருந்தது. அதன் நடுவில் அவள் உற்சாகமாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள். வெகு நாட்கள் கழித்து வந்திருக்கும் அவளைச் சுலபத்தில் முல்லைவாசலுக்கு அனுப்ப அவள் உயிர்த் தோழிகளுக்கு விருப்பமில்லை போலும்.

இறக்க வேண்டிய மூட்டைகளை இறக்கி விட்டு ஏற்றிக்கொள்ள வேண்டிய பார்சல்களை ஏற்றிக் கொண்டிருந்தது ரயில் வண்டி. அங்கு பத்து நிமிஷங்கள் தாமதிப்பது வழக்கம். சற்றே பருத்த மனிதர் ஒருவர் மூச்சு வாங்க ரயிலைப் பிடிக்க ஓடி வந்துகொண்டிருந்தார். சிநேகிதிகளின் அன்பு வெள்ளத்தில் மூழ்கியிருந்த மஞ்சுளா அந்த மனிதரைப் பார்த்து விட்டாள்.

''சித்தப்பா...சித்தப்பா...!'' என்று குதிகாலை உயர்த்தி, கைகளை ஆட்டி எம்பி எம்பிக் கூப்பிட்டாள்.

''அடடே! மஞ்சுளாவா?'' என்று தம் ஓட்டத்தை நிறுத்தி விட்டு இளைப்பு வாங்கக் கேட்டார் அந்த இரட்டை நாடிப் பேர்வழி.

''சித்தப்பா, நீங்கள் ரொம்ப மாறிப் போய் விட்டீர்கள்...'' என்று அவரது தொந்தியைப் பார்த்து முறுவலித்தபடியே சொன்னாள் மஞ்சுளா. அவர் அசடு வழியச் சிரித்தார். பதில் சொல்லுவதற்குள் வண்டி கிளம்புவதற்கு அடையாளமாக ஊதவே அவர் பரபரப்புடன், ''மஞ்சுளா, நான் வருகிறேன். வண்டி ஊதிவிட்டது'' என்று உடல் குலுங்கக் கையில் உள்ள சூட்கேஸை மறு கைக்கு மாற்றிக்கொண்டு ஓடினார். ரயில் நகருவதற்கும் அவர் அதில் தொத்திக் கொள்ளுவதற்கும் சரி



யாக இருந்தது. கதவின் அருகில் நின்று கொண்டே அவர் உரக்க ''மஞ்சுளா, உன்னோடு நின்று பேசக் கூட அவகாசமில்லாமல் போக வேண்டியிருக்கிறது. மிகவும் முக்கியமான காரியம். இல்லாவிட்டால் தங்கிவிடுவேன். அப்பாவுக்கும் தாத்தாவுக்கும் உடம்பு ரொம்பச் சுகமில்லை என்று கேள்விப்பட்டேன். அதற்காகத்தானே நீ வந்திருக்கிறாய்? ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்'' என்று சொன்னார். மஞ்சுளாவுக்கும் அவருக்குமிடையே உள்ள தூரம் வர வர அதிகமாகிக் கொண்டே வந்தது. வண்டியின் வேகமும் அதிகமாயிற்று. சித்தப்பா கையை ஆட்டிச் சைகை செய்து விடைபெற்றுக் கொண்டார். மஞ்சுளாவும் தன் கைக்குட்டையை ஆட்டி விடை கொடுத்தாள்.

ஒருவிதமாக ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் சந்தடி குறைந்து மெள்ள அமைதி பரவலாயிற்று. அப்போது தான் தனக்காகக் காத்துக் கொண்டு நிற்கும் சேகரின் பக்கம் மஞ்சுளா திரும்பினாள்.

சேகர் ஏதும் பேசாதபோதே மஞ்சுளா தான் பேசி விடை கொடுத்த மனிதரைப் பற்றிய தகவல்களைச் சொல்ல ஆரம்பித்தாள். ''அவர் தான் என் சித்தப்பா வீராசாமி. தாத்தா அவரைத் தம் பிள்ளை இல்லை என்று சொல்லி விரட்டி விட்டார்'' என்று வீராசாமியைப் பற்றிய விவரங்களை அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே எல்லோரும் ஸ்டேஷனுக்கு வெளியே வந்தனர்.

''சித்தப்பா எங்கள் வீட்டுப் பக்கமே வருவதில்லை. எப்போதாவது — அதுவும் தாத்தா இல்லை என்று தெரிந்தால் என்னையும் அப்பாவையும் வந்து பார்த்து விட்டு உடனே போய்விடுவார். அதுவும் நான் குழந்தையாக இருந்தபோது'' என்றாள் மஞ்சுளா.

''அது சரி, சாமுண்டிக் கோட்டை ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வீதிக்கு வரவே அரை மணியாகி விட்டது. இங்கிருந்து முல்லைவாசலுக்கு எப்படிப் போவது? எப்போது போய்ச் சேரலாம்? அதைச் சொல்லு'' என்றான் சேகர். உடனிருந்த நர்ஸ்

நிர்மலா அவனுடைய கேள்வியில் இருந்த குத்தலைப் புரிந்து கொண்டு வாய்க்குள் அழகாகச் சிரித்துக்கொண்டாள்.

பெட்டி படுக்கைகளை ஸ்டேஷனுக்கு வெளியே கொண்டு வைத்து விட்டு அதன் மீது நிம்மதியாக உட்கார்ந்து கொண்டிருந்த கோபால் இவர்களைக் கண்டதும், ''அடுத்தபடியாக....?'' என்று எழுந்திருந்தான். அதே சமயத்தில் ஒருமோட்டாரின் சத்தம் தடபுடலாகக் கேட்டது. ஆனால் மோட்டாரின் உருவம் மட்டும் கண்களில் படவில்லை. முனகல், இருமல் இவற்றுடன் சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு கார் ஸ்டேஷன் வாசலில் வந்து கிர்ச்சென்று சத்தமிட்டு நின்றது. முன்னால் கொட்டை எழுத்துக்களில் 'வாடகைக்கு' என்று எழுதப்பட்ட தகர போர்டு ஒன்று குலுங்கி ஆடியது. படுபாடாவதியான பழைய மாடல் கார் அது. சமீபத்தில்தான் தனக்குப் பச்சை வர்ணம் பூசியிருக்கிறார்கள் என்பதை அது பக்குவமாகப் பறைசாற்றிக் கொண்டிருந்தது. காரின் பின்னால் சாமான் வைக்கும் இடத்தின் மூடி, முதலையின் வாயைப் போல் அகலத் திறந்து கிடந்தது. அதில் ஒட்டகத்தின் முதுகைப்போல் பெரிய பழைய டிரங்க் பெட்டி ஒன்று



வைத்துக் கட்டப்பட்டிருந்தது. அந்த விநோதமான வாகனத்திலிருந்து ஒரு மனிதன் வெளியே இறங்கி வந்தான்.

மெலிந்த தேகம். ஆனால் உயரம். வாரிவிடப் படாத நரை மயிர் கலந்த கிராப் தலை. க்ஷவரம் செய்து பத்து நாட்களாவது ஆகியிருக்கும் என்பதைத் தெளிவாக்கும் முகவாய். குழி விழுந்த கண்களுக்குள்ளே ஜ்வலிக்கும் விழிகள். இறுகிய வாய். மெலிந்த உதடு. அந்த உருவத்தைக் கண்டதும் சேகரின் கை அவனை அறியாமல் அவனது கைத் தடியை இறுகப் பற்றிக் கொண்டது. அந்த மனிதனின் தோற்றமும் பார்வையும் புரிந்து கொள்ள முடியாத புதிராக இருந்தன. அந்தக் கண்கள் குரூரமாகவும் இருந்தன. அதே சமயத்தில் பரிதாபத்துக்கு உரியனவாகவும் தோன்றின. அவற்றில் அன்பும் கனிவும் தெரிந்தன. அதே சமயம் கொடுமையையும் குரூரத்தையும் கூடக் காண முடிந்தது. காரிலிருந்து வெளிப்பட்ட அந்த மனிதனின் பார்வை மஞ்சுளாவின் மீது பதிந்ததும் இறுகிக் கிடந்த அவன் உதடு விரிந்தது. கடுத்த முகத்திலே ஒரு களை தோன்றியது.

'' அடேடே !.... சின்னம்மாவா?'' என்றான் அவளை நோக்கி வந்து கொண்டே.

யாருடனோ பேசிக் கொண்டிருந்த மஞ்சுளா சட்டென்று திரும்பினாள். ''காளியப்பனா? சௌக்கியமாக இருக்கிறாயா காளி?'' என்று இரண்டடி முன்னால் போனாள். இப்போது அந்த மனிதன் அவளை நோக்கி ஓடி வந்தான்.

தன் வருங்கால மனைவி மஞ்சுளாவுக்கு இந்தப் பக்கத்தில் உள்ள செல்வாக்கிலும் வியாபகத்திலும் அலுப்புக் கொண்ட சேகர் கோபாலின் அருகில் படுக்கையின் மீது 'சிவசிவா' என்று உட்கார்ந்து விட்டான். தன் காதலவின் மனநிலையை அறியாத மஞ்சுளா காளியப்பனுடன் சுவாரசியமாகப் பேசிவிட்டு அவனைத் தன் வருங்காலக் கணவனுக்கு அறிமுகப்படுத்தி வைக்கவும் அழைத்து வந்தாள்.

''என்னைத் தூக்கி வளர்த்தவன் இவன்தான். தாத்தாவுக்குக் கார் டிரைவராக இருந்தான். பிறகு இவனுக்கென்று ஒரு காரை வாங்கிக் கொடுத்து, டாக்ஸி விட்டுப் பிழைத்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்தார். என்மீது இவனுக்கு உயிர்'' என்று சொல்லிக் கொண்டு போனாள். சேகர் போலியாகச் சிரித்தபடி கேட்டுக்கொண்டிருந்தான்.

''...வந்து... இவரு மாப்பிள்ளே ஐயா தானே?'' என்றான் காளியப்பன் சேகரைப் பார்த்துக் கொண்டே சற்று யோசனையுடன்.

''ஆமாம் காளியப்பா, இவர்தான் உன் மஞ்சுளாவின் வருங்காலக் கணவர் சேகர். இவர் கோபால். சேகரின் நண்பர்'' என்று அவன் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தாள் நிர்மலா.

''நாம் காளியப்பனின் டாக்சியிலேயே முல்லைவாசலுக்குப் போய் விடலாம்; என்ன காளியப்பா எங்களைக் கொண்டு விடுகிறாயா? நீ வந்திருப்பது எனக்குப் பரம திருப்தி'' என்றாள் மஞ்சுளா மகிழ்ச்சியுடன்.

வெற்றிலைக் காவி ஏறிக் கறுத்த பற்கள் தெரிய ''நமஸ்காரம் சார்'' என்றான் காளியப்பன். சேகரும் கோபாலும் பதில் வணக்கம் தெரிவித்தனர். இந்த ஓட்டைக் காரில் போக வேண்டுமே என்ற வேதனை வெளிப்படாமல் முறுவலைப் பூசிமறைத்துக் கொண்டனர்.

காளியப்பன் மஞ்சுளாவின் பக்கம் திரும்பி, ''மஞ்சுளாம்மா! இந்தப் பெட்டியைக் கொண்டு போய்ப் பார்சல் ஆபீசிலே 'புக்' செய்து விட்டு அஞ்சு நிமிஷத்திலே வந்துடறேன்'' என்று சொல்லி விட்டுப் பரபரப்புடன் காரின் பின்னால் கட்டப்பட்டிருந்த பெரிய தொரு பெட்டியைத் தூக்க முயன்றான். இவன் ஆதுரத்துக்கு அது அசைந்து கொடுத்தது; அவ்வளவுதான். அவன் ஒருவனால் அதைத் தூக்க முடியாது. ஆனால் தன் இயலாமையை வெளிக்குக் காட்டிக் கொள்ள விருப்பமில்லை அவனுக்கு. மூச்சுக்கட்டித் தூக்க முயன்றான். அவன் அவஸ்தையைக் கண்ட மஞ்சுளா, ''கோபால், கொஞ்சம் அவனுக்கு ஒரு கை கொடுத்து உதவுங்களேன்'' என்று கேட்டுக் கொண்டாள்.

''அதெல்லாம் வேண்டாங்கம்மா '' என்று காளி அசட்டுச் சிரிப்புடன் சொன்னாலும் கோபால் கைகொடுத்த பிறகுதான் பெட்டி நகர்ந்தது. கோபால் அலட்சியமாகத்தான் தூக்கினான். காளி மறுபுறத்தைக் கவனமாகப் பிடித்துக் கொண்டிருந்தும் அவனுக்கு அந்தப் பளு அதிகமாகத்தான் இருந்தது. மங்கிய விதி வெளிச்சத்திலிருந்து பிரகாசமான ஸ்டேஷன் வாசற்படி ஏறும்போது காளியின் கால் படிகளில் நிலை தவறவே அவன் பிடி தளர்ந்தது. பெட்டி பொத்தென்று அவன் பக்கம் கீழே விழுந்தது. கோபாலின் பிடி தளரா விட்டாலும் திடீரென்று காளி பெட்டியை விட்டதனால் ஏற்பட்ட அதிர்ச்சியில் கோபாலின் பிடியிலும் ஒரு

நடுக்கம் ஏற்பட்டது. ஸ்டேஷன் வராந் தாவில் நல்ல வெளிச்சத்தில் பெட்டி தடால் என்று விழுந்தது. அதன் 'பாட் லாக்' தெறித்துச் சிதறியது.

''என்னப்பா, இப்படியா விடுவாங்க?'' என்று சொன்ன கோபால் பெட்டியின் நிலையை அறியக் குனிந்து பார்த்தான். அவன் விழிகள் வியப்பினால் விரிந்தன. ''சேகர், சேகர்! இங்கே வாயேன். இந்த டிரங்கின் மீது உன் பெயரும் சென்னை விலாசமும் அல்லவா போட் டிருக்கிறது! இது உனக்குத்தான் அனுப் பப்பட இருக்கிறதப்பா'' என்றான்.

ஏதோ சிந்தனை வயப்பட்டிருந்த சேக ரைக் கோபாலின் கூவல் ஒரு குலுக்குக் குலுக்கியது.

''என்ன, எனக்கா?'' என்று வியப் புடன் கைத்தடியை ஊன்றியபடி வேக மாகப் பெட்டியின் அருகில் வந்தான், சேகர்.

உண்மைதான், பெட்டியின் மீது சேக ரின் பெயரும் விலாசமும் குறிக்கப்பட்ட காகிதம் ஒட்டப்பட்டிருந்தது. இது எல் லோருடைய வியப்புக்கும் இலக்காகியது. பெட்டியின் பக்க வாட்டில் ரோஸ் நிறச் சாக்கட்டியாலும் சேகரின் பெயர் எழுதப்பட்டிருந்தது.

''ஆச்சரியமாக இருக்கிறதே. இங் கிருந்து எனக்குப் பார்ஸல் அனுப்ப யார் இருக்கிறார்கள்?'' என்று கைத்தடியை ஊன்றி அதன்மீது சற்றே லேசாகச் சாய்ந்து நின்றபடி யோசிக்கலானான், சேகர்.

'விழுந்த வேகத்தில் பெட்டி கலகலத் துப் போயிருந்தது. அதன் பாட்லாக் தெறித்துத் திறந்து கொண்டிருந்தது. 'இப்படியொரு பெட்டி, அதுவும் தன் நண்பன் சேகருக்கு இங்கிருந்து அனுப்ப யார் இருக்கிறார்கள்? இத்தனை பெரிய பெட்டியில் அப்படி என்னதான் இருக் கும்?' என்றெல்லாம் ஆவலும் அக்கறை யும் ஏற்பட்டன கோபாலுக்கு. ஆகவே பாட்லாக் திறந்து கொண்ட பெட்டி யைப் பரிசீலனை செய்ய மறுபடியும் கீழே குந்திட்டு உட்கார்ந்த கோபால் அதன் இடைவெளி வழியே உள்ளே பார்த் தான். அவன் முகம் பீதியினால் வெளுத்தது. கலவரமுடன் ''சேகர்...'' என்று கத்திவிட்டான். உடனே சட் டென்று எழுந்தவனின் முகம் விகார மாக மாறியது. அப்படியொரு பீதி. உடற்பயிற்சிக் கூடத்தின் ஆசிரியரான கோபாலின் உருண்டு திரண்டிருந்த அந்த உடல் கூட பயத்தினால் இலேசாக ஆடி யது. நெற்றியில் வியர்வை முத்துக்கள் வரியிட்டன. ''இந்தப் பெட்டிக்குள்... ஒரு மனி... மனிதன்...'' என்று குழறி



பழிக்குப் பழி !

இரவு மூன்று மணிக்கு போன் கால் வந்தது. அதே தெருவிலிருந்த மூன்றாவது வீட்டிலிருந்து. ''என்னய்யா அநியாயம் உங்க வீட்டு நாய் கத்தின கத்தலிலே தூங்கவே வரலேய்யா!'' என்று சொல்லி விட்டுப் பதில் சொல்லுமுன் போனை வைத்துவிட்டார்.

மறுநாள் இரவு மூன்று மணி. புகார் செய்தவர் வீட்டு டெலிபோன் மணி அலறியது. ''ஏனய்யா! நேத்து ராத்திரி 'என் வீட்டு நாய்' கத்தினதாலே தூக்கமில்லேனு சொன்னீரே! அதற்கு மூன்று மணிக்குத்தானா போன் பண்ணணும்?



இப்பச் சொல்றேன், கேட்டுக்க. என் வீட்டிலே நாயே கிடையாது!''-போனை வைத்துவிட்டார் இவர். -நமுல்

னன். அவனால் தொடர்ந்து பேச முடியவில்லை.

''என்ன, மனிதனா?'' என்று ஏக காலத்தில் பல குரல்கள் கிரீச்சிட்டன.

'தன் பெயருக்குப் பார்ஸல்' என்ற செய்தியின் அதிசயத்தையே அசை போட்டுக் கொண்டிருந்தான் சேகர். பெட்டியும் அதன் உள் அடக்கமும் விஷயங்களைக் கலக்க வைக்கின்றனவே என்ற எண்ணத்தோடு வேகமாகப் பெட்டியின் அருகே சென்ற சேகர் தன் கைத்தடியால் அந்தப் பெட்டியின் மூடியை நெம்பி உயரத் தூக்கித் திறந்தவன் திடுக்கிட்டவனாக அதைச் சட்டென்று மூடினான். உணர்ச்சிகளை வெளியிடாத சேகரின் முகம்கூட வியப்பையும் வெறுப்பையும் வெளிக்காட்டியது.

சற்று முன்புவரை சேகரின் அருகே நின்றுகொண்டிருந்த மஞ்சுளாவும் நிர்மலாவும் இந்தப் புதிய செய்தியால் ஸ்தம்பித்துச் சிலையாகிப் பிரமை பிடித்துப் போய் நின்றார்கள். கலகலப்பான நல்லதொரு சூழ்நிலை திடீரென்று இப்படி விஷம் தீண்டினாற்போல் ஆகிவிட்டதே என்ற வேதனை ஏற்பட்டது மஞ்சுளாவுக்கு. அவளுக்குப் பேசவே சில விநாடிகள் பிடித்தன.

''என்ன... உண்மைதானா சேகர்? பெட்டிக்குள் மனிதனா?'' என்று தவிப்புடன் கேட்ட காதலி மஞ்சுளாவிடம் சேகர் நிதானமாக ''ஆமாம், ஒரு மனிதன்தான். ஆனால் உயிரோடு இல்லை; பிணமாக'' என்றான்.

மஞ்சுளாவும் நிர்மலாவும் பீதியுடன் முகத்தை மூடிக் கொண்டார்கள். அவர்கள் உடல் நடுங்கலாயிற்று. பெட்டியைக் கொண்டு வந்த காளியப்பன் நடுங்கும் கைகளோடு அதைத் திறந்து பார்த்துவிட்டு, உடல் பதற ''இது... இது... அவுங்க...'' என்று தடுமாறியபடி பெட்டியை மூடிவிட்டுத் தள்ளிப் போய் நின்று கொண்டான். தன்னையே எல்லோரும் கவனிப்பதாகப் பட்டது அவனுக்கு. உடல் குன்றிப் போகத் தவிப்புடன் தலை குனிந்தபடி நின்று கொண்டிருந்தான் காளியப்பன். சற்று நேரம் அங்கு பயங்கர அமைதி நிலவியது.

தான் விரும்பா விட்டாலும் தன்னை விரும்பிக் கொலைகள் வருவதை எண்ணியபோது சேகருக்குச் சிரிப்புத்தான் வந்தது. இதற்குள் ரயில்வே ஸ்டேஷன் முழுவதும் இந்தச் செய்தி பரவி விடவே கூட்டம் கூடிவிட்டது. இறந்த மனிதனை நன்றாகப் பார்க்க விரும்பிய சேகர் மறுபடியும் தன் கைத்தடியினால் பெட்டியின் மூடியை நன்றாகத் திறந்தான். சந்தேகத்துக்கு இடமில்லாமல் அது இறந்தவனின் உடல்தான். அந்த மனிதனின் கையையும் காலையும் மடக்கிப் பெட்டிக்குள் அடைத்து வைக்கப் பட்டிருந்தது. வாலிப உடல். நன்றாக உடுத்தியிருந்தான். ஜீவனற்ற வெளுத்த முகத்திலே தலையிலிருந்து வழிந்த ரத்தம் காய்ந்து கறுத்துக் கிடந்தது. பலமுறை பலமாகத் தலையில் அடிக்கப் பட்டதால் மண்டை ஓடு நொறுங்கி இருக்க வேண்டும் என்பதை அனுபவசாலியான சேகர் உடனே தெரிந்து கொண்டான். அந்த வாலிபன் இறந்து பல மணி நேரம் ஆகியிருக்க வேண்டும் என்பதையும் ஊகித்துக் கொண்டான் சேகர்.


இத்தனை நேரம் பிரமை பிடித்துப் போய் நின்று கொண்டிருந்த காளியப்பன் ஏதோ ஒரு சக்தியால் உந்தப்பட்டவனாக நர்ஸ் நிர்மலாவின் அருகில் போய், ''அது... அந்தப் பெட்டியிலே உள்ளது உங்க அண்ணரோட உடல் போலல்ல இருக்கு, பாருங்க'' என்றான்.

யாரோ பிடித்துத் தள்ளியதைப் போல ஒரு தாவலில் பெட்டியினருகில் ஓடிப் போய்ப் பார்த்த நிர்மலா 'கோ' வென்று கதறினாள். அடிவயிற்றிலிருந்து அழுகை கொப்பளித்து வர '' ஐயோ, அண்ணா!'' என்று பதறினாள்.

சேகர் பெட்டியின் மூடியைச் சட்டென்று மூடிவிட்டு நிர்மலாவின் பக்கம் திரும்பினான். துடிக்கும் நிர்மலாவின் உடலை மஞ்சுளா தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

''அது உங்கள் சகோதரனா?'' என்று வியப்பு வழியும் கண்களோடு கேட்டான் சேகர். நிர்மலா பதில் சொல்லவில்லை. சொல்லும் நிலையிலும் அவள் இல்லை. அவள் விம்மலும் அழுகையும் தான் அவன் கேள்விக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தனவே, அது போதாதா?

(தொடரும்)



வரவு ரூ 250
செலவு ரூ 400
வரவு ரூ 25000
செலவு ரூ 400
பேனா; பென்ஸில் இரவல் வேணுமா? நிமிஷத்துக்கு 5 காசுதான்!
தபால் நிலையம்
வேளைக்கு நான் பத்து பேருக்கு அன்னதானம் பண்றேன். உதவி...
யார் அந்தப் பத்து பேர்?
என் மாமனார், மாமியார், மனைவி, என் குழந்தை குட்டிகள்....
கரப்பான் பூச்சியை விரட்டணுமா? எடுங்க ஒவ்வொன்னுக்கும் காசு!
வருமானம் போதவில்லை என்பவர்க்கு மட்டும்!
தேங்காய் துருவித்தர 10 காசு
வாழைக்காய் நறுக்க 5 காசு
துவையல் அரைக்க 30 காசு
சப்பாத்தி மாவு பிசைய 50 காசு
புடவை துவைக்க 60 காசு
உங்க ரேட்டை விட பக்கத்து போர்ஷன்காரர் இரண்டு பைசா குறைவாக வசூலிக்கிறார்! நான் அங்கே போறேன்!
பஸ் வரும் வரையில் நாற்காலியில் உட்காருங்க சார்! ஸீட் ஒன்றுக்கு இரண்டு பைசாதான் வாடகை.
மயிலாப்பூரிலிருந்து மகாபலிபுரம் வரை தள்ளிட்டு வரேன்! கிலோமீட்டருக்கு 250 காசு தான்!
உங்களுக்குப் பதிலாக நான் சினிமா கியூவில் நிற்கிறேன்! சார்ஜ் பத்து ரூபாய் தான்!

மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது!

சிறிய மூர்த்தி, பெரிய கீர்த்தி! 165 லீட்டர்கள் கொள்திறன் உள்ள இந்த அருமையான புதிய ஃப்ரிஜ் வடிவத்திலும் அமைப்பிலும் கோத்ரெஜ் கம்பெனியின் புகழ்பெற்ற தொழில் நுட்பத் திறமைக்கு தக்க சான்று. விற்பனைக்குப் பிறகு இதற்கு கோத்ரெஜின் திறம்பட்ட சர்வீஸ் கிடைக்கும்.

255 லீட்டர்கள் கொள்திறன் உள்ள பெரிய கோத்ரெஜின் புகழ் உங்களுக்குத் தெரிந்ததே. அந்தப் பெரிய கோத்ரெஜின் எல்லா சிறப்பம்சங்களையும் நீங்கள் இந்த விலை குறைவான சிறிய கோத்ரெஜில் பெறலாம்.

காபினெட்டிற்கு இரண்டல்ல, மூன்று தடவைகள் வர்ணப்பூச்சு கொடுக்கப் பட்டுள்ளது


காபினெட் வெள்ளை மற்றும் சாம்பல், இந்த இரு நிறங்களுடன் அழகே உருவாகத் தோற்றமளிக்கிறது. உட்புறம் இளம் பசை நிறத்துடன் கூடியது மற்றும் உறுதியான, பளபளப்பான விட்ரியஸ் எனாமல் மூலாம் கொண்ட எஃகினால் ஆனது. ஆகவே கீறல்கள் ஏற்படாது மற்றும் சுகாதார முறையில் சுத்தமாக இருக்கிறது. மேல் பாகம் கவர்ச்சிகரமான லாமினேட் பதிக்கப்பட்டது. மற்ற அனேக ஃப்ரிஜ்கள் விஷயத்தில் இதற்கு பிரத்யேகமாக பணம் செலுத்த வேண்டியிருக்கிறது.

துருப்பிடிக்காத ஷெல்ஃபுகள்

இதன் ஷெல்ஃபுகளைத் தேவைக்கேற்றபடி கழட்டிப்பொருத்த முடியும். மற்ற அனேக ஃப்ரிஜெரேட்டர்களுக்கு மாறாக, இதன் காய்கறி வைக்கும் 'டிரே' எஃகினால் செய்யப்பட்டது மற்றும் விட்ரியஸ் எனாமல் மூலாமுடன் கூடியது.

சௌகரியமான, ஐஸ் கட்டிகளை எடுக்கும் கருவி

கோத்ரெஜில் மட்டுமே ஐஸ் கட்டிகளை எடுப்பதற்கு கருவி இருக்கிறது. கம்ப்ரெசர் யூனிட் அதிர்வு மிகவும் குறைவானது. கம்ப்ரெசரின் மோட்டார் வோல்ட்டேஜின் ஏற்றத் தாழ்வுக்கு ஈடு கொடுக்கக்கூடியது. மேலும், ஓவர் லோடிலிருந்து பாதுகாப்பளிக்க தனி ஏற்பாடு இருக்கிறது.



இதோ மாபெரும் சிறிய கோத்ரெஜ்


டிகிரிகளில் சரிப்படுத்தக்கூடிய தெர்மோஸ்டாட் உள்ளதால் குளிர்ச்சியை விருப்பம்போல் கட்டுப்படுத்த முடியும்.

கோத்ரெஜ் ரிஃப்ரிஜெரேட்டர்களின் ஸீல்ட் யூனிட்டிற்கு 5 வருட உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. கன்ட்ரோல்ஸ் உட்பட மற்ற பாகங்களுக்கு 1 வருட உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. உடனுக்குடன் திறம்பட்ட சர்வீஸும் கிடைக்கும்.

இலவசப் பிரசுரம்: இலவசப் பிரசுரத்தைப் பெற இந்த விலாசத்துக்கு எழுதுங்கள்: விளம்பர இலாகா, கோத்ரெஜ் அண்ட் பாய்ஸ் மானுஃபாக்சரிங் கோ., பிரைவேட் லிமிடெட், லால்பாக், பம்பாய்-12.

பெரிய மற்றும் சிறிய கோத்ரெஜ் ரிஃப்ரிஜெரேட்டர்களை எங்கள் ஷோ ரூம்களில் காணலாம். உங்களுக்கருகில் உள்ள டீலரின் கடைக்குச் சென்று பார்வையிடுங்கள்.

Godrej கோத்ரெஜ் ®



GB 2135

மறு நாள் 'பாரதமணி'க் காரியாலயத்தில் முரளி இருந்தபோது வட்டிப் பாக்கிக்காகப் பாங்கியிலிருந்து நோட்டீஸ் வந்தது. மிகுந்த வெறுப்புடன் அந்த நோட்டீஸை மேஜை மீது எறிந்துவிட்டு, மேஜை மீதிருந்த ஒரு வெளிநாட்டுத் தபாலைப் பிரித்துப் படித்தான்.

ஜப்பானிலுள்ள ஒரு பிரபல ஆங்கிலப் பத்திரிகை அதிபரின் கடிதம் அது.

முரளியின் அரசியல் கட்டுரைகள் அடங்கிய நூல்களைப் புகழ்ந்து எழுதிவிட்டு, 'பாரதமணி' பணமுடையால் சங்கடப்படுவதற்காகத் தம் வருத்தத்தையும் தெரிவித்து விட்டு, அவருடைய பத்திரிகையில் முரளி பணியாற்றச் சம்மதித்தால், 'கீழ்த்திசை நாடுகளின் அரசியல் துறை ஆசிரிய'ராக அவனை ஏற்பதாகவும்; வாரத்துக்கு இருநூறு அமெரிக்க டாலர்களுக்குச் சமமான சம்பளம் தருவதாகவும், குடியிருக்க வசதியான ஒரு பங்களா தருவதாகவும் எழுதியிருந்தார்.

கடிதத்தைப் படித்துவிட்டு மலைத்தான், முரளி. வாரம் இருநூறு டாலர் என்றால், கிட்டத்தட்ட மாதம், ஆறாயிரம் ரூபாய் சம்பளம்.

ஜப்பான் நாட்டின் பணச் செழிப்பையும், தான் பிறந்த நாட்டின் ஏழ்மையையும் எண்ணிய போது முரளியின் மனத்தில் மிகுந்த வேதனை தோன்றியது. பத்திரிகை ஆசிரியரை, வேறு ஓர் ஆசிய நாடு வரவேற்கிறது; சொந்த நாடு குழி பறிக்கிறது!

கடிதத்தை மேஜைக்குள் போட்டுவிட்டுச் சாமிநாதனைக் கூப்பிட்டான்.

''இன்று ஏதாவது மணியார்டர் வந்ததா?''


''ஐந்து ரூபாய் ஒருவர் அனுப்பியிருக்கிறார்'' என்றான் சாமிநாதன்.

''மொத்தம் எவ்வளவு வந்திருக்கிறது?''

''இருநூற்று நாற்பத்து மூன்று ரூபாய்... சார், இப்படி நன்கொடை பெற்று நாம், 'பாரதமணி'யைக் காப்பாற்ற முடியாது. பாங்கிலிருந்து நோட்டீஸ் வந்திருக்கிறது.... நியூஸ் பிரிண்ட் இன்னும் பத்து நாட்களுக்குத்தான் இருக்கிறது. பாங்கில் அடகு வைத்திருக்கும் நியூஸ் பிரிண்டை எடுக்கப் பணம் வேண்டும்'' என்றான் சாமிநாதன்.

முரளி, பதில் சொல்லவில்லை. திடீரென்று எழுந்தான்.

''நான் ஊருக்குப் போகிறேன். நான்கு நாட்களில் திரும்பி வந்துவிடுவேன்'' என்று கூறிவிட்டு வெளி



யேறினான், முரளி. அவன் போவதையே வெறிக்கப் பார்த்துக் கொண்டு நின்றான் சாமிநாதன்.

*   *   *

ஒரு வாரத்துக்குப் பிறகு ஒரு நாள் இரவு எங்க்மென்ஸ் ஷாப்பில் முரளியை ராஜரத்தினம் சந்தித்தார்.

''மிஸ்டர் முரளி! உங்களை இரண்டு நாட்களாகத் தேடிக் கொண்டிருக்கிறேன். உங்களிடம் தனியாகப் பேச வேண்டும்'' என்று கூறி அவரை அழைத்துக்கொண்டு தம்முடைய காருக்குச் சென்றார். இருவரும் காருக்குள் அமர்ந்தவாறே பேசத் தொடங்கினர்.

''என்னுடைய சொந்த ஊருக்குப் போயிருந்தேன்'' என்றான் முரளி.

''ஏதாவது அவசர வேலையா?''

''எல்லாம் விற்றது போக ஒரே ஒரு வீடு மட்டும் பாக்கி இருந்தது. அதையும் விற்கப் போயிருந்தேன். நாற்பதினாயிரத்துக்கு விற்று விட்டேன்'' என்றான் முரளி, சிரித்துக் கொண்டே. ராஜரத்தினம் முகத்தைச் சுளித்தார்.

''வீட்டை விற்கும்படி இப்போது என்ன அவசரம்?''

''காரையும் விற்று விட்டேன்'' என்றான் முரளி.

''ஓ....! முரளி, நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று பதற்றத்துடன் கேட்டார், ராஜரத்தினம்.


''முதலில் கடன்களை அடைக்க வேண்டும்.''

'''பாரதமணி'...?''

''ஓடும்வரை ஓடும்!''

''பிறகு?''

''தானாக ஓய்ந்து செத்துவிடும்'' என்றான். விரக்தியுடன்



மோகனப் புன்னகை
கோலினஸ் புன்னகை



மூச்சினில் மிளிரும் தூய்மை
மலரும் நாணிடும் அருமை!

தூய இன் மூச்சு! பளிச்சிடும் பற்கள்!
மோகனப் புன்னகை!
கோலினஸ்—வாழ்வுக்கு இனிமை
கூட்டி வாழ்விக்கும் பெயர்!

காலையிலும் இரவிலும் கோலினஸ் சூபர் ஒயிட்
பற்பசையால் பல் துலக்குங்கள்.

ஆஹா...கோலினஸ் சூபர் ஒயிட் டூத்பேஸ்ட்

Regd. User of TM: Geoffrey Manners & Co., Ltd.

சிரித்துக்கொண்டே. அவனை மிகுந்த பரிதாபத்தோடு பார்த்தார் அவர்.

''முரளி! உங்கள் பிடிவாதத்தைக் கொஞ்சம் விடுங்கள். நாட்டையும், மக்களையும் பற்றி நீங்கள் கொண்டதெல்லாம் வெறும் பைத்தியக்காரக் கனவும், கற்பனையுந்தாம். உண்மை நிலையை நீங்கள் ஏற்றுக் கொள்ளவே மறுக்கிறீர்கள். இதுவரையில் இருநூற்று அறுபது ரூபாய்தான் மக்களிடமிருந்து கிடைத்திருக்கிறதாம்.''

''அவற்றையும் அனுப்பியவர்களுக்கே திருப்பி அனுப்பிவிடச் சொல்லி விட்டேன்'' என்றான் முரளி, மிகுந்த எரிச்சலுடன்.

''பேராசிரியருக்கு உங்கள் மீது மிகுந்த அக்கறை இருக்கிறது. இந்தச் சமயத்தில் நீங்கள் வீட்டை விற்றிருக்க வேண்டாம்.''

''!உங்களுக்கு ஐம்பதினாயிரம் கடன் தர வேண்டுமே ?''

''அதற்கு அவசரமில்லையே, முரளி! பேராசிரியர் உங்களைத் தம்முடைய வீட்டிலேயே வைத்துக் கொள்ள ஆவலாயிருக்கிறார். அவருடைய சொத்தில் ஒரு பங்கைப் 'பாரதமணி'க்காகக் கொடுக்கவும் தயாராயிருக்கிறார்'' என்றார் ராஜரத்தினம்.

''சார்...! ஏற்கனவே அவர், என் நண்பன் சிவராமனைத் தம் வீட்டோடு வைத்துக் கொள்ளப் பிரியப்பட்டார். இப்போது, நான்.....''

''எனக்குத் தெரியும்.... ஆனால், இப்போது பேராசிரியர் இப்படி ஆசைப்படுவதில் ! தவறில்லையே?''

''அவர் ஆசைப்படுவதில் தவறில்லை. ஆனால், என் மனம் ஒப்பவில்லை.''

''அப்படியா? நீங்களும் சாரதாவும் நெருங்கிப் பழகுவதைப் ! பார்த்து நான் தப்புக் கணக்குத்தான் போட்டுவிட்டேன்'' என்றார் ராஜரத்தினம்.

''சாரதாவும் சிவராமனும் பழகியபோது நீங்கள் கணக்கு ஏதும் போடவில்லையா?''

''ஓ எஸ்... போட்டேன்... ஆல்ரைட் முரளி, உங்கள் மனத்தைப் புரிந்து கொண்டேன். ஆனால்.... ஆனால்... முடிந்து போன ஒரு விஷயத்தை முற்றிலும் மறந்து விட்டு, ஒரு பெண் புதுப் பாதையில் அடியெடுத்து வைப்பதில் என்ன தவறு?''

''தவறில்லை. ஆனால், என்னுடைய பாதை வேறு'' என்றான் முரளி, அழுத்தமாக.

அவனுடைய மனத்தை எப்போதோ அனுபவித்த ஏமாற்றத்தின் ஆற்றாமை அழுத்திக் கொண்டிருந்தது. சாரதாவைப் பற்றிய பழைய நினைவுகள் நெஞ்சில் மின்னி மறைந்தன.

''ஆல்ரைட் முரளி... இது முழுக்க முழுக்க உங்கள் சொந்த விஷயம். பேராசிரியருக்காக உங்களிடம் பேசினேன். அவ்வளவுதான்'' என்று கூறி விட்டு எழுந்தார்.

மறுநாள் காலையில், 'பாரதமணி'க் காரியாலயத்தில் முரளி மிகுந்த கவலை



எது வேணும்!

நான் பம்பாய்க்குப் போயிருந்தபோது யு.எஸ். ஐ. எஸ். லைப்ரரியில் கண்ட சம்பவம் இது.

வாலிபர் ஒருவர் அங்கிருந்த லைப்ரரியனிடம் சென்று, "நான் அமெரிக்கா போக விருக்கிறேன். அமெரிக்காவைப் பற்றி நன்கு தெரிந்துகொள்வதற்கு நான் என்னென்ன புத்தகங்கள் படிக்க வேண்டும் என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டார். அதற்கு லைப்ரேரியன் பின்வருமாறு பதில் சொன்னார்: "நண்பரே, உங்களுக்கு அமெரிக்காவைப் பற்றி எவ்வளவு தெரியும் என்பதில் அமெரிக்கர்களுக்கு அக்கறை கிடையாது. அந்நாட்டைப் புரிந்து கொள்வதற்குத்தானே நீங்கள் போகிறீர்கள்? உங்கள் நாட்டைப் பற்றி உங்களிடமிருந்து தெரிந்து கொள்வதில்தான் அமெரிக்கர்களுக்கு ஆர்வம் அதிகம் இருக்கும். ஆகவே இந்தியாவைப் பற்றிய புத்தகங்களை நிறையப் படித்துக் கொண்டு போனால் மிகவும் உபயோகமாக இருக்கும்."



ஆதாரம்: பேசும் கடிதம்

தகவல்: சரோஜா ராமச்சந்திரன்

யுடன் தன்னுடைய அறையில் அமர்ந்திருந்தான். அவனுக்கு எதிரே கலைவாணி ஸ்டூடியோவின் அதிபர் மாயாண்டி அமர்ந்திருந்தார். 'பாரத மணி'ப் பத்திரிகையின் அச்சு இயந்திரங்கள் அனைத்தையும் அவருக்கு விலை பேசி முடித்தான். முன் பணமாக ஆயிரத்து ஐந்நூறு ரூபாயை முரளியிடம் நீட்டி, அச்சு இயந்திரங்களின் விற்பனை சம்பந்தமான பத்திரத்தையும் கொடுத்தார். அதை வாங்கியபோது முரளியின் கை நடுங்கியது. பத்திரத்தைக் கண் கலங்கப் படித்தான். அந்தச் சமயத்தில் சாமிநாதன், பரபரப்புடன் அறைக்குள் ஓடி வந்தான். அவன் கையில் ஒரு தபால் இருந்தது.

"சார்...சார்...! உங்களுக்குப் பத்ம பூஷண் பட்டம் கொடுக்க விரும்பி, தில்லி அரசாங்கத்திடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. சிறந்த பத்திரிகை ஆசிரியர் என்பதற்காக உங்களுக்கு இந்தக் கௌரவத்தை அளிக்க இந்திய அரசாங்கம் விரும்புகிறதாம்..." என்று மூச்சு இரைக்கக் கூறினான் சாமிநாதன்.

முரளி, அமைதியாகத் தலையை நிமிர்த்தி, ஒரு முறை சாமிநாதனைப் பார்த்தான். பிறகு குனிந்து மேஜை மீது அவனுக்கு முன்னாலிருந்த பத்திரத்தில் கையெழுத்திட்டு, மாயாண்டியிடம் கொடுத்தான்.

பத்திரத்தை வாங்கிக் கொண்ட அவர், "ரொம்ப சந்தோஷம் சார்! உங்களுக்குப் பத்ம பூஷண் பட்டம் கிடைத்தது தமிழ் நாட்டுக்கே ஒரு பெருமை" என்று கூறிக்கொண்டே முரளியின் கையை வலியப் பிடித்துக் குலுக்கினார். முரளியோ எவ்வித உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாமல் அமைதியாக இருந்தான்.

அவர் வெளியே சென்றதும் "சார்..! இந்தக் கடிதம்..." என்று இழுத்துக் கொண்டே கடிதத்தை மேஜையின்மீது வைத்தான், சாமிநாதன். முரளி அந்தக் கடிதத்தைப் படித்தான். பிறகு சாமிநாதனைத் தலை நிமிர்ந்து நோக்கி, "பத்ம பூஷண் பட்டத்தை ஏற்கும் அருகதை எனக்கு இல்லை!" என்று கூறிக் கொண்டே அந்தக் கடிதத்தைக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் வீசினான்.

* * *

விமான நிலையத்தில் முரளியை வழியனுப்பப் பலர் வந்திருந்தனர். ஒவ்வொருவரிடமும் முரளி விடைபெற்றுக் கொண்டான். ராஜரத்தினத்திடம் வந்ததும், வாஞ்சையுடன் அவன் கைகளைப் பற்றிக் கொண்டார் அவர்.

"முரளி! நீங்கள் எங்கிருந்தாலும், உங்கள் லட்சியம் சுடர் விடும் என்பதில் எனக்கு ஐயமில்லை. என்றாவது ஒருநாள் நீங்கள் நிச்சயம் இந்த மண்ணை நாடி வருவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த நாடு விரைவில் தன் நிலையையும் உணரும்; உங்களைப் போன்ற அறிஞர்களின் பெருமையையும் உணரும். உணர்ந்து உங்களைத் திரும்ப அழைத்தே தீரும்" என்றார்.

"அப்படி என்னை அழைக்குமானால், நான் நிச்சயம் இங்கு ஓடி வந்துவிடுவேன். ஆனால் இன்று நச்சுப் பொய் கையினுள்ளிருந்து தப்பி வெளியேறுபவனைப் போலத்தான் நான் ஓடுகிறேன்" என்று முரளி கூறியபோது அவனுடைய கண்கள் கலங்கின. உதட்டில் சோகப் புன்னகை படர்ந்தது. தாயை விட்டுப் பிரியும் குழந்தையின் ஏக்கம், அவன் கண்களில் நிறைந்தது.

"நாட்டில் பரவிவிட்ட நஞ்சை நீக்கித் தெளிய வைக்கும் ஆற்றல் இப்போது யாருக்கும் இல்லாமல் போகலாம்; ஆனால் என்றாவது தெளியும். அந்த நாள் வந்தே தீரும். நீங்கள் நம்பிக்கை இழந்து விட வேண்டாம்" என்றார் ராஜரத்தினம். ஆனால் முரளி அவநம்பிக்கையுடன் சிரித்தான்.

"இதை வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி விலை உயர்ந்த பேனா ஒன்றை அவனிடம் கொடுத்தார் ராஜரத்தினம்.

நன்றிப் பெருக்குடன் அதைப் பெற்றுக்கொண்டான் முரளி. "நான் எந்


உங்கள் சொந்தப்
பக்குவ முறையைச்
சிறப்பிப்பவை
பிரவுன் & போல்ஸன் மற்றும் ரெக்ஸ்
தயாரிப்பு வகைகள்
REX
JELLY CRYSTALS
LEMON
ரெக்ஸ் ஜெல்லி
க்ரிஸ்டல்.
ஆறு இனிய பழச் சுவைகள். விரைவில் எளிதாகத் தயாரிக்கலாம். குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை யாவரும் விரும்பக் கூடியது.
REX
BAKING
POWDER
ரெக்ஸ் பேகிங் பவுடர்
தின் பண்டங்களை மென்மையாக்க சிறிது சேர்த்தால் போதும். கேக், பிஸ்கோத்து, பகோடா, பூரி, குலாப்ஜாமூன் தயாரிக்க உபயோகியுங்கள்.
Brown & Polson
Custard
பி & பி கஸ்டர்டு பவுடர்
Brown & Polson
6
பி & பி வெரைட்டி
கஸ்டர்டு பவுடர்
Brown & Polson
பி & பி ப்ளேவர்டு
கார்ன் ஃப்ளவர்
Brown & Polson
Patent Cornflour
பி & பி பேடென்ட்
கார்ன் ஃப்ளவர்
கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.
BR.
உங்கள் சமையல் உன்னதமாக இருக்க,
உயர்ந்த சாமான்களையே உபயோகியுங்கள்

தப் பொருளையும் எடுத்துச் செல்ல வில்லை. எல்லாம் போக எஞ்சிய நாற் பதினயிரம் ரூபாயையும் சிவராமனின் அம்மாவுக்குக் கொடுத்து விட்டேன். நான் எடுத்துச் செல்வதெல்லாம் உங்கள் அன்பும் இந்த அருமைப் பேறுவுந் தாம்'' என்றான்.

''நீங்கள் மிகவும் மனம் நொந்து போயிருக்கிறீர்கள். டோக்கியோ பத் திரிகையின் சூழ்நிலை, உங்களுக்கு உற் சாகம் அளிக்கும். நீங்கள் இங்கே வரும் போது உங்கள் மனம் சாந்தி யடைந் திருக்கும்'' என்று கூறி, ஆதரவுடன் முரளியின் தோளை அணைத்தார் ராஜ ரத்தினம்.

பிறகு பேராசிரியர் கமலசாமியிடம் முரளி வந்ததும் அவருடைய கண்கள் கலங்கி விட்டன.

''ஜப்பான் சூழ்நிலையில் எங்களை மறந்து விடாதே, முரளி. டோக்கியோ விலிருந்து வாரம் ஒரு முறை உன்னு டைய கடிதத்தைத் தொடர்ந்து எதிர் பார்த்துக் கொண்டே யிருப்பேன்'' என்றார்.

''உலகத்தின் எந்தப் பகுதியிலிருந் தாலும் நான் பிறந்த பொன் நாட்டை யும், என்னோடு பழகியவர்களையும் மறக்க மாட்டேன். என் நினைவெல்லாம் இந்த மண்ணோடுதான் ஒட்டி யிருக்கும். உங் களுக்குக் கடிதமும் எழுதுகிறேன். அடிக்கடி விலை உயர்ந்த சுருட்டும் அனுப்பி வைக்கிறேன்'' என்றான் முரளி.

''ஓ...! தேங்க்யூ...'' என்றார் கமல சாமி சிரித்துக் கொண்டே.

விமானம் புறப்படுவதற்கான அறி விப்பைக் கேட்டதும் முரளி, பரபரப் புடன் சாரதாவை நெருங்கினான்.

''போய் வருகிறேன், சாரதா...'' என்றான்.

மிகுந்த சிரமத்துடன் புன்னகையை வரவழைத்துக் கொண்டு தலையை அசைத்தாள், சாரதா. இருவரும் ஒரு வரை யொருவர் சற்று நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். இருவர் உள்ளமும் தவித்தன. பேச்சுக்கு இட மில்லை. பார்வையின் ஊமைப் பேச்சில் ஒரு வரலாறே அடங்கி யிருந்தது.

விமான நிலையத்தின் அறிவிப்பு இரண்டாவது முறை கேட்கவே, முரளி புறப்படத் தயாரானான். அவன் மறு பக்கம் திரும்பியதும் அதுவரையில் சாரதா அடக்கி வைத்திருந்த கண்ணீர் குபீரென்று பொங்கி வழிந்து கன்னங் களை நனைத்தது. அவசரம் அவசரமாக யாருக்கும் தெரியாமல் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

விமானத்தை நோக்கி நடந்த முரளி யைச் சாமிநாதன் பின் தொடர்ந்தான்.

''சாமிநாதா! உனக்கு என்னால் செய்ய முடிந்த உதவி அவ்வளவுதான்'' என்றான் முரளி, சற்று வருத்தத்துடன்.

''பத்தாயிரம் ரூபாய் கொடுத்தீர் களே, சார்...! உங்கள் பெரிய மனசை நான் மறக்கவே மாட்டேன்...'' என் றான் சாமிநாதன், நன்றிப்பெருக்குடன்.

''அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு, நல்ல தொழில் ஏதாவது ஆரம்பி.''

''பத்திரிகையே நடத்தலாம் என் றிருக்கிறேன்.... உங்கள் ஆசிதான் வேண்டும்'' என்றான் சாமிநாதன்.

முரளி, வியப்புடன் சாமிநாதனை உற்றுப் பார்த்தான். ''இன்னுமா உனக்கு நம்பிக்கை இருக்கிறது?''

''இருக்கிறது, சார்.''

''எந்தப் பாணியில்? 'காலைக் குரல்' பாணியிலா?''


''உங்கள் நிழலில் வளர்ந்தவன் நான். பத்திரிகை தர்மத்தையும் பண்பாட்டை யும் விட்டுச் சத்தியமாக விலக மாட் டேன்'' என்றான் சாமிநாதன் மிகுந்த உறுதியோடு.

''அப்படியானால் உனக்கும் என் னுடைய கதிதான்'' என்றான் முரளி, சிரித்துக்கொண்டே.

''மக்களின் ரசனைக்குத் தருந்தவாறும் அதே சமயம் பத்திரிகையின் தரம் குறையாமலும் ஒரு புதுப் பாணியில் பத்திரிகையை வெளியிட முடியும் என்று நம்புகிறேன்'' என்றான் சாமிநாதன். அவனைப் பார்த்து முரளி சிரித்தான்.

''என்னுடைய வாழ்த்துக்கள்'' என்று கூறி, சாமிநாதனின் தோளில் தட்டி விட்டு முரளி விமானத்தில் ஏறினான்.





சிதைந்த கூடு



தி. சா. ராஜு

தஞ்சாவூர்ச் சந்திப்பில் இறங்கியதுமே என் கணவர் கூறினார்: "நீ குறிப்பிடுகிற ஊருக்கு நான் போனதில்லை என்பது உண்மைதான். என்றாலும் தியாகராஜ ஸ்வாமியின் ஆராதனையின் பொருட்டு நான் திருவையாறு சென்றதுண்டு. ஆகவே ஒரு டாக்ஸி அமர்த்திக் கொண்டு....."

நான் அவரை இறைஞ்சும் பாவனையுடன் பார்க்கிறேன். "இன்று ஒரு நாள் மட்டும் என் விருப்பப்படி விட்டு விடுங்கள். என் நெஞ்சில் அப்பாவின் நினைவு கிடந்து அலைமோதுகிறது. அந்த ஊருக்கு எப்படிப் போக வேண்டும் என்று அவர் என்னிடம் சொல்லியிருக்கிறாரோ, அதே வகையில் செல்வதைத்தான் நான் விரும்புவேன்." — கூடையிலிருந்த ரோஜா மாலையை எடுத்துக் கொண்டு ஜங்ஷனுக்குள்ளேயிருந்த பிள்ளையார் கோவிலுக்குப் போகிறேன். அதன் கருவறையிலிருந்து துளசியும் கற்பூரமும் மணக்கின்றன. விளக்கொன்று அசையாமல் சுடர் விடுகிறது. இத்தகைய அசையாத சுடரை எத்தனையோ உயர் தத்துவத்துக்கு எடுத்துக்காட்டாக ஞானிகள் கையாண்டிருக்கிறார்கள். பெரிய கருங்கல் சிலை.

ஒற்றை மாட்டு வண்டியில் ஏறி பஸ் நிலையத்தை அடைந்தபோது இருள் பிரிந்துவிட்டது. முல்லைப்பூ, முந்திரிப் பருப்பின் இனிய மணம். "திருவையாற்றுக்கு இரண்டு டிக்கெட்." சாளரத்தின் அருகில் சென்று கேட்கிறார் என் கணவர். "வண்டியிலேயே கிடைக்கும் சார்." கண்டக்டர் பதிலிறுக்கிறார். கீழவீதி வழியாக பஸ் செல்லுகிறது. காற்றிலே முதிர்ந்த கதிரின் நெடி. சமமான சிமிட்டிப் பாதை. இருபுறமும் நெற்கழனிகளும் தென்னந் தோப்பும். ஐந்து ஆறுகளும் நிரம்பி வழிகின்றன. நாற்பது மணித் துளிகள் உருண்டு சிதறுகின்றன. திருவையாற்றில் மறுபடியும் வண்டி ஏறுகிறோம்.

"டக்" என்ற சத்தத்துடன் ஒற்றை மாட்டு வண்டி திரும்புகிறது. எங்கள் தலைகள் மோதிக் கொள்கின்றன. நான் இடதுபுற முள்ள வீடுகளின் இலக்கத்தைப் பார்க்கிறேன். ஐம்பத்திரண்டு வந்ததும் "நிறுத்துப்பா" என்கிறேன். "சற்று இருங்கள்." பழக் கூடையுடன் வீட்டின் இடைகழியில் சென்று நிற்கிறேன். "யாரு?" என்று நடு வயதைக் கடந்த மாதொருத்தி என்னைக் கேட்கிறாள்.

"தெரியவில்லையா?"

"இப்படி உள்ளே வா, அம்மா!"

இரட்டைத் தாழ்வாரம். முன்னால் விசுப் பலகை போட்டிருக்கிறது. அடுத்துப் பெரிய நெற்குதிர். சற்றுத் தள்ளி ஊஞ்சல் பலகை. அவர் என்னை ஏறிட்டுப் பார்க்கிறார்.

"பாட்டி, சௌக்கியமா? நான்தான் சிவராஜனின் பெண்."

அவருடைய முகம் வியப்பினால் மலர்கிறது. ''அடாடா! நீதானா வைஜயந்தி? எத்தனையோ வருஷங்கள் ஆச்சில்லையா உன்னைப் பார்த்து? உக்காரு. இப்பத்தான் வந்தாயா?''

''இப்போது நேரமில்லை, அத்தை! பெரிய வீட்டுக்குப் போய்ச் சாவியை வாங்கிக் கொண்டு திரும்ப வேண்டும். அப்பா வாங்கின வீட்டையே இனிமேல்தான் பார்க்கப் போகிறேன். பாட்டியிடம் சொல்லுங்கள்.''

பெரிய வீட்டின் எதிரே வண்டி நிற்கிறது. என் கணவரும் நானும் இறங்குகிறோம். வாசற் பக்கம் ஏதோ சத்தம் கேட்பதை அறிந்து ஒரு நரைத்த தலை எட்டிப் பார்க்கிறது. பிறகு அதையும் காணோம். இரண்டு பேரும் சேர்ந்தாற்போல் உள்ளே போகிறோம். இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு அந்த நரைத்த கூந்தலை உடைய மூதாட்டி வெளியே வருகிறார்.

''நமஸ்காரம்செய்கிறோம், பாட்டி!'' இரண்டு பேரும் அவருடைய கால்களைத் தொட்டு வணங்குகிறோம். அவருடைய முகத்தில் எத்தகைய மாறுதலும் இல்லை. பிறகு அவராக உள்ளே சென்று ஓர் இரும்புச் சாவியைக் கொண்டு வந்து கூடத்தில் சந்தனக் கல்லின் மேல் வைக்கிறார். என் கணவர் அதை எடுத்துத் தம் கைப் பைக்குள் வைத்துக் கொள்கிறார். ஒவ்வொரு விநாடியும் கனமையாய்க் கனக்கிறது. ''போவோமா?'' என்ற கேள்விப் பாவனையுடன் என் முகத்தை ஏறிட்டுப் பார்க்கிறார் என் கணவர். நான் தலையை அசைக்கிறேன். இரண்டு பேரும் புறப்பட்டு வண்டியில் ஏறிக் கொள்கிறோம். மறுபடியும் பாட்டியின் முகம் ஒரு கணத்துக்குத் தென்படுகிறது. மறைந்து போகிறது. ''விசித்திரமான மனிதர்கள்!'' என்று என் கணவர் முணுமுணுக்கிறார்.

''உண்மைதான்.'' நான் அதை ஆமோதிக்கிறேன். ''என் அப்பாவின் வாழ்க்கையில் அது ஒரு பெரிய குறை. அவர் தம் பெற்றோர்களை மிகவும் நேசித்தார், கௌரவித்தார். கடைசி வரை ஆதரித்தார். ஆனால் என் பாட்டியோ தாத்தாவோ கொஞ்சம்கூட எங்களைக் கவனிக்கவில்லை. இப்பொழுது நுழைந்து திரும்பினோமே, அது எங்களுக்குப் பிதுரார்ஜிதமான வீடு. அதைத் தமக்கு விலைக்கேனும் தரும்படி வேண்டினார் என் அப்பா. அவர்கள் மறுத்து விட்டார்கள். அதனால்தான் செந்தலையில் இன்னொரு வீட்டை வாங்கினார் என் அப்பா.''

வண்டி பரிசல் துறையில் நின்றது. இரண்டு பேரும் கைப் பெட்டியுடன் இறங்கிப் பரிசலில் ஏறிக் கொண்டோம். எதிர்ப்புறம் ஒரே மரகதப் பச்சை, முருங்கை மரம், வெற்றிலைக் கொடிக்கால், நீரைத் துழாவியவாறு படித்துறையை நோக்கினேன். அரச



மரம், அதன் அடியில் உள்ள பிள்ளையார், நவக்கிரகங்கள் அனைத்தும் சிறிது சிறிதாக உருமறைந்தன.

குடமுருட்டியின் கரையில் இறங்கிப் புழுதி மண்ணில் நடந்து பெருமாள் கோயிலுக்கு மூன்றாவது வீட்டை அடைகிறேன். பச்சை வண்ணம் பூசிய வெளிக் கதவு. சிறிய சிமிட்டித் திண்ணை. சாளரத்தின் கம்பிகளில் துரு ஏறத் தொடங்கியிருந்தது. என் இதயத் துடிப்பின் வேகம் அதிகரிக்கிறது. என் தந்தையின் நினைவு நெஞ்சை உறுத்துகிறது. ''சாவியை எடுங்கள்.'' என் குரலில் கமறல் வெளிப்படுகிறது.

என் கணவர் பதறுகிறார். ''ஒரு முட்டாள் தனம் செய்துவிட்டேன் ஜயந்தி. உன் பாட்டி கொடுத்த சாவியைக் கைப் பைக்குள்வைத்துக் கொண்டேன். பிறகு அந்தப் பையையே சந்தனக் கல்லின் மேல் வைத்து மறந்து வந்துவிட்டேன். இப்போது இந்த வீட்டை எப்படியாவது திறந்து விடலாம். ஆனால் அந்தப் பையில் சில முக்கியமான காகிதங்கள் இருக்கின்றனவே.....''

உயிரிழந்தாற் போல் என் கால்கள் தள்ளாடுகின்றன. அமர்ந்து போய் உட்காருகிறேன். 'நான் பஸ்ஸிலும் டாக்ஸியிலும் சென்று கைப் பையை எடுத்துக் கொண்டு இரண்டு மணி நேரத்

துக்குள் திரும்பி வருகிறேன். நீ இங்கேயே இரு.'' என் கணவர் பரபரத்தவாறு விரைகிறார். என் கண் முன்பு ஊரே சுழன்று வருவது போல் தோன்றுகிறது. சுவரில் சாய்ந்து கண்களை மூடிக்கொள்கிறேன். தொலைவில் பஸ் ஒன்று நின்று புறப்படும் ஓசை கேட்கிறது.

தனிமையில் விடப்பட்டதனால் தந்தையின் நினைவுகள் என்னை மேலும் தீவிரமாக மோதின. அதன் வேகத்தைச் சில கணங்களுக்கு முன் தாங்க முடியாமலே போயிற்று. அந்த மனிதரும் அப்படிப்பட்டவர்தானே!

அது ஓர் அழகிய தோட்டம். மலர்ச் செடிகளும், கனி மரங்களும், காய்கறி வகைகளும் அனைத்தும் ஓர் எழிற் குவியல். அந்த நீண்டுயர்ந்த மரத்தில் அப்பா ஒரு பறவை வீடு அமைத்திருந்தார். அதற்குள் பல சிற்றில்கள். பறவை முட்டை இடச் சணல் மெத்தை, நார்ப் படுக்கை. வெளியில் மஞ்சள் வர்ணம் பூசியிருக்கும். நெடு நாட்கள் வரையில் அது காலியாகவே இருந்தது.

குளிர் காலம் தொடங்கும் முன்பு ஒரு காலைப் பொழுதில் அங்கு கிளி ஒன்று வந்து உட்கார்ந்தது. முழுப் பச்சை. கழுத்தில் சிவப்புக் கோடு. அலகுகள் மிளகாய்ப் பழ நிறம். அடுத்து இன்னொரு கிளி வந்தது. இரண்டும் கத்தியும் பறந்தும் விளையாடின.

''ஜானு, ஜானு, கிளி வந்து விட்டது.....'' என்று அப்பா உற்சாகமாய்க் கத்தினார். அம்மாவும் முன்றானையினால் கைகளைத் துடைத்துக் கொண்டே மரத்தின் அருகில் வந்தாள்.

அதற்குப் பிறகு அப்பா தோட்டத்திலேயே தான் வாசம். அலக்கில் ஒரு கூடையைக் கட்டி அதற்குள் ஊற வைத்த கொத்துக் கடலையையும், நிலக் கடலைப் பருப்பையும் நிறைத்து அந்தக் கிளிகளுக்கு அதீரணம் ஏற்படச் செய்து விடுவார்.

பறவைகளைப் பற்றி நிறையப் படிக்கத் தொடங்கினார் அப்பா. ஒரே ஆங்கில சஞ்சிகைகள். வீடு நிறையப் பட்சிகளின் படங்கள். அந்த வருஷம் குளிர் சற்று அதிகம். குளிர் நாட்களில் மழையும் புயலும் கடுமையாக இருந்தன. ஒரு நாள் அடித்த புயலில் அந்த மரமே முறிந்து போயிற்று. கிளி தன் குடும்பத்துடன் நாசமடைந்து விட்டது.

அப்பா மூன்று நாட்கள் சாப்பிடவில்லை. அருட்பாவே கதி என்றிருந்தார். அதற்குப் பிறகு வீட்டிலிருந்த பறவைகளின் படங்கள் எல்லாம் மறைந்து விட்டன. 'மாநிஷாத' என்ற வால்மீகியின் சுலோகத்தைத் தொடக்கமாக வைத்துக் கொண்டு கிரௌஞ்ச பட்சிகளை வர்ணித்து அப்பா ஒரு கதை எழுதினார். அது சிறுகதை இலக்கியத்திலேயே அழியாத ஓர் இடம் பெற்று விட்டது. அதற்காகத்தான் அந்தக் கிளிகள் அவருடைய வாழ்க்கையில் குறுக்கிட்டனவோ? ஆனால் அந்த மொட்டை மரம் இருந்த இடத்தைப் பார்க்கும் போதெல்லாம் என் அடி வயிற்றில் குழிவிழும். அம்மா அந்த மரத்தை அகற்றச் செய்தாள். அதன் அடிக்கட்டை மட்டும் காயவே இல்லை.

மாலை மணி ஐந்து இருக்கும். இன்னும் சந்துரு அண்ணா பள்ளியிலிருந்து திரும்பவே இல்லை. அப்பா தோட்டத்தில் மண்ணைக் கிளறிக் கொண்டிருக்கிறார். காலர் வைத்த பனியன், காக்கி அரை நிக்கர், கையில் கிளோக் கொட்டு. இருக்கிற பயிர் நிலம் பற்றாதென்று மரப் பெட்டிகளில் எல்லாம் மண்ணை நிறைத்து அதிலே செடிகளைப் பயிரிடுவார் அப்பா. தண்டின் கனம் தாங்காமல் கனமுள்ள காய்கள் துவளும். பயிராகும் காய்கறிகளை யெல்லாம் அண்டை வீட்டினருக்குக் கொடுத்துவிட்டு வரவே வேலையாளுக்குப் போது சரியாக இருக்கும்.

கேட்டுப் பக்கத்தில் சைக்கிளில் வந்து ஒருவன் நிற்கிறான். அவன் கொடுத்த கடிதத்தைப் பார்த்துவிட்டு அப்பா உடையை மாற்றிக் கொண்டு பரபரப்புடன் செல்லுகிறார். ஒரு மணி நேரம் கழித்து அவர் திரும்பும் போது கூடச் சந்துரு அண்ணாவும் இருக்கிறான். அவனுடைய முகம் வாடி இருக்கிறது. அப்பா அன்று இரவு சாப்பிடும்போது கூட யாருடனும் பேசவில்லை.

இரவு உணவுக்குப் பிறகு அப்பா ஒவ்வொருவருக்கும் தேனிலிட்ட நெல்லிக்கனி ஒன்று கொடுப்பது வழக்கம். ஒன்றை அண்ணாவுக்கும் கொடுத்துவிட்டு அவனை ஏறிட்டுப் பார்க்கிறார். மேஜை இழுப்பறையிலிருந்து சாவிக் கொத்தை எடுத்து அவன் முன்பு நீட்டி, ''எவ்வளவு பணம் தேவையோ எடுத்துக் கொள். ஆனால் தலைமை ஆசிரியரிடம் உண்மையை ஒப்புக் கொண்டுவிடு'' என்கிறார். சந்துரு அப்பாவை முறைத்துப் பார்க்கிறான். ''நான் பணத்தைக் கையாடவில்லை அப்பா!'' என்று துணிவுடன் கூறுகிறான்.

''நாளை விசாரணையின் போது தெரிந்து விடும்.'' அப்பா சினத்துடன் பதிலிறுக்கிறார்.

மறு நாள் சந்துரு அண்ணா வருவதைத் தொலைவிலிருந்து பார்த்து ''வெளியே நில்'' என்று கூவுகிறார் அப்பா. அவன் குனிந்த தலையுடன் தரையைக் கீறுகிறான். ''இனிமேல் நீ இந்த வீட்டுக்குள் நுழையக் கூடாது. பொய் பேசுபவர்களுக்கு இந்த வீட்டில் இடம் இல்லை.'' சந்துரு அண்ணா புத்தகப் பையை வாசற்படியில் வைக்கிறான். அதன் மேல் ஊற்றுப் பேனா, விரலில் அணிந்திருந்த மோதிரம். அவன் திரும்பி நடக்கிறான்.

அவன் எங்கே போனான்? யாருக்குமே தெரியாது. எத்தனையோ வருஷங்கள் ஓடி விட்டன. அம்மா மட்டும் அந்த மோதிரத்தை நெஞ்சில் அழுத்திக் கொண்டு கண்ணீர் வடிப்பாள். ஆனால் அப்பாவைக் கண்டால் முக பாவத்தை மாற்றிக் கொண்டு விடுவாள். அப்பா அதற்குப் பிறகு அண்ணாவைப் பற்றிப் பேசியதே இல்லை.

ஜன்னலடியில் உட்கார்ந்து கைகளைக் காய்ச்சியவாறு உட்கார்ந்திருக்கிறார் அப்பா. வெளியில் பனியும் மழையும் கொட்டுகிறது. நெருப்பில்லாமல் வாழ்வதே அசாத்தியம்.

வாசலில் யாரோ வரும் சத்தம் கேட்கிறது. அப்பாவுடைய நண்பர் மனோகர ராவ் அது. அப்பாவுக்கு மிகவும் பிடித்தமானவர். அவரோடு நேரம் போவதே தெரியாமல் பேசிக் கொண்டிருப்பார். மனோகர ராவ் ஒரு பிரும்மச்சாரி. தமது வாழ்க்கையையே


டிமோகிராட்

PNB-CBI-116-70A TM

இன்னமும் நாங்கள் வெறும் பணக் கோட்டையாக இல்லை!

இன்றோ ஒரு சமூகப-பொருளாதார நிறுவனமாக நாங்கள், பல கோடி மக்களின் பொருளாதார விடுதலையே குறியாகக் கொண்டு உற்ற பங்கை ஆற்றி வருகிறோம்.

பண அலுவல்களை மட்டுமின்றி, பற்பல பணிகளை நடத்தி வருகிறோம். 900க்கு மேற்பட்ட எங்கள் கிளைகள், நல்வாழ்வு நாடுவோரின் முயற்சிகளுக்கு பக்கபலமாகப் பணியாற்றுகின்றன. பண்ணையிலும் சரி, பாடுபட்டு உழைக்கின்றோம்



நாட்டுக்காக. அந்நியச் செலாவணி ஈட்ட துறைமுகங்களிலே செயல்பட்டு வருகிறோம்; உயர் கல்வியையும் தொழில் நுட்ப அறிவையும் ஊக்குவிக்கிறோம். எந்தத் துறையிலும் பணமே எல்லாமாகிவிடுவது இல்லை என்பதை உணர்ந்தவர்கள் நாங்கள். ஸெண்ட்ரல் பாங்குக்குத் தனித் தன்மை தருவது இந்த உணர்வே.

நாட்டை உருவாக்கும் இந் நற்பணியினை நாடி வந்தடைவீர் எங்கள் ஸெண்ட்ரல்.

ஸெண்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

தலைமை அலுவலகம் : மகாத்மா காந்தி ரோடு, பம்பாய்-1

பொறுப்புடன் மக்களின் இருப்பிடம் தேடிச் செல்லும் பாங்க்

பொதுத் தொண்டுக்காக அர்ப்பணித்தவர். அவர் வாழ்வதே மருத்துவத்துக்காக. நகரத்தின் ஒலைமுடுக்குகளுக்கும் குப்பத்துக்கும் சேரிக்கும் தமது மருந்துப் பெட்டியுடன் சென்று வருவார். குடிசைவாழ் மக்களுக்கு இலவசமாக மருந்து கொடுப்பார். இதிலே வேடிக்கை என்னவென்றால் பல பிரசித்தி பெற்ற அலோபதி டாக்டர்களின் மனைவி, குழந்தைகள் ஆகியோர் இவரிடம் வந்து சிகிச்சை பெற்றுத் திரும்புவதுதான்.

நான் பக்கத்தறையில் உட்கார்ந்திருக்கிறேன். அவர்கள் பேசுவது எனக்கு நன்றாகக் காதில் விழுகிறது; புரிகிறது.

"இவ்வளவு துயரங்களையும் ஏமாற்றங்களையும் பொறுத்துக் கொண்டு உங்களால் எப்படி எப்போதும் சந்தோஷமாக இருக்க முடிகிறது?" அவர் கேட்கிறார்.

அப்பா பெருமூச்சு விடுகிறார். "நமக்கு முன்னால் ஒருத்தன் பிறந்தான் — ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு. அவன் பிறந்ததே சிறைச்சாலையில். பிறந்த உடனே அவனுடைய தகப்பனாரே கொட்டுகிற மழையில் அவனைச் சுமந்து சென்று ஒரு சேரியில் விட்டுத் திரும்பி விட்டார். அந்தக் குழந்தை தான் ஓர் அரசகுமாரன் என்பதை அறியாமலேயே வளர்கிறது. அதை எப்படியாவது கொன்றுவிட வேண்டும் என்று அவனுடைய மாமனே திட்டமிடுகிறார். அந்தக் குழந்தை எளிய குருகுலத்தில் கல்வி பயிலுகிறது. பிறகு அவனுடைய வாழ்க்கையில் எவ்வளவோ சிக்கல்கள். எப்போதுமே தோற்றுக் கொண்டிருக்கும் ஒரு கட்சிக்குத் துணை செய்து அதன் விளைவாக அவர்களுடன் இவனும் காட்டில் அலைகிறான்.

"......என்றாலும் ராவ்ஜீ, உலகத்துக்கே என்றும் பொருந்தக்கூடிய உண்மைகளைச் சொல்ல வேண்டும் என்று எண்ணிய அந்தப் பெரும் அறிவாளி வியாசர் அதற்காக இந்த நாயகனைத் தேர்ந்தெடுத்தார். அவனும் அதை அழகாகச் செய்தான். அனலும் புனலும் அழிக்க முடியாத ஒரு தத்துவம் இந்த அழுக்கான உடலில் உறைகிறது என்று எவ்வளவு உறுதியுடன் கூறுகிறான் அந்த மன்னன்!"

என் உடம்பு புல்லரிக்கிறது. அப்பா ஏதோ பழக்கத்தின் தோஷமாகத்தான் கீதையைப் படிக்கிறார் என்று எண்ணியிருந்தேன். அதிலே இவ்வளவு ஆழம் இருக்கிறதா? அவர் தொடர்ந்து பேசுகிறார். "வாழ்க்கையிலே துயரம் அனுபவிக்காமல் உண்மையைக் கண்டுபிடித்துவிட முடியுமா? எது சுகம், எது துக்கம் என்று எப்படி முடிவு செய்வது? முதல் துண்டு அல்வா இனிப்பாக இருக்கும். முப்பதாவது அல்வாத் துண்டை எத்தனை பேர் ரசித்து உண்ண முடியும்?" எனக்குச் சிரிப்பு வருகிறது.

அந்த ஆண்டு விடுமுறை எடுத்துக் கொண்டு அப்பா தென்னாட்டுக்குப் போவதாக இருந்தார். ஒவ்வொரு தடவையும் அப்பா எங்களையும் அழைத்துக் கொண்டு பல இடங்களுக்குச் செல்லுவார். கஜுராஹோ, தில்வாரா, உதயபூர், ஆஜ்மீர் என்று எவ்வளவோ அழகிய இடங்கள். அவைகளில் வரலாற்றுத் தொன்மையும் இருக்கும், தலப் புனிதமும் உண்டு.



"இந்தத் தொழிலில் நீ பழம்பெருச்சாளி என்பதை ஒப்புக் கொள்கிறேன். அதற்காக..'?"

'இந்தத் தடவை தென்னாட்டில் என்ன விசேஷம்?" அப்பாவின் பெட்டியில் துணிமணிகளை அடுக்கியவாறே கேட்கிறாள் அம்மா. அவளுக்குத் தானும் கூடப் போக வேண்டும் என்று ஆசை.

"பாரி முனையில் வரதராசா வஸ்திராலயத்துக்குப் பக்கத்தில் புதிதாக ஒரு கடை திறந்திருக்கிறார்களாம். அதிலே ஒன்றுக்குள் ஒன்று போடும்படியாக ஏழு எவர்சில்வர் டப்பாக்கள். அதிலே இருக்கிற கடைசி டப்பாவின் அளவு...."

"போதும், போதும். எனக்கு எவர்சில்வர் டப்பா வாங்குவதற்காக நீங்கள் ஆயிரம் ரூபாய் செலவு செய்து கொண்டு சென்னைக்குப் போக வேண்டாம்." அம்மா சிணுங்குகிறாள்.

"பெண் ஒன்றைப் பெற்றிருக்கிறோமே தாயே. அவளுக்கு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டாமா? வீடு வேறு வாங்கியிருக்கிறேன். அதைச் செப்பனிட வேண்டும். கொல்லையில் நாலு தென்னங்கன்றுகளையாவது நட்டால்தான் பலன் கிடைக்கும். என் கருத்துக்கள் சில பதிப்பாளர்களிடம் தேங்கிக் கிடக்கின்றன. அவர்கள் அவற்றை வெளியிடவும் மாட்டேன் என்கிறார்கள், திருப்பித் தரவும் இல்லை. ஆக மொத்தம் இது 'மல்டி பர்ப்பஸ்' திட்டம். உனக்கு என்ன வேண்டும்? காமாட்சி அம்மன் கோயில் குங்குமம்தானே, வாங்கி வருகிறேன்" என்று அப்பா சிரிக்கிறார்.

" நீங்கள் யாருடனும் சண்டை போட்டுக் கொள்ளாமல் திரும்பி வந்தால் போதும். பூர்விகமான வீடு இருக்கும் போது வேறு ஊரில் ஏன் குடி அமைக்கிறீர்கள் என்று யாரும் கேட்பார்கள். அப்போது எவரையும் குறை சொல்லாதீர்கள்."

அப்பாவின் முகம் சிவக்கிறது. "கண்ணன் பஞ்சபாண்டவர்களுக்காக வழக்காடியதைப்

போல் வாழ்ந்திட்டேன் ஜானு. இது நமது முன்னோர்களின் வீடு. இதற்கான கிரயத்தைத் தந்து விடுகிறேன். நான் இதுவரையில் உங்களுக்குக் கொடுத்ததெல்லாம் விட்டுவிடுவோம். நீங்கள் இருக்கும் வரையில் இங்கேயே வாழ்ந்து கொண்டிருங்கள் என்று வேண்டுவேன். உன் மாமியார் ஒத்துக் கொண்டால்தானே !''

''பெரியவர்களை ஒன்றும் சொல்ல வேண்டாம். நாம் கொடுத்து வைத்தது அவ்வளவு தான். மூதாதையர்களின் சொத்தை ஆள நமக்குப்பின் யார்.....?'' — அவள் வார்த்தையை முடிக்கக்கூட இல்லை. முகத்தை முன்றானையால் மூடிக் கொண்டு பக்கத்து அறைக்குப் போகிறாள். அவள் விம்மும் ஒலி கேட்கிறது. அப்பா ஜன்னல் வழியாக அந்த மொட்டை அடிமரத்தைப் பார்க்கிறார்.

ஒரு மாதம் கழித்து அப்பா திரும்பி வந்த போது வெகு உற்சாகமாகக் காணப்பட்டார். ஒவ்வொரு நிமிஷமும் ஏதாவது குறும்புப் பேச்சு, வேடிக்கை, இசை, தாளம் சுலோகம், அம்மாவுக்கும் எனக்கும் பல்வகைப் பொருள்கள் வாங்கி வந்து குவித்திருந்தார். ஊரிலிருந்து வந்து ஒரு வாரத்துக்கெல்லாம் காலை வேளைகளில் உட்கார்ந்து ஆழ்ந்து எழுதத் தொடங்கினார். அதற்கு முழு வடிவம் கொடுத்துப் பத்திரிகையில் வெளியிட்டார். ஒரே பாராட்டுரைகள் வந்தன.

''யார் அந்தப் பெண்? அவ்வளவு உயர்வாக வர்ணித்திருக்கிறீர்களே?'' குறும்புச் சிரிப்புடன் கேட்கிறாள் அம்மா.

அப்பாவின் உடம்பு பூரித்துப் போகிறது. 'அவளை எப்படி வர்ணிப்பேன் ஜானு? ரவிவர்மா ஒரு படம் எழுதியிருப்பாரே, உள் கச்சம் வைத்து மராட்டிய முறையில் சேலை உடுத்திய தமயந்தி, அதைப் போலவே இருந்தாள். அவளுடைய பேச்சே சங்கீதம், ஒவ்வொரு கமகத்திலும் கமாஸ், அசைவிலே அசாவேரி. இப்படி ஓர் உருவத்தை எப்படித் தான் படைத்தானோ இறைவன் ?''

''அவளுக்கு எத்தனை குழந்தைகள் ?'' உணர்ச்சியை அடக்கிக் கொள்கிற பாவனை அம்மாவின் முகத்தில் பளிச்சிடுகிறது.

''குழந்தைகளா? அவள் கல்யாணமே செய்து கொள்ளவில்லை. இசைக்கும் நாட்டியத்துக்குமே தன்னை அர்ப்பணித்துக்கொண்டவள் அவள். அவள் நடத்தி வரும் பள்ளியின் ஆண்டு விழாவிலேதான் நான் தலைமை வகித்தேன். நீ ஒரு தரம் அவளைப் பார்த்தால் சொல்லுவாய்.'' அத்துடன் அன்றைய உரையாடல் முடிந்தது. ஆனால் அப்பாவுக்கு வரும் பாராட்டுக் கடிதங்களை யெல்லாம் அம்மா படிக்கத் தொடங்கினாள். அவள் பெருமூச்சு விடுவதைக் கண்டால் எனக்கும் பரிதாபமாக இருக்கும். இதை எல்லாம் புரிந்து கொள்ள எனக்கும் வயதாகிவிட்டதல்லவா ?

பாராட்டுக் கடிதங்களுக்கெல்லாம் அப்பா பதில் எழுதாமலே இருக்க மாட்டார். அவைதாம் என் உள்ளத்தை வளர்க்கும் தண்ணீர் என்று கூறுவார். இந்த மங்கையிடமிருந்து வரும் கடிதங்களின் எண்ணிக்கை பெருகிற்று. அப்பாவும் எழுதிக் கொண்டே போனார்.

அன்று வெள்ளிக்கிழமை. அம்மா வழக்கத்தையும்விட அதிக நேரம் தேவி பூஜையில் ஈடுபட்டிருந்தாள். அப்பா வந்து உடை மாற்றிக் கொண்டபின் கற்பூர ஆரத்தி பெற்றுக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தார். சாப்பிட்ட பிறகு அம்மா அவருக்குத் தாம்பூலம் தந்தாள். பிரசாதத் தட்டை அவரிடம் கொடுத்து வணங்கினாள். ''என் நெற்றியில் குங்குமம் இடுங்கள்'' என்றாள் அம்மா. ''என்ன விசேஷம் ?'' என்று கேட்டுக் கொண்டே செந்தூரத்தைத் தீற்றினார் அப்பா. அம்மா அவர் தோளில் சாய்ந்து விட்டாள். அவள் பூஜை செய்த கடைசி வெள்ளிக்கிழமை அதுதான்.

அப்பா பல நாட்களுக்குப் பேசும் ஆற்றலையே இழந்துவிட்டார். எல்லாம் சைகை தான். அப்பாவின் பார்வை மொட்டை அடிமரத்தின் மேலேயே பதிந்திருந்தது.

அதற்குப் பிறகு அப்பா வாழ்ந்த சில நாட்கள் எல்லாம் என் பொருட்டுத்தான் என்று நினைக்கிறேன். எனக்குத் திருமணம் முடிந்த மறு வாரமே புறப்பட்டுப் போய்விட்டார். அவர் திரும்பி வரமாட்டார் என்று மட்டும் எனக்குத் தோன்றியது. அப்படியே ஆகிவிட்டது.

வாசற்படியில் ஏதோ நிழல் தட்டுப்பட்டதும் திரும்பிப் பார்த்தேன். கையில் இளநீருடன் ஒரு சிறுவன் நின்று கொண்டிருந்தான். ''யார் நீ?'' நான் வினவினேன்.

''தேனுமணி அம்மா கொடுத்து அனுப்பினார்கள்.''

எனக்குச் சுரீர் என்றது. அந்தப் பெயர் எதையோ நினைவூட்டிற்று. ''யார் அது தேனுமணி அம்மாள்?''

''புதிதாய் மேல வீதியில் வீடு வாங்கியிருக்கிறார்களே, அந்த அம்மாள்.'' இதற்குள் அந்த அம்மாளே வந்து விட்டார். விரித்த கூந்தல், சிவப்புக் கரை உடைய வெள்ளைப் புடவை. தந்தத்துக்கு மெருகு போட்டது போன்ற நிறம். அப்பா வர்ணித்த அதே தோற்றம். உள் கச்சம் வைத்த மராட்டியப் பாணி. அசைப்பிலே ரவிவர்மாவின் தமயந்தி மாதிரியே இருந்தது.

''நீங்கள்தான்..... நீங்கள்தான்....'' நான் மேலே பேச முடியாமல் விக்கினேன்.

''ஆமாம். வைஜயந்தி நானேதான்.'' அவர் பதிலிறுத்தார். அந்தக் குரலைக் கேட்டு நான் சொக்கியே போனேன். ஒவ்வொரு சொல்லின் அழுத்தத்திலும் திருப்பத்திலும் இசையின் ஜிலுஜிலுப்பு இருந்தது. அவர் பாடினால் எப்படித்தான் இராது !


''பூம் பூம்'' என்று டாக்ஸி ஒலித்தது. கைப் பையுடன் என் கணவர் காரின் கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்டார். ''இந்தா, வைஜயந்தி, சாவி !'' அவர் அந்த நீண்ட திறவுகோலை வெளியில் எடுத்தார்.


தேனுமணி அம்மாளின் முகத்தை ஏறிட்டுப் பார்த்த போது இனி அந்தத் திறவுகோலுக் குத் தேவையே இராது என்று தோன்றியது.



திருமணம்

தெற்கு ரயில்வே, சீப் இன்ஜினியர் ஆபீஸ் (கன்ஸ்ட்ரக்ஷன்) சென்னை ஸ்ரீ கே. வி. நாராயணமூர்த்தி அவர்கள் குமாரத்தி செல்வி மல்லிகாவுக்கும் பெங்களூர் ஹிந்துஸ்தான் ஏரோநாடிக்ஸ், அவின் டெபுடி சூப்பரின்டெண்ட் ஸ்ரீ வி. சுவாமிநாதன் அவர்கள் குமாரரும், பாரத் எர்த் மூவர்ஸ் லிமிடெட், K. G. F. சார்ந்த ப்ரொஜக்டில் எஸ். அனந்தநாராயணன் B.E.க்கும் சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!


SOAP



தாத்தாவுக்கு மூன்று நாட்களாகக் காய்ச்சல் ; இருமலும் நீர்க் கோவையும் வேறு. உடல் நலம் நன்றாக இருந்த காலத்தில் மாலையில் 'வாக்கிங்' செல்லுவார். பூங்காவில் அவரையொத்த படுகிழங்களுடன்சேர்ந்து கொண்டு, பொன்னான அந்த நாட்களைப் பற்றி அரட்டையடிப்பார்.

எழுபத்தைந்து வயதாயிற்றே! 'அக்கடா' என்று இருக்கக் கூடாதா? வீட்டு விவகாரம் இவருக்கு ஏன்? ஏதோ 'இராமா கிருஷ்ணா' என்று மூலையில் ஒடுங்கிக் கிடக்க வேண்டியது தானே! அது ஏன்? இது ஏன்? அது எப்படி ? இது எப்படி?' என்று தொண தொணப்பார் எங்களிடம். எங்களுக்கோ படுஎரிச்சல். அப்பாவின் முகத்தைப் பார்த்துச் சும்மா யிருந்தோம்.

''லொக் லொக்'' தாத்தா இருமினார். வேண்டும் என்று வருவித்துக் கொண்டு போடும் சத்தம் இது! எங்கள் கவனத்தைக் கவர !

போனால் போகிறது என்று இரக்க உணர்வாலோ, எக்ஸ்பிரிமெண்டலாகவோ, அம்மா கஷாயம் ஒன்றைத் தயாரித்துத் தாத்தாவுக்குத் தந்தாள். தாத்தா அதை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.


அப்போதுதான் மாது வந்தான். 'என்னை யார் கவனிக்கிறாங்க? எல்லாம் சம்பாதிக்கிற வரையில்தான்' என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டிருந்தார் தாத்தா.

''வாடா! எப்ப வந்தே?'' என்று மாதுவை வரவேற்றேன் நான்.


''இன்னைக்குத்தான் வந்தேன். தாத்தா ஏதோ கூச்சல் போடுகிறாரே, என்னவாம்?''

''நீயே அவரைக் கேட்டுக்கோ....'' என்று அவனைக் கிழவரிடம் அனுப்பி நான் ஒதுங்கிக் கொண்டேன். மாது என்னுடைய நண்பன். ஹவுஸ் சர்ஜனாக இருக்கிறவன். மாது, தாத்தாவுக்கு அருகே உட்கார்ந்து, அவருடன் பேசிக் கொண்டிருந்தான்; உண்மையில் அவன் பேசியது குறைவுதான். தாத்தாதான் போரடித்துக் கொண்டிருந்தார். கால்மணி நேரம் கழித்து அவன் ஹாலுக்குத் திரும்பினான். ஹாலில் அம்மா, நான், சீனு, தங்கை மாலா அனைவரும் உட்கார்ந்திருந்தோம். தாத்தாவிடமிருந்து எங்களிடம் வந்த மாது அம்மாவைப் பார்த்து, ''கொஞ்சம் இப்படி வாங்க'' என்று அவளை அடுத்த அறையண்டை அழைத்துச் சென்று கசமுச வென்று ஏதோ சொன்னான். இரண்டு நிமிடங்கள் பொறுத்து மீண்டும் தாத்தாவிடம் சென்று

மருந்து யாருக்கு?



கா.ப.ரா.



உட்கார்ந்தான். உட்கார்ந்த அடுத்தகணமே, "டேய், சீனு!" என்று அழைத்தான்.

"தாத்தாவுக்குச் சில மருந்துகள் வேணும்டா சீனு! சீட்டில் எழுதியிருக் கிறேன். இங்கெல்லாம் கிடைக்காது. மவுண்ட் ரோட்டில்தான் விற்கிறார்கள்!" என்று சீனு விடம் சீட்டைத் தந்தான் மாது. அந்தச் சீட்டை வாங்கிப் பார்த்தேன்.

மாது சீட்டில் என்ன எழுதியிருக்கிறான் என்று ஒன்றும் புரியவில்லை.

"என்ன மருந்து எழுதியிருக்கே?" என்று கேட்டேன்.

"என்னன்னு சொன்னா உனக்குப் புரியும்? சீனுகிட்ட ஒரு ரூபாய் முதல்லே கொடு. எந்த மருந்துக் கடையில் கிடைக்கும் என்று போன் செய்து கேட்கட்டும்.." என்றான் மாது. நான் சீனுவிடம் ஒரு ரூபாய் தந்தேன். சீனு வெளியே போனான் போன் செய்ய. மாது தாத்தாவிடம் மறுபடியும் அரட்டை படிக்க ஆரம்பித் தான். நான் அங்கிருந்து நழுவினேன்.

பத்து நிமிடங்கள் கழித்துச் சீனு திரும்பி னான். "மாது! என்னப்பா மருந்து எழுதிக் கொடுத்திருக்கே! மவுண்ட்ரோடு பார்மஸிகள் எதிலும் ஸ்டாக் இல்லையாம். டவுனிலும் இல்லையாம். மாம்பலத்தில் மட்டும் ஒரு கடையில் இருக்கிறதாம்!" என்றான் சீனு.

"ஒரு பாட்டில் சாப்பிட்டால் போதும், ஆறு மாதம் வரை காய்ச்சல், சளி, தலைவலி, இருமல் என்று எதுவும் அணுகாது. முதல்தர 'ஆன்டிபயாடிக்ஸ்' மருந்து!

"மருந்து என்ன விலையாகும்?" என்று தாத்தா கேட்டார்.

"அசல் விலை முப்பது. மேற்கொண்டு பத்து ரூபாய் தரணும்! மொத்தம் நாற்பதாகும்!"

"நாற்பது ரூபாயா?" என்று மலைத்தார் தாத்தா.

"என்ன பெரிய நாற்பது? உங்கள் உடல் குணமடைய நாற்பது ரூபாய் என்ன பிர மாதம்? நானூறானாலும் பரவாயில்லை என்று அத்தை சொல்றாங்க!"

பணிவுடன் தாத்தா முன் வந்த அம்மா, "ஆமாம் மாமா!" என்றாள். அம்மாவின் மனமாற்றத்தை என்னால் நம்பவும் முடிய வில்லை; நம்பாமலும் இருக்க முடியவில்லை. தாத்தாவுக்குப் பொடி வாங்கக் காசு தர மூக்கால் அழுகிற அம்மாவா நூறு ரூபாய் வரை செலவு செய்யத் தயார்?

"தாத்தா, கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துக் கோங்க! நாங்க மாம்பலம் போய் மருந்து வாங்கி வரோம்!" என்று மாது என்னையும் சீனுவையும் அழைத்துக் கொண்டு வெளியே வந்தான்.

"மாம்பலத்துக்கு எப்படிப் போவது? பஸ்ஸா, ரயிலா?" என்றேன்.

"முதல்லே உட்லண்ட்ஸ் சங்கர் பவனுக்குப் போகலாம்... அப்புறம் ஒரு மணி நேரம் எங்கேயாவது நேரத்தைக் கடத்தணும்!" என்றான் மாது.

"ஏன்?"

"மாம்பலம் போய் வந்தது போல் தாத்தா வுக்குக் காட்டணும்! அதற்காகத்தான்!"


"மருந்து வாங்க மாம்பலம் போக வேண் டாமா?"

"மருந்து உண்மையில் அவருக்கு வேண் டியதில்லைடா. தாத்தாவுக்குச் சாதாரண காய்ச்சல்தான். ஓர் இன்ஜெக்ஷன் போட் டால் போதும். அவருக்கு மனம்தான் சரி யில்லை. ஒரு காலத்திலே நன்றாகச் சம்பா தித்து, வயதானபின் வருமானம் இல்லாம லும் தம்மைக் கவனிப்பாரில்லாமலும் இருப் பதே அவர் மனத்தை உறுத்துகிறது. யாரும் தம்மைக் கவனிக்கவில்லை, மதிக்கவில்லை என்ற ஆற்றாமையே அவருக்கு அதிகம். உங்கள் அப்பாவுக்காகவும் செலவு நிறையச் செய்து கொள்ளுகிறீர்கள். அவருக்கு எதும் செய்வ தில்லை. நல்ல சாய்வு நாற்காலி வேண்டு மென்று ஆறு மாதங்களாகக் கேட்கிறார். உன் அப்பாவும் இதைக் காதில் போட்டுக் கொள்வ தில்லை. ஆறு மாத காலத்தில் சோபா செட் டிரோ என்று வாங்கி யிருக்கிறீர்கள். அவ ரைப் பொருட்படுத்தி ஒன்றும் வாங்கித் தர வில்லை. குடும்ப விவகாரத்திலும் யாரும் அவரைக் கலந்தாலோசிப்பதில்லை. பழைய தட்டுமுட்டுச் சாமான்களில் ஒன்றாக அவரைக் கருதுகிறீர்கள் என்ற வருத்தம் அவருக்கு.

"இந்த மனக் குறை அவரிடமிருந்து நீங்க வேண்டும் என்றே ஒரு சிறு நாடகம் நடத்தி னேன். உன் அம்மாவும் ஒத்துழைத்தார். அவர் உடம்பு குணமாக எவ்வளவு வேண்டு மானாலும் செலவு செய்யத் தயார் என்று உன் அம்மா சொன்னதிலேயே அவர் மனக் குறை பாதி குறைந்து விட்டது. மருந்து அவர் மனத்துக்குத்தான். தம்மைப் பற்றி, தம் உடல் நலம் பற்றி அக்கறை கொண்ட வர்கள் இருக்கிறார்கள் என்ற தெம்பே அவ ருக்கு வலு தரும்.

"கண்ணா, சீனு! எனக்குத் தாத்தா இல் லேடா! இப்படி ஒரு தாத்தா ஒவ்வொருவ னுக்கும் இருப்பது பெரிய பாக்கியம்டா! இந்த உறவு போனா வருமா? அவரைக் கவ னிக்கச் செலவு என்ன ஆகிவிடும்? அப்பத் தான். அடிக்கடி யாராவது அவரிடம் பேசிக் கிட்டிருக்கணும்! இப்படிச் செய்தால் மனக் குறை இல்லாமல் ஆரோக்கியமா நீண்ட காலம் உயிரோடு இருப்பார். இதைத்தான் உன் அம்மாவிடம் சொன்னேன். அவங்களும் தவற்றைத் திருத்திக்கிட்டாங்க!"

நான் அவன் கருத்தைப் புரிந்துகொண் டேன். நல்ல குடும்பம் என்றால் ஒவ்வொருத்த ருடைய நலனையும் கவனிக்க வேண்டுமல் லவா? பயனற்ற தட்டு முட்டுச் சாமான் களிடமும், ஏதோ ஒரு வகையான பாசம் வைத்து அவற்றைப் பாதுகாக்கிறோமே!



அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!



பியர்ஸ் சருமக் களை ... கன்னிப் பருவக் களை

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லிண்டாஸ்-PS.26-140 TM

போர்ஹென்ஸ் பற்பசையால் தவறாது பிரஷ் கொண்டு பல் துலக்கினால் ஈறு உபாதைகளையும் பற்சிதைவையும் தடுக்கலாம்

சிறியோர், பெரியோர், யாவரிடமிருந்தும் தாமாகவே தேடிவந்த நற்சாட்சிக் கடிதங்கள், ஈறு உபாதைகளை நிறுத்தி, பற்சிதைவைத் தடுக்கும் போர்ஹென்ஸ் பற்பசையின் அற்புதமான விளைவுகளைப் பாராட்டுகின்றன. அந்தக் கடிதங்களை ஜெப்ரி மானேர்ஸ் & கோ. லிமிடெட்டின் எந்த அலுவலகத்திலும் காணலாம்.

"போர்ஹென்ஸ் பற்பசைக்கும், அதை நான் தவறாமல் உபயோகிக்கச் சொன்ன டாக்டருக்கும் நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்...இதன் விளைவு, எனது 76வது வயதிலும், ஒரே மாதிரியாகப் பளிச்சென்ற பளபளப்பான என் பற்கள் ஆரோக்கியமான ஈறுகளில் வலுவாக வேரூன்றி யுள்ளன..."

—விபூதி பூஷன் போஸ், கல்கத்தா

"உலகப் புகழ் பெற்ற உங்கள் பற்பசையை என் சிறு பிராயம் முதல் தவறாது உபயோகித்து வருகிறேன். இன்று என்னுடைய ஒவ்வொரு பல்லும் வலுவாக இருக்கிறது ... நான் போர்ஹென்ஸை எல்லா வகையிலும் சிறந்த பற்பசையாகக் கருதுகிறேன். எங்களின் அதுபல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை. அது ஒன்றே போதுமே...!"

—எஸ்.என். சட்டர்ஜி, கோயம்புத்தூர்

பற்களைத் தக்க முறையில் பராமரிக்க, இரவிலும் காலையிலும் போர்ஹென்ஸ் பற்பசையையும், போர்ஹென்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத்பிரஷ்ஷையும் உபயோகியுங்கள் ... தவிர, உங்கள் பல் வைத்தியரையும் தவறாது பார்த்து வாருங்கள்!



இலவசம்! "பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்னும் விவரமான வண்ணப் புத்தகம்.

இந்தப் புத்தகத்தைப்பெற, (தபால் செலவுக்காக) 20 பைசா தபால் தலையை "மானேர்ஸ் டென்டல் அட்வைஸரி பியூரோ, தபால் பை 10031, பம்பாய் 1" என்னும் முகவரிக்கு அனுப்புக. புத்தகம் 10 மொழிகளில்* கிடைக்கிறது. K-6

பெயர் ______________ வயது ______________

முகவரி ______________________________

*எந்த மொழியில் புத்தகம் வேண்டுமோ, அதன் கீழ் தயவு செய்து கோடிடவும். ஆங்கிலம், இந்தி, மராட்டி, குஜராத்தி, உருது, வங்காளி, தமிழ், தெலுங்கு, மலையாளம், அல்லது கன்னடம்.

போர்ஹென்ஸ் பல் வைத்தியரொருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை

போனஸ் புதுவிதம்!



காம்வேல்ஸ் (ஆஸ்திரேலியா) நிறுவனத்தில் பணியாற்றுவோர் அனைவருக்கும் தீபாவளிப் பண்டிகையையொட்டி போனஸாக ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய ஒரு காகித உறை வழங்கப் பெறுகிறது. தீபாவளி 'போனஸ்' தனக்கு எவ்வளவு கிடைக்கும் என்று யாராலுமே முன் கூட்டியே கணிக்க முடியாது! ஏனென்றால் அவரவரது திறமை, உழைப்புக்கு ஏற்பப் போனஸ் கூடவோ குறையவோ இருக்குமாம்! அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினாலும் யாரையும் ஏமாற்றத்துக் குள்ளாக்குவதில்லை. ஏனெனில் சட்டப்படி அவரவர்க்குக் கிடைக்க வேண்டிய குறைந்த பட்சத் தொகையைவிடச் சற்றுக் கூடுதலாகவே அனைவருக்கும் போனஸ் வழங்கப்படுகிறது.

'மாணவன்'

"பெரும்பாலான திரைப்படங்கள் ஏன் வெள்ளிக்கிழமைகளில் வெளியாகின்றன?"
"வெள்ளித் திரையில் காட்டப்படுவதால்!"

★

"திரைப்பட நடிக நடிகையருக்கு நரை வந்தால் பரவாயில்லை! திரை வரக்கூடாது."

★

"நேற்று இரண்டாவது ஆட்டம் போனீர்களே எப்படி?"
"நல்ல நித்'திரை'ப் படம்!"

-- ஆர். எம்.



சில திரை மொழிகள்

கண் முன்னால் நடந்தது!



பூரி வாக்குச் சாவடி ஒன்றில் ஒரு வேட்பாளர் மறைவாக ஓட்டுப்போட மறுத்து அதிகாரி எதிரிலேயே முத்திரை குத்தினார். அவர் சொன்ன காரணம்— "திரை மறைவில் எதையும் செய்யும் வழக்கம் எனக்குக் கிடையாது!"

-- டைம்ஸ் ஆஃப் இந்தியா

-- பாபு

பரீட்சை முடிவுகளை இன்ஷ்யூர் செய்து கொள்ளும் வசதியும் வந்துவிட்டது ஆஸ்திரேலியாவில்! எதிர்பாராத விபத்துக்களினால் அல்லது உடல்நலக் குறைவால் தேர்வில் தோல்வி அடைந்தால்தான் பாலிஸிப் பணம் கிடைக்குமென்றாலும் மனோரீதியான தோல்விகளும் பரிசீலிக்கப்படும்! தேர்வில் தோற்றுவிட்டால் திரும்பவும் அதே வகுப்பில் படிக்கவேண்டிய செலவுத் தொகை கிடைத்துவிடும் பாலிஸி மூலமாக! ரூ. 90 பிரிமியம் கட்டினால் நமக்கு ரூ. 3,420 கிடைக்கும் - தோல்வியுற்றால்!

டைம்ஸ் ஆப் இந்தியா - 'கரிகாலன்'



பரீட்சையில் தோற்றால் பணம்!



'ஸ்பெல்லிங்' செய்த விவாகரத்து

'பாஸ்டன் நகர கோர்ட் சமீபத்தில் ஒரு பெண்ணுக்கு விவாகரத்து அளித்தது.

காரணம்: அவளுடைய கணவர் தம் முன்னாள் காதலிகளிடமிருந்து வந்த கடிதங்களை வெல்லாம் படுக்கையறைச் சுவரில் ஒட்டி வைத்திருந்தாராம்! "அது கூடப் பரவாயில்லை, ஆனால் அந்தக் கடிதங்களிலிருந்த 'ஸ்பெல்லிங்' தவறுகளை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை" என்றார் விவாகரத்து கோரிய அப்பெண். இவர் ஓர் ஆசிரியை.

-சம்பத் குமாரி ஆதாரம்: நியூஸ்டைம்ஸ்

நெஞ்சில் குரல் கேட்கும்

என் குழந்தை உமா பிறந்த நாளி லிருந்து, ஒவ்வொரு நாளும் நான் எழுதும் டயரியில், அவளைப் பற்றிய நிகழ்ச்சி ஏதாவது ஒன்றைக் குறிப் பிட்டுக் கொண்டு வந்திருக்கிறேன். மற்றக் குழந்தைகளைப் பற்றியும் நான் அவ்வப்போது குறிப்பிட நேர்ந்ததுண்டு. ஆனால் உமாவுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. அவள் மனத்தளவில் வளர்ச்சி அடையாத குழந்தை.

உமாவுக்கு வயது எட்டு நிறைந்து விட்டது. ஆனாலும் அவள் செய்கை களில் இன்னும் மூன்று வயதுக் குழந்தையின் பக்குவம்தான் இருக் கிறது. அவள் இதுவரையில் வாய் திறந்து பேசியதில்லை. அவளுடைய பாடங்களைச் சைகையில்தான் படிக் கிறாள்.

மற்றக் குழந்தைகளைப் போலத் தான் அவளுடைய வாழ்க்கையும் தொடங்கிற்று. வித்தியாசம் எல்லாம் அப்புறம்தான். எனக்கு நினைவிருக் கிறது. ரகு, சுந்தர் இரண்டு குழந் தைகள் ஆணாகப் பிறந்துவிட்ட பிறகு, நாங்கள் ஒரு பெண் குழந்தைக்காக வெளியே சொல்லாமல் ஏங்கிக் கொண்டிருந்தோம். அப்போதுதான் உமா எங்களிடையே தோன்றினாள். எங்கள் மகிழ்ச்சிக்குக் கங்குகரையே இல்லை.

வீட்டுக்கு நடுவே பட்டுப் பாயில் அவளைப் படுக்க வைத்திருப்பேன். சுற்றிலும் மற்றக் குழந்தைகளும் நானும் நடந்து கொண்டிருப்போம். வருவார் போவாரின் கூச்சலும் கொம்மாளமும் நிறைய உண்டு. ஆனால் குழந்தை 'கல்'லென்று வாய் விட்டுச் சிரித்ததில்லை. கண்கள் மற்ற வர்கள் கால்களைத் தொடர்ந்து அலைந்ததில்லை. பசி நேர அழுகை தவிர, மற்ற வேளைகளில் வாய் மௌனத்தில் மூழ்கி நிற்கும்.

"உமா!" குரல் என் நெஞ்சி லிருந்து வீறிட்டு வரும். என் வயிற் றில் எஃகுச் சுருள் பிரிவது போல ஒரு இலில் விறுவிறு அடிக்கும். குழந்தை யின் அடையாளம் புரியாத பார்வை யில் என் பார்வை கூட்டில் குஞ் சென்த் துடிதுடிக்கும்.


உமா ஒன்பது மாதக் குழந்தை. ஆனால் அவளுக்கு இன்னும் அவளு டைய உலகம் மிகக் குறுகியதாகத் தான் இருந்தது. சுற்றிலும் இயங்கும் உலகத்துக்கும் அவளுக்கும் நடுவே எங்களுக்குப் புலப்படாத சுவர் ஒன்று எழும்பியிருந்தது. கண்ணெதிரே தெரி யும் பொம்மையை, அழுத்தினால் கூவும் ரப்பர் பொம்மையை, குழந்தைகள் தட்டி அதிர வைக்கும் கைவிரல்களைக் கண் கொட்டாமல் பார்ப்பாள். விழிகள் வட்டமாய், வளையமாய் விரிந்து நிற்கும். அதற்கு அப்பால் ஒன்றும் இல்லை.

உமாவுக்கு ஒரு வயது நிறைந்து விட்டது. அவ ளுடைய மௌனம், எங்களிடையேயும் அகன்று விரிந்து படர்ந்து கொண்டிருந்தது. சிந்தனையில் சுளித்த புருவங்களுடன் அவர் குழந்தையைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். என் கண் பார் வையில் அந்த முகம் சட்டென்று மங்கி அழிந்தது. முன்றானையினால் கண்ணைத் துடைத்துக் கொண்டேன்.

"குழந்தையை டாக்டரிடம் காண் பிக்கலாம் என்று நினைக்கிறேன்."

குழந்தையை இருவருமாக அழைத் துக்கொண்டு போனோம். முன்னிர வின் விளக்கொளியில், வெண்ணிறத் துணி விரித்த நீள மேஜையின் மேல் குழந்தையைக் கிடத்தி, கண் கூசும் விளக்கின் ஒளிப்பொழிவில் ஆராய்ந்து பார்த்தார் அவர். வெண்டைப் பிஞ்சைத் தொட்டுப் பதம் பார்ப்பது போல, கால் விரல்களையும் எடுத்து இலேசாக அழுத்திப் பார்த்தார். உள்ளங்காலிலும் முதுகிலும் உணர்ச்சி எழுப்பிச் சோதித்தார். கண்ணிமை களை இதழ் பிரித்துப் பரிசோதித்தார்.

பிறகு வெளியே வந்து எங்களுடன் உட்கார்ந்தார். கொஞ்ச நேரம் பேச வில்லை. என் கணவர் மணிக்கட்டில்,



கடிகாரத்தில் விநாடி முள் இரண்டு முறை நிதானமாக வட்டம் அடித்தது.

''குழந்தைக்கு மன வளர்ச்சி மிகக் குறைவாக இருக்கிறது. பேச்சுக் குரல் இன்னும் எழவில்லை. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை, இரண்டு வயதுவரை சோதனைசெய்துகொண்டு வரலாம். வாய்ப் பேச்சு அமைந்து விட்டால் மற்றப்படி வளர்ச்சி சரியாகிவிடும்.''

குழந்தையைச் சிறு போர்வை போர்த்தி எடுத்துக் கொண்டு வண்டியில் திரும்பினேன். அழுந்த மாலையிலிருந்து மலர் உதிர்வது போல் என் கண்ணில் துடைக்க முடியாமல் நழுவின, நீர் முத்துக்கள்.

உமாவின் வளர்ச்சியைப் பார்ப்பது, ஓர் ஓட்டப் பந்தயத்தைத் திரையில், நுட்பமாக மெதுவான ஓட்டத்தில், நிறுத்திக் காண்பிப்பதைக் கவனிப்பது போல இருந்தது. அவள் வளர்ச்சி தெளிவாக, ஆனால் மிகவும் மெதுவாக இருந்தது. அவள் வயதில் பாதி அளவேயான குழந்தையாக அவளைக் கற்பனை செய்து கொள்ளும் முயற்சி, அவ்வளவு எளிதாக இல்லை. ஒவ்வொரு நிலையிலும், எத்தனை மேடு

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்


பள்ளங்கள்? எத்தனை வேதனைக் குரல்கள்? எவ்வளவு ஆறுதல் பெருமூச்சுக்கள் ?

உமாவுக்கு ஞாபக சக்தி மிக அதிகம். என்றோ ஒரு முறை வீட்டுக்கு வந்தவரையும், உடனே அடையாளம் கண்டு கொள்வாள். புத்தகத்தில் பார்த்த பொருட்களை, கூர்ந்து கவனித்துவிட்டு, 'ஷெல்பி'ல் வைத்திருந்த பழத்தின் ஆரஞ்சு நிறத்தைத் தொட்டியில் அசையும் இலையின் பச்சையை, அரிவாள்மனை ஓரம் நறுக்க வைத்திருந்த தக்காளியின் சிவப்பை, தரையில் உருளும் எலுமிச்சையின் மஞ்சளை, சரியாக அடையாளம் காட்டுவாள்.

இரவில் எங்களுக்கு நடுவே குழந்தையைப் படுக்க வைத்துக் கொள்வோம். கவர்ச்சியான முகம், விழிகளின் மைக் கறுப்பு, தலை நிறைய மயிர், எச்சில் விழுங்கினால் தெரியும் சிவப்பு, வரிசைப் பல், இவ்வளவும் எங்கள் கண்களுக்கு நிறைவில்லாத வளர்ச்சியைத் தான் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும். அந்தக் குறை குழந்தையிடம் மட்டுமல்ல ; எங்கள் நெஞ்சிலும் நிலையாகத் தேங்கி விட்டது.

உமா மூன்று வயதைக் கடந்துவிட்டாள். எங்களுடைய பரிவு அவளுக்கு நிறைய வேண்டி இருந்தது. ஆனால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டிய சங்கடத்தை அவளே புரிந்து கொண்டிருப்பது போலத் தோன்றும். கைகளின் பிடிப்பில் இடுப்பில் ஏறிக்கொண்டிருப்பாள். கிண்ணத்தில் பிசைந்த சோற்றை எடுத்து வாயில் ஊட்டினால்தான் சாப்பிடுவாள். மடியில் படுக்க வைத்துத் தட்டினால் தான் தூங்குவாள். ஆனால் வீட்டுக்கு அவளை விடச் சிறிய வயதுக் குழந்தைகள் வந்து, தரையில் நடந்து, தானே சாப்பிட்டுத் தூங்குவதைப் பார்க்கும்போது, அவள் கண்களில் தயக்கம் நிழலாடும். என் அரவணைப்பை வெறுத்து ஒதுங்கிக் கொள்வாள்.

மற்றக் குழந்தைகள் உமாவைச் சீண்டிக் குறும்பு செய்யும் ஞாபகமே எனக்கு நடுக்கம்



நான். ஆனால் பொதுவாக அப்படி நடப்பதில்லை. ஒரே ஒரு தடவை பக்கத்து வீட்டில் நிறையக் குழந்தைகள் விளையாட வந்தபோது நடந்தது நினைவில் இருக்கிறது. இரண்டு குழந்தைகள் உமாவைப் பெயரைச் சொல்லித் தொட்டு விட்டுப் பூஞ்செடிகளைச் சுற்றிச் சுற்றி ஓட ஆரம்பித்தன. அவர்களைப் பின் பற்றும் கூர்மையும் வேகமும் இல்லாமல் குழந்தை தவிப்பதைப் பார்த்து அந்தக் குழந்தைகளுக்கு அலாதியான ஆனந்தம். ஜன்னல் வழியே இதைக் கவனித்த நான், நேரே அங்கே போய் உமாவை அள்ளித் தூக்கிக் கொண்டு வந்து விட்டேன். அவளுடைய பலவீனத்தை ஆதாரமாக வைத்து, மற்றக் குழந்தைகள் கற்பித்த விளையாட்டு, என் நெஞ்சில் முள்ளின் கடுப்பாய் வெகு நேரம் உறுத்திக் கொண்டே இருந்தது.

ஆயினும் விளையாட்டுக்களில், கல்யாணங்களில் என் அணைப்பிலும் பாதுகாப்பிலும் அல்லாமல் விலகி இருக்கவே அவளுக்கு விருப்பம். தான் ஒரு பலவீனமான குழந்தை என்ற நினைப்பே அவளுக்குப் பிடிக்கவில்லை; தன்னு

டைய திறமையின் எல்லைகளை அவள் உணர்ந்திருந்தாலும் கூட. ''யாருக்கு வேண்டும் உங்கள் பச்சாதாபம்?'' என்பது போல் இருக்கும் அவளுடைய வீம்பாய் நிமிரும் பார்வை.

உமாவுக்கு ஐந்து வயது முடிந்து விட்டது. அவள் பிறக்கு முன் வைத்த மரங்கள் பழுக்கத் தொடங்கி விட்டன. என் உமா மட்டும்தான் இன்னும் மலரின் பருவத்தையே கடக்காமல் இருந்தாள். வாசலில் முட்செடிகள் மறைந்து பூக்கள் சொரிய ஆரம்பித்து விட்டன. அந்த மலர்களைக் கண்டால் அவளுக்கு அளவு கடந்த ஆனந்தம். பூவின் அடியில் குத்தும் முள் நினைவில்லாமல் அவைகளைக் கையை நீட்டிப் பறிப்பாள். முள் குத்தியதும் விரல்களைச் சுருக்கி இழுத்துக் கொள்வாள். வாழ்க்கை அவளுடைய பார்வைக்கு மலர் இதழின் மென்மையோடுதான் இருந்தது. எனக்குத்தான் அவள் அறியாத முள்ளின் குத்துதல் உறுத்திக் கொண்டே யிருந்தது.

மழைத் துளிகளைக் கையை நீட்டிப் பிடிக்க ஓடுவாள். விரல்களின் சந்துக்களிடையே கதிரொளியின் வெளிச்சத்தை வடிகட்டிப் பார்க்க முயலுவாள். இரவு வேளைகளில் என் மடியில் படுத்து, அண்ணாந்து சிறிய மலர் அரும்புகளாகக் கிடந்த விண் சுடர்களைப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

என் மற்றக் குழந்தைகள் அவளுடைய எல்லைகளை நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார்கள். எப்பொழுதேனும், நான் பொறுமை இழந்து, அவளை அடிக்கக் கையை நீட்டும்போது சுந்தர் குறுக்கே வந்து தடுத்துக் கொள்வான். அவளைத் தூக்கிக் கொண்டு ஓடி விடுவான். அவனே உமாவை மடியில் போட்டுக் கொண்டு அவள் குடிக்காமல் பிடிவாதம் பிடித்த பாலைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுப்பான். அவள் குடித்து முடித்ததும் ''எங்க உமா சமர்த்து ஆச்சே!'' என்று தட்டிக் கொடுப்பான். அவர்கள் பார்வைக்கு அப்பால் இருந்தாலும், அந்தக் குரலின் கனிவு என் காதில் விழுந்ததும், கண்ணில் தோன்றும் பசுமையை, யாரும் பாராத விதமாகத் துடைத்துக் கொள்வேன்.

எட்டு வயது நிறைந்து விட்டது. மற்றக் குழந்தைகளின் ஏளனமான பார்வையின் பனி பொறுக்காமல், அவளை நான் போர்த்தி வைத்து இவ்வளவு நாட்களுக்கு எப்படி வளர்க்க முடியும்? மற்றக் குழந்தைகளைப் போல அவள் வகுப்புக்குச் சென்று படிப்பது பட்டாம் பூச்சியாகத் திரிந்து விளையாடுவது எப்போது?

ஆயினும் அவளை, ஊனம் அடைந்த குழந்தைகள் படிக்கும், வளரும் பள்ளிக்கூடத்தில் விட என் மனம் ஒப்பவில்லை. என் குழந்தைக்கு ஊனம் எங்கே? வாய் பேசாத பதுமையாக நின்ற அவள் உள்ளத்தில் தேங்கி உறைந்து விட்ட வளர்ச்சியைப் பரிவுடன் கவனித்து உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்ளும் ஓர் ஆசிரியையை நான் எங்கே தேடுவேன்? ஒரு தாயின் பாதுகாப்பிலிருந்து பிரிந்து வரும் அந்தக் குழந்தையைக் கண்ணிமையின் கவனிப்பாய்ப் போற்றக் கூடியவர் யார்?

தகுந்த ஒரு பள்ளிக்கூடத்தை, தேர்ச்சி மிகுந்த ஆசிரியையைக் கண்டு பிடித்து, நேரில் பேசி, ஹாஸ்டலிலேயே சேர்க்க ஏற்பாடும் செய்தாகி விட்டது. மறுநாள் உமா கிளம்பிப் போவதாக இருந்தது.

இரவு மணி பத்து இருக்கும். குழந்தைகள் கண்ணயர்ந்து ஒரு மணி நேரம் ஆகியிருக்கலாம். நானும் அவரும் வாசற்படியில் உட்கார்ந்திருந்தோம். இருவரும் ஒரே யோசனையை அவரவர் வழியில் மனத்துள் தொடுத்துக்கொண்டிருந்தோம்.

''உமாவுக்கு இந்த ஏற்பாடு நல்லதுதான்'' என்றார் அவர். தம்மைத் தேற்றிக் கொள்ளுகிறாரா? அல்லது என்னைத் தேற்றுகிறாரா?

''இருக்கலாம்.''

''நீ வேண்டுமானால் பார். ஆறு மாதங்கள் கழித்து உமா திரும்பி வரும்போது நிச்சயம் முன்னேறி யிருப்பாள்.''

நோயில் படுக்கையில் படுத்திருப்பவனை யாரும் அவநம்பிக்கைப்படுத்துவதில்லை. மற்றவர்கள் சொல்வதில் உண்மை அதிகம் இல்லை என்று தெரிந்தாலும் நோயாளியும் நம்ப மறுப்பதில்லை.

அவர் எழுந்து வந்து என் தோளைத் தொட்டார். அதுவரையில் கட்டுப்பட்டிருந்த என் மனம் சட்டென்று கரை உடைத்தது. நானே குழந்தையாய் அவர் மடியில் படுத்துக் கொண்டேன். அவர் கைவிரல்கள் கண்ணீர்க் கறை படிந்த என் கன்னங்களைப் பரிவுடன் துடைத்தன.

உமாவை ஹாஸ்டலில் விட்டு விட்டு அவர் திரும்பி வந்து விட்டார். நான் ஹாஸ்டல் வரை போகவில்லை. கடைசிவரை கூட இருந்து பிரியும் மனத் திட்பம் எனக்குக் கிடையாது. வரும் விருந்தினர்களை ரயில் வண்டி வரை போய் இருந்து அனுப்பி வைத்து விட்டு வரும் அளவுக்குக் கூட எனக்கு மனத் திடம் இருந்ததில்லை. பிரியும்போது உமா என்னைப் பார்க்கும் பார்வையை, நான் அவளுக்கு ஆறுதலாகத் தர வேண்டிய புன்சிரிப்புடன், எவ்வாறு என்னால் சந்தித்திருக்க முடியும்?

உமாவை அனுப்பி வைத்த பிறகு எங்களிடையே விழுந்த சூனியம், எளிதில் இட்டு நிரப்பக் கூடிய ஒன்றாக இல்லை.

விடுமுறைக்கு உமாவை அழைத்து வர, நாங்கள் இருவருமே போயிருந்தோம். அவளுடைய வகுப்பு ஆசிரியை எங்களைத் தனியே ஒரு மரத்தடிக்கு அழைத்துக் கொண்டு போனாள். ஏதோ ஓர் எதிர்பார்ப்பில் என் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது.

''உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும். உமாவின் காதை, அவளுடைய கேட்கும் சக்தியை நீங்கள் சோதித்துப் பார்த்ததுண்டா?''

''இல்லை, ஏன்?'' என்று கேட்டார் அவர்.

''உமாவைப் பேச்சு இழந்த, அதனால் மன வளர்ச்சி பின்தங்கிவிட்ட குழந்தை என்று நீங்கள் என்னிடம் சொல்லி யிருந்தீர்கள். நானும் அந்த நம்பிக்கையிலேயே அவளுக்குப் பாடங்கள் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தேன்; ஒரு நாள் ஹாஸ்டலில் அவளை நான் தனியே பார்க்க நேரும் வரை.

அன்று ஹாஸ்டலுக்கு வெளியே பெரிய ஊர்வலம் ஒன்று போய்க் கொண்டிருந்தது. வெளியே ஏற்பட்ட சத்தம். துள்ளல்

கடுங்கோடையின் சோர்வை நீக்கி புத்துணர்வு அளிக்கும் கிஸான் ஸ்குவாஷ்

அன்றே பறித்த பழத்தின் சாறு தரும் சத்தெல்லாம் உள்ளது

கிஸான் ஸ்குவாஷ்


கடுங்கோடையில் குழந்தைகள் சோர்வையும், கணவர் சலிப்பையும், விருந்தினர் அலுப்பையும் தவிர்க்க உடனே ஒரு கிளாஸ் சத்துமிகு கிஸான் ஸ்குவாஷ் கனிரசம் அளித்திடுங்கள். அவர்கள் முகம் எப்படி மலருகிறது எனக் கண்டு களியுங்கள். (ஒரு பாட்டிலில் 16 கிளாஸ் தயாரிக்கலாம்)

உங்களுக்கும் சிறந்தது அது. நோய் எதிர்ப்பு சக்திக்கு தேவையான வைட்டமின் C சத்து இயல்பாகவே இருப்பது கிஸான் ஸ்குவாஷ். நல்ல கனிகளும் தூய கரும்புச்சர்க்கரையும் சேர்ந்து தயாராகும் கிஸான் ஸ்குவாஷ் கிடைப்பவற்றில் மிகச்சிறந்தவை. இந்தியாவில் அவைகள் ஏராளமாக விற்பனையாவதில் வியப்பில்லை

தேர்ந்தெடுக்க அருமையான சுவையில் 5 வகைகள்: ஆரஞ்சு, லெமன், மாங்கோ, லெமன்பார்லி, லைம்ஜூஸ் கார்டியல்.

கிஸான் பிராடக்ட்ஸ் லிமிடெட், பெங்களூர்-16





கிஸான் தோட்டக்கனிகளின் [illegible]


இப்பொழுது
ஃப்ரெஸ்காவை
உணர்ந்து பாருங்கள்
Beauty Talc
fresca
இரண்டு அளவுகளில்
கிடைக்கிறது.
கோத்ரெஜ் அளிக்கும்
ஃப்ரெஸ்கா பியூடி டால்க்
ஃப்ரெஸ்கா என்றாலே புத்துணர்ச்சிதான்!
Interpub GF-3 TM

கதவுகள் மூடியிருந்தாலும் உள்ளே ஓசையின் அதிர்ச்சி அடங்கிய பாடில்லை. மற்றக் குழந்தைகள் நழுவி வாசலுக்கு ஓடி விட்டார்கள். உமா மட்டும் எதுவுமே நடக்காதது போல அமைதியாகப் பாடப் புத்தகத்தில் கண்களை ஊன்றியபடி உட்கார்ந்திருந்தாள்.

என் பார்வை அந்தக் காட்சியைப் படம் பிடித்துக் கொண்டிருந்தது. அந்தக் காமிராவில் இன்னொரு புதிய உருவம் எனக்குக் கிடைத்ததை உணர்ந்தேன். "வாய் பேசாமல் உமா பின்தங்கிவிடவில்லை. காது கேளாமல் தான் அவள் பேசும் திறன் பயன்படாமல் போய் விட்டது. யாரிடமிருந்தும் அவள் எந்தப் பேச்சையும் கேட்கவில்லை. அதனாலேயே அவள் பேசக் கற்றுக் கொள்ளவில்லை. பேச்சுத் திறன் வர அவளுக்கு முதலில் கேட்கும் திறன் தேவை!"

"பேச முடியாத குழந்தைகள் செவிடாகவும் இருப்பார்கள் என்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன். உமாவைப் பற்றி நாங்கள் நினைத்ததும் அதுதான்" என்றார் அவர், அடக்க முடியாத ஆவலோடு.

"இல்லை. உமா அப்படி இல்லை. அதுமட்டுமல்ல. அவளுடைய அறிவின் கூர்மை மழுங்கியதும் இல்லை. புழுதி படிந்த அந்தப் பிரகாசத்தை நான் இங்கே பல முறைகள் முயன்று துடைத்து வைத்திருக்கிறேன். ஒரு கண்ணின் இமைப்பில் அவள், நாம் எத்தனையோ பேச்சுக்களில் கொட்டும் உணர்ச்சிகளைச் சொரிந்து விட முடியும்."

என் மார்பு அலைபொங்கிற்று. அமிழ்ந்து அடங்க முடியாமல் ஓர் ஆர்வம் என்னுள் உயர்ந்து குமுறிற்று. அந்த ஆசிரியை கை தூக்கிக் காட்டிய விளக்கின் ஒளியில், உமா அதுவரை தனக்குப் புலப்படாமல் இருந்த வழியின் இருட்டைக் களைந்து விடுவாள் என்ற நம்பிக்கை என்னுள் பிரகாசமாக உதயமாயிற்று.

"மறுபடியும் சொல்கிறேன். அவளைச் செவி உணர்வுகளைச் சோதிக்கும் ஒரு 'ஸ்பெஷலிஸ்ட்'டிடம் முதலில் காட்டுங்கள். பிறகு அவளின் பேசும் திறனைச் சோதிக்கலாம்" என்றாள் அவள்.

"போனவுடன் நிச்சயமாக அதைச் செய்கிறோம்" என்றோம் இருவரும்.

"உங்களுக்கு என் நல்வாழ்த்துக்கள்!"

காலை நேரம்.

வாசலில் நானும் குழந்தைகளும் உமாவுக்காகக் காத்திருந்தோம். ஸ்கூட்டரில் அவள் தந்தைக்கு முன்னால் நின்று சவாரி செய்தபடி வந்து இறங்கினாள். இறங்கியதும், கண்கள் சுடராய் மின்ன, குழந்தை கையைத் தூக்கி, என்னை நோக்கி அகல விரித்தாள். இதழ்களில் புன்சிரிப்பு ஓடிற்று. அந்த முக மலர்ச்சியில் எனக்கு ஏதோ ஒரு பொருள் புரிந்தது. அவள் செய்கைக்கு முத்திரை பொறித்தது போல் அந்தச் சிரிப்பு உதிர்ந்தது. என் உடல் முழுதும் வேகமாக ஒரு மின்னல் ஊடுருவிச் சென்றது.

"வாடா கண்ணு!"

குழந்தை கழுத்திலிருந்து வெள்ளி நிறச் சிறு பெட்டி ஒன்றை விரல்களில் எடுத்துக் காட்டினாள். முகத்தில் புதிய நகை ஒன்றை அணிந்தது போன்ற பெருமை. அதை அன்போடு தடவிக் கொடுத்தாள். விழி அகலப் பார்த்துக் கொண்டிருந்த சுந்தரிடம் நீட்டினாள். "ரேடியோ" என்று கொச்சையாகச் சொன்னாள், அந்த 'ஹியரிங் எய்டை' (கேட்கும் கருவி) எடுத்துக் காட்டியபடியே.


குழந்தை பேசிய முதல் வார்த்தை. என் காதுபட அவள் குரல் கேட்டது அதுவே முதல் தடவை. புலுபுலுவென்ற கண்ணீர் கன்னங்களில் மாலை மாலையாக வழிந்து நின்றது. அந்தக் குரல் நெஞ்சை நனைத்தது.

அதிசயித்த கண்களுடன், உமா அதை எங்கள் ஒவ்வொருவருக்கும் காட்டிக் கொண்டிருந்தாள். தனக்குப் பேச வந்து விட்டதைக் காண்பிக்கும் பாவனையாக அந்தச் சொல்லை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டு வந்தாள். சுந்தரும் ரகுவும் அவளை மடிமீது இழுத்து வைத்துக் கொண்டு, மாறி மாறி முதல் முறையாகப் பேசத் தொடங்கும் குழந்தைக்குச் சொல்லிக் கொடுப்பது போல் பேசிக் காட்டினார்கள்.

ஒவ்வொன்றையும் அப்படியே அவளால் திருப்பச் சொல்ல முடியவில்லை. சொற்கள் கொச்சையாகத்தான் பெயர்ந்து வந்தன. ஆனாலும் அந்த உச்சரிப்பிலேயே அவள் நா தித்தித்தது. கண்கள் பூச்சிரிப்பைக் கொட்டின. அவள் ஒரு புது உலகில் அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். என்னருகே கடைசியாக வந்தாள் குழந்தை. புதிய சந்திப்பாய் என்னைப் பார்த்தாள். ஒன்றிய பரிவின் மழலையோடு மார்பில் முகத்தைப் பதித்துக் கொண்டாள். "—ம்மா!"

முதல் முறையாக என் குழந்தை என்னை அழைக்கிறாள். அந்த அழைப்பு ஏழு ஆண்டுகள் தாமதமாக என் செவிகளில் கேட்கிறது. பிறந்த குழந்தையின் முதல் ஆண்டு மழலையின் கொச்சையாக விழுகிறது.

ஆயினும் இதுவே போதும். இனி என் உள்ளத்தில் ஏக்கம் இல்லை. அவள் பேச்சின் குரல் கொஞ்சம் கொஞ்சமாகக் கேட்கும். அப்போதுதான் அவளை என் மழலைப் போல, மார்புக் குமிழிகள் பொங்க உமாவை அணைத்துக்கொண்டேன்.



"வாசல்லே பிச்சைக்காரன் பாவம் அப்பவே இருந்து கத்திண்டு இருக்கான். கால் ரூபா கொடப்பா! அவனுக்கு ஐந்து காசு தர்மம் பண்றேன்."

ஆடு மேய்க்கும் சிறுவன் கப்புக்குட்டி வந்து சொன்ன சேதி சங்கரனை ஓர் உலுக்கு உலுக்கி விட்டது. சிறிது நேரத்தில் அவன் உடல் குப்பென்று வியர்த்தது. பயந்து விட்டவன் போல் அவன் உடலில் ஒரு சிலிர்ப்புத் தோன்றி மறைந்தது.

காரணம் வேறொன்றுமில்லை. அவன் அரவங் குளத்திலேயே கடந்த ஐம்பது ஆண்டு கால சரித்திரத்திலேயே அதிகம் படித்தவன். அறிவியலிலும், ஆசிரியப் பயிற்சியிலும், தேர்வு பெற்றுவிட்ட 'டபிள் கிராஜுவேட்'. அதன் பயனாக மற்றவர்கள் நம்பின விஷயங்களிலே அவனுக்கு நம்பிக்கை அற்றுப் போயிற்று. ஏனையோர் 'வெறும் பேத்தல்' என ஒதுக்கியவற்றில் அவனது நுண்ணறிவு ஈடுபாடு கொண்டது.

சில விநாடிகளிலே தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவன் கப்புக்குட்டியைக் குறுக்கு விசாரணை செய்தான்.

'' இந்தச் சமாசாரத்தை நீ வேறு யாரிடமாவது சொன்னாயா ?''

''சொன்னேனுங்க! காரை வீட்டுச் செல்லப்பா ஐயரு போடா மடையா, உளறாதேன்னுட்டாரு ! மரக்கடை பர்ணந்து ஐயா பதில் கொடுத்துப் பேசலே. வாள் அறுக்கிற சத்தம் ஒண்ணுதாங்க அவருக்குக் காதிலே விழும் !''

''சரி, இன்னும் யாரிடமும் இதைப் பற்றிப் பேசாதே. இவங்களே பாதிப் பேரு நங்கள் உழைப்பையே நம்பாதவங்க, உன் பேச்சை எங்கே நம்பப் போறாங்க ?''

'' அப்படின்னா நான் சொல்றதை நீங்க கூட நம்பலையா?'' — கப்புக் குட்டிக்கு ஆத்திரம் வந்து விட்டது.

''நம்பறேண்டா, நம்பறேன் ! இவ்வளவு நாட்கள் படிச்ச படிப்பின் ஆணையாக நம்பித் தான் ஆகணும். அது சரி, இந்தத் 'தட்டு' இப்போ எங்கேடா இருக்கு ?''

''தட்டு இல்லே சாமீ, அது! நம்ப வண்ணாம்பச் சேரிக் குளத்துலே சவளைக் காரங்க ஓட்டிக்கிட்டுப் போவாகளே, பரிசலா, இரிசலா, அது மாதிரி இருந்துச்சுங்க !''

''சரிதான், பரிசல், அது இப்போ எங்கேலேநிக்குது?''

''சரியா சொல்லப் போனா, நம்ம சிமிண்டு கம்பெனி குவாரிக்கும் பல்லிக் கோட்டைப் பரம்புக்கும் கண்ட மத்தியிலே இருக்குதுங்க! நம்ப வக்கீல் ஐயா காட்டு வழியாப் போனா, சைக்கிளில் முக்கால் மணி நேரத்திலே போயிடலாம்!''

''இப்ப நான் வந்து என்னலே பண்ணப் போறேன்?'' சங்கரன் சிரத்தை காட்டவில்லை.


''இப்படிக் கேட்டுட்டா என்ன பிரயோசனம்? என்னவோ நெறையப் படிக்கிறயளே, நேரிலேயும் பார்த்து வச்சிங்கன்னா உங்களுக்கும் நல்லதாச்சே. இல்லேன்னா, நான் ஏன் கிடையை விட்டுட்டு ஏழு மைல் வந்து சொல்ல வரணும் ?''

சங்கரனால் மேலும் மறுக்க முடியவில்லை. இருவரும் புறப்பட்டனர்.

போகும் வழியெல்லாம் சங்கரனுக்கு ஒரே யோசனை. பறக்கும் தட்டுக்களைப் பற்றி அவன் எவ்வளவோ செய்தித் தாள்களில் படித்திருக்கிறான். ஆனால் நிஜ வாழ்வில் அவை குறுக்கிட முடியுமென்றோ, அரவங் குளத்துக்கு அருகிலேயே இறங்கி விட முடியுமென்றோ அவன் கற்பனை செய்தது கூடக் கிடையாது. அதில் வந்துள்ள மனிதர்கள் (அவர்கள் மனிதர்கள்தானோ என்னவோ?) எந்த கிரகத்தைச் சேர்ந்தவர்களோ? அவர்கள் பழக்க வழக்கங்கள், மொழி என்னென்னவோ? எது எப்படி இருந்தாலென்ன, புறப்பட்டாகி விட்டது.

பண்டாரக் குளம் சத்திரத்திலிருந்து வடக்கே ஏரியின் குறுக்காகப் பிரிந்த வண்டித் தடத்தின் வழியாக இருவரும் போய்க் கொண்டிருக்கையில் பாதையின் குறுக்காகச் ''சரக்''கென்று ஏதோ ஒரு ஜந்து ஓடியது. பளீரென்று மின்னல் போன்ற ஒளியைச் சிந்தியது அது. சங்கரன் தன்னைச் சுதாரித்துக் கொண்டு திரும்பவும் அதேகணம் புதரிலிருந்து இரண்டரை அடி உயரமே உள்ள குள்ளன் ஒருவன் வெளி வரவும் சரியாக இருந்தது. கண நேர வியப்பினால் அவன் நின்றான். சங்கரன் சைக்கிளை விட்டிறங்கி அவனை உற்று நோக்கினான்.

விசித்திரமான உருவம், கலிவரின் பிரயாணங்களிலே



அணுயுகத்தின் விலை ஒருபவுன்

மீனாட்சி கிருஷ்ணு



வந்த மாதிரி. தைராயிட் சுரப்பிகள் இயங்காததால் குள்ளமாகவே இருக்கும் நம் ஊர் மனிதர்களைப் போலன்றி அவனது உருவமே வேறு மாதிரியாக இருந்தது. கண்ணுடிக் கொப்புளம் போன்ற தலை, காமிராக் கண்கள், மூக்கே இல்லை, 'ஜிப்' அமைப்பில் வாய் — ''ஆ. இதுதான் அசல் வேற்றுலக மனிதன்'' எனத் தீர்மானித்தான்.

சங்கரனைப் பார்த்து அந்த மனிதன் ஓடவில்லை. ஆகாயத்தை அண்ணாந்து நோக்கி விரல்களால் சொடுக்கினான். கம்பியில்லாத் தந்தியில் எழுவது போன்ற, ''பீப்...பீப்.. பீப்....'' ஒலி மூன்று முறை எழுந்து ஒடுங்கியது.

பாதையின் குறுக்கே ஓடிய அதே ஜந்து திரும்பி வந்து குள்ளனின் தோளில் ஏறி அமர்ந்து கொண்டது. கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போன்ற உணர்வு சங்கரனுக்கு.

'' நீங்கள் இந்த இடத்துக்குப் புதிதுபோல் இருக்கே. உங்களுக்கு எந்த ஊரோ?''—தமிழர்களுக்கே உரிய ஆங்கில நடையில் வினவினான்.

குள்ளனிடமிருந்து பதில் வரவில்லை. ''ஜிப்' வாய் மாத்திரம் இரு காதுகளுக்குமிடையே உள்ள நெடுந்தூரம் வரையில் நீண்டு சுருங்கியது—ரெட் ஸ்கெல்டனின் புன்னகை மாதிரி.

அவனுக்கு ஆங்கிலம் புரியாது என்பது தெளிவாகியது. வேறு என்ன மொழியில் பேசுவது?

பிரெஞ்சும் ஸ்பானிஷும் சங்கரனுக்கே தெரியாதவை. போர்ச்சுக்கீசும் அப்படியே.

''எஸ்பெராந்தோ...?'' — சங்கரன் கேட்டான்.

குள்ளன் மீண்டும் சிரித்தான்.

''வா மான்ஸே...!''

சங்கரனுக்குக் கொஞ்ச காலம் பெல்மன் குழுத் தொடர்பு இருந்தபடியால் சிறிதளவு அந்த சர்வ தேசிய ரகசிய மொழியில் ஓரளவு பரிச்சயம் இருந்தது. அந்த அறிவுதான் அரவங்குளம் பஞ்சாயத்து எல்லையில், அட்சரேகை 50 டிகிரிக்கு நூற்று அறுபது மில்லியன் ஒளி மைல்களுக்கு அப்பாலிருந்த ''டெல்வியஸ்'' கிரக மனிதன் வந்து இறங்கிய விவரம் உலகறிய அடிகோலியது என்றால் மிகையாகாது. (வாசகர்கள் திகைக்கலாகாது. — அறிவியல் என்றால் நீண்ட குழப்ப மிக்க 'ஜெண்டன்ஸ்' நாலைந்தாவது இருக்க வேண்டாமா?)

'' உங்களுடைய பெயர்... !''

''எங்களுக்குப் பெயர் கிடையாது. பெயர் வைப்பது உங்கள் உலக வழக்கம். ராஜன் என்ற பெயரில் உலகம் முழுவதிலும் ஏழு லட்சம் ஆசாமிகள் இருப்பதால் எத்தனை குழப்பம்? ஆகவே எங்களுக்கு 'கோட் எண்கள்' மாத்திரம் உண்டு. தவிரவும் எங்களை யாரும் அடிக்கடி அழைக்கத் தேவையில்லை.''

''சரி, வேண்டாம்! நீங்கள் எப்படி இங்கு வந்து சேர்ந்தீர்கள்? ஏதாவது முற்றுகையிடும் திட்டம் உண்டா?''

''பூ... அதெல்லாம் உலகவாசிகள் செய்கிற வேலை! உங்கள் ஊரைச் சூறையாடி எங்களுக்கு எவ்விதமான பயனும் இல்லை. பூமி, மற்றும் டெல்வியஸ் கலாசார வளர்ச்சியில் பழைய கற்காலத்துக்கும் இன்றைக்குமுள்ளதைப்போல் சுமார் நூறு மடங்கு பெருகிய பேதம் உண்டு. இன்று நீங்கள் ''அல்ட்ரா மாடர்ன்' என்று கருதுகிற ஒவ்வொன்றும் டெல்வியஸில் மூன்று கணத்தில் தோன்றி மறைந்தவை.

''என் விமானத்தின் பாட்டரிகளில் ஒன்று 'வீக்' ஆகிவிட்டது. இங்கிருந்து ஏழு ஆயிரம் மைல்களில் அது இப்போது சூரிய ஒளியில் சார்ஜ் ஆகிறது. அநேகமாக நாளை மதியம் அதை நான் திரும்பப் பெறுவேன். அப்பால் என் பிரயாணம் தொடரும்!''

''அதை எப்படித் திரும்பப் பெற முடியும்?'

குள்ளன் தன் தோளில் கிடந்த ஜந்துவைக் கையில் எடுத்தான். அது உண்மையிலேயே ஒரு பூனைக் குட்டி அளவில் இருந்தது.

''இது என்ன மிருகம்?''

''இது மிருகமே அல்ல! இது ஒரு மின்விசை இயந்திரம் — மினுேஸார் என்று பெயர்!''

சங்கரன் அதை ஆராய்ந்தான். அது ஒரு மினி டிரேனஸார் போல இருந்தது.

''கையில்தான் வாங்கிப் பாரேன்!''

''கடித்து விட்டால்....? ஜான் விந்தாம் கதை ஒன்றில் இப்படித்தான் ஒரு ஜந்து ரத்தத் துளிகளைச் சுவைத்ததாகப் படித்துள்ளேன்...!''

''இதுதான் பூவுலகில் விஞ்ஞான இலக்கியம் ஏற்படுத்திய விளைவு. இது ஒரு சிறிய ரேடியோ மாதிரி. இதனுள் அமைந்திருப்பது ஒரு சக்தி வாய்ந்த 'மினியேச்சர்' பிரிண்டட் ஸர்க்யூட், மற்றும் பல நுணுக்கமான புலனறியும் ஸெமிகண்டக்டர்கள். டயல் இப்படிச் செட்டில் அவை காட்டும் குறிப்புக்களிலிருந்து உங்கள் வானின் நிலை, நீர், கனிமம், எல்லா

வத்தின் வளங்களையும் அறிய லாம். இந்த வேலை செய் யாத சமயத்தில் டெல்விய சங்கீதத்தைக் கேட்கலாம். விண்வெளியில் சார்ஜ் ஆகும் பாட்டரியையும்பெறலாம்!''

''அப்படியா? ஆச்சரிய மாக இருக்கிறதே! முதலில் பார்த்தபோது பூனை மாதிரி ஓடியது. இப்போது இது ஒரு வெறும் கருவி என் கிறீர்கள். அப்படியானால் உங்களைப் போன்ற டெல்வி யன் மக்கள்?....''

''ஏன் நானும் அப்படித் தான். பாலும் பழமும் இறைச்சியும் கொண்ட உணவு இல்லாமல்தான் நாங்கள் வாழ்கிறோம். கிட் டத்தட்ட 'ரோபாட்'கள் மாதிரி. வேலை செய்வதற் கான சக்தியைப் பெற எங்கள் ஒவ்வொரு வரிடமும் ஒரு சூபர்ஸானிக் லேஸர் துப்பாக்கி இருக்கிறது. சூரிய ஒளியிலிருந்து பெற முடி யாதது ஒன்றுமே இல்லை.''



''சூர்யகலா, சந்திரகலா செல்டர்லை அப்பாயிண்ட் செய்ததிலிருந்து ஆபீஸ் கலாகலாவென்று ஒரே கலகலப்பாக இருக்கு!''

லேஸர் என்ற சொல் கேட்ட மாத்திரத் திலேயே துள்ளிக் குதித்தான் சங்கரன். அண் மையில் அமெரிக்க சஞ்சிகை யொன்றில் ''இரு தய அறுவைச் சிகிச்சையில் லேஸரின் உப யோகம்'' பற்றி வெளியாகி யிருந்தது அவன் நினைவுக்கு வந்தது. அதைப் பற்றி அறிய ஆவல் கொண்டான்.

''ஆமாம். இந்த 'ஸூபர்ஸானிக் லேஸர்' எப்படிப் பயன்படுகிறது?''

குள்ளன் சிரித்தான், அதைப் பயன்படுத் தாத துறையே அகிலத்தில் இல்லை என்ற பொருளில்.

''இதோ இந்த ''வியூபைண்ட''ரில் உற்றுப் பார்!''

சங்கரன் உற்று நோக்கினான். ஒரு மாபெரும் ''டம்பர்'' குவாரியிலிருந்து மேட் டில் ஏற முடியாமல் திணறிக் கொண்டிருந் தது தெரிந்தது. குள்ளனிடம் அப்படியே சொன்னான்.

''இங்கிருந்து அந்த டம்பர் எத்தனை தூரத் தில் இருக்கிறது?''

''சுமார் முக்கால் மைல் இருக்கலாம்!''

''இப்போது இந்தத் துப்பாக்கியின் ஓர் இணைப்பைப் பூமிக்கடியில் செலுத்து. பின்னர் துப்பாக்கியின் திசை காட்டியை அட்ஜஸ்ட் செய்து டம்பரை நோக்கிக் குதிரையை இழு!''

துப்பாக்கியைக் கையில் வாங்கிய சங்கரன் அதன் கனம் தாங்காமல் கீழே விழுந்தான். குள்ளனே அனாயாசமாகத் துப்பாக்கியைத் தாங்கிக் கொண்டு அலேனத் தூக்கிவிட்டான்.

''நில்...நில்.... அதுவும் ஒரு வகையில் நல்லதாகப் போயிற்று! நான் நீ சொன்னபடி இயக்கி யிருந்தால் அந்த டம்பரும் மனிதர் களும் என்ன ஆகியிருப்பார்கள்?''

''ஒன்றும் ஆகியிருக்க மாட்டார்கள். நான் என்ன, உன்னை டம்பரையா குறி வைக்கச் சொன்னேன்! பூமிக்கடியில் தானே சுடச் சொன்னேன்! இதோ பார், நானே செய் கிறேன்!''

தொலை நோக்கியைக் கழற்றி அவனிடம் தந்து விட்டு, தானே லேஸரை இயக்கினான் டெல்வியக் குள் ளன். அரை விநாடியில் டம் பர் திடலுக்கை விட்டு எம்பிச் சமமான சாலைக்கு ஏறிய தைக் கண்டான் சங்கரன்.

ஒளியின் மூலம் பிரதி பலிக்கப்பட்ட சக்தி சூபர் ஸானிக் வேகத்தில் பூமியின் பரப்பையும் கன பரிமாணத் தையும் தேவைக்கேற்ப மாற்றிவிடக் கண்டான். அவன் வியப்பு நீங்கி, மேலும் பல சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ள எண்ணித் திரும்பினான். குள்ளனும் பிறேனாரும் போன சுவடே தெரியாமல் மறைந்து விட்டிருந்தார்கள்.

சிறிது தொலைவில் கப்புக்குட்டி ஆகா யத்தை நோக்கி நின்று கொண்டிருந்தான். அவன் பார்த்த திசையைச் சங்கரனும் நோக் கினான்.

உலோகத் துண்டு ஒன்று 'ஆக்ஸிடைஸ்' ஆகி ஆகாயத்தில் பிரயாணம் செய்வதுபோல் அவனுக்குத் தோன்றியது. ஏதோ நினை வாகத் தன் மோதிர விரலைத் துழாவினான். சுமார் ஒரு பவுன் மதிப்புள்ள அவனது புத்தம் புதிய மோதிரம் அந்த விரலில் இல்லை.

சுதாரித்துக் கொண்டு குவாரியை நோக்கி விரைந்தனர் இருவரும். அங்குள்ள என்ஜி னியரிடம் தாங்கள் கண்டதை விளக்கினான் சங்கரன்.


''லேஸராவது மண்ணாங்கட்டியாவது, டம்பரின் கியர் சற்றே பழுதாகியிருந்தது. அது கரெக்டாக எங்கேஜ் ஆனதும் தானே கிளம்பியது — அவ்வளவுதான்!'' என்றார் அந்த என்ஜினியர்.

வீடு திரும்பியதும் சங்கரனின் மனைவியும் அவன் கதையை நம்ப மறுத்தாள். ''போதுமே உங்க சமர்த்து! நூற்றைம்பது ரூபாய் மோதிரத்தைத் தொலைக்கிறதுக்கு பல் லிக்கோட்டை மலைக்குப் போகணுமாக்கும்! போதாக் குறைக்கு அழகான கதை சொல் றேள், கதை!'' என்று மோவாய்க்கட்டையில் இடித்துக் காட்டினாள்.

அக்கம் பக்கத்திலும் அப்படியே!

எப்படி ஐயா நம்புவார்கள்? அவர்கள் தாம் உடல் வருந்தி உழைப்பதிலேயே நம்பிக்கை கொள்ளவில்லையே!

சங்கரன் அதைப் பொருட்படுத்தவில்லை. ''ஒரு பவுன் மதிப்புள்ள அனுபவம்'' என்ற தலைப்பில் தன் குறிப்பேட்டில் அன்றைய அனுபவத்தை எழுதி வைத்தான். வேற்றுலக மனிதனைத் ''திருடன்'' என்று கணக்கிட அவன் மனம் ஒப்பவில்லை.


மர்பி டிரான்ஸிஸ்டர்கள்
கொஞ்சும் எழிலோடு சக்தியும் இணைந்தவை
மியூஸிக் மாஸ்டர்
2 பாண்டு ரூ. 160*
மினி மாஸ்டர்
2 பாண்டு ரூ. 210*
2 பாண்டு ரூ. 176*
மஸ்தானா
3 பாண்டு ரூ. 245*
4 பாண்டு 'டீலக்ஸ்' ரூ.328
மர்பி இல்லத்தை மகிழ்விக்கிறது!
RAS-C-45 G

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

"விஜுவிகார்", 17-A, பிளாங் ரோடு
ஷண்முகானந்தா ஹாலுக்கு அடுத்தது
சயான் (கிழக்கு), பம்பாய்-22. D.D.
போன்: 47 14 55 தபால்பெட்டி: 6759 • தந்தி: 'GROWRICH'

உன்னத சேவையில் 25-வது ஆண்டு ஆரம்பம்
ஏலம் கேட்ட பிறகு டிவிடெண்டு அடையும் வசதியுள்ள ஸ்கீம்கள்

1971 ஏப்ரல் புதிய குரூப்புகள்

குறுகிய காலம்: 25 மாதங்கள்			நீண்ட காலம்: 40 மாதங்கள்		
சேருவதற்கு கடைசி தேதி: 10-4-1971			சேருவதற்கு கடைசி தேதி: 24-4-1971		
முதல் ஏலத் தேதி: 11-4-1971			முதல் ஏலத் தேதி: 25-4-1971		
வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
	ரூ.	ரூ.		ரூ.	ரூ.
B	100/-	2,500/-	E	500/-	20,000/-
C	50/-	1,250/-	F	250/-	10,000/-
F	25/-	625/-	G	125/-	5,000/-
G	20/-	500/-			

நீண்ட காலம்: 50 மாதங்கள்—ஏலம் எடுக்காத சீட்டுதாரர்களுக்கு மட்டும் டிவிடெண்டு உண்டு

சேருவதற்கு கடைசி தேதி: 17-4-1971 :: முதல் ஏலத் தேதி: 18-4-1971

வகுப்பு	தவணை	சீட்டுத் தொகை
	ரூ.	ரூ.
LTA	100/-	5,000/-
LTB	50/-	2,500/-
LTD	20/-	1,000/-

வேலை நேரம்: காலை 8 மணி முதல் 10-30 வரை; மாலை 4 மணி முதல் 7-30 வரை
வார விடுமுறை: திங்கட்கிழமை


தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:
"பாலுஸேரி பில்டிங்ஸ்"
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, தபால் பெட்டி: 414, சென்னை-6
கிளைகள்: பெங்களூர் - கல்கத்தா - புது டெல்லி
இலவச பிரகடனத்திற்கு எழுதுங்கள்

சீட்டுகள் ஒதுக்குதல்
கம்பெனியின் உரிமையைப் பொறுத்தது

25 YEARS

எமது வெள்ளி விழா ஆண்டு

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை



வட்ட மேஜை

பாலைவனத்தில் தண்ணீருக்குத் தவிப்பவனைக் கானல் நீரைக் காட்டிக் கூட்டிக் கொண்டு போவது போல், சில அரசியல் வாதிகள் வறுமையில் வாடும் நம் மக்களை சோஷலிஸம் என்னும் கானல் நீரைக் காட்டி இழுத்துச் செல்கிறார்கள். இவர்கள் கூறும் சோஷலிஸக் கொள்கைப்படி அரசாங்கத்தால் நடத்தப்படும் பல திட்டங்களிலும் எவ்விதப் பலனும் இல்லை — வரிப் பணத்தை வாரி இறைப்பதைத் தவிர. பெரும்பாலான மக்கள் இந்த சோஷலிஸ மாயையிலிருந்து விடுபட்டு வெளிவந்தாலொழிய நம் நாட்டில் உண்மையான பொருளாதார முன்னேற்றத்தை எதிர் பார்க்க முடியாது.

ஈரோடு
16—3—71 எஸ். எம். எஸ்.

திருச்செந்தூர் தொகுதியில் முதல் வோட்டு எண்ணிக்கையின் முடிவில் திரு மத்தியாஸ் முப்பத்திரண்டு வோட்டுக்கள் அதிகமாகப் பெற்று வெற்றி பெறும் நிலையில் இருந்தார். ஆனால் அதன்பின் மத்தியாஸ் சம்மதிக்கவில்லை என்றாலும் வற்புறுத்தி அவரைச் சம்மதிக்க வைத்து இரண்டாம் முறையாகச் செல்லாத வோட்டுகளை மட்டும் எண்ணலாயினர் தேர்தல் அதிகாரிகள். அவ்வாறு செல்லாத வோட்டுக்களை மட்டும் இரண்டாம் முறையாக எண்ணியதன் முடிவு மத்தியாஸை எதிர்த்து நின்ற தி. மு. க. வேட்பாளர் இருபத்தாறு வோட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்!

செல்லாத வோட்டுகளை மட்டும் இரண்டாவது முறையாக எண்ணியதில் இவ்வளவு மாற்றம் (வென்றவர் தோற்க, தோற்றவர் வென்ற அதிசய மாற்றம்) என்றால் இது என்ன விந்தை? சரியான எண்ணிக்கையை முதல் முறையிலேயே கூற முடியாத தேர்தல் அதிகாரிகளின் தகுதியை என்னவென்பது?

இத்தகையவர்கள் மூன்றாவதாக ஒரு முறை எண்ணினால் மீண்டும் மத்தியாஸ் வெற்றி பெறவும் வழி உண்டல்லவா?

சென்னை—1
19—3—71 எம். ராமமூர்த்தி

சரித்திர மகத்துவம் வாய்ந்தது என்று கருதப்பட்ட நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் நமது சிந்தனைக்குரியவை. ஜனநாயக நாட்டில் வெற்றியும், தோல்வியும் புரண்டும் உருண்டும்தான் வரும்; அது தான் நெறி, அதுதான் முறை. முடிவுகள் எதிர்பாராதவையாகவும் நமக்குச் சாதகமாக அமையவில்லை என்கிற காரணத்தாலும் நாம் நமது பணிகளினின்றும் துவண்டுவிடப் போவதும் இல்லை, தூங்கிவிடப் போவதும் இல்லை. பதவியும், பவிசும் நமக்கு நோக்கமல்ல. பணிகள்தாம் நமக்கு முக்கியமானவை. தேர்தலிலே அதிகாரப் போக்கு, அராஜகம், சூழ்ச்சி, சூது இவற்றின் பங்கு என்ன என்பதைக் கணிக்க வேண்டும்.

நமது மக்கள் இன்னமும் இருட்டில்தான் இருக்கிறார்கள். வார்த்தை ஜாலங்கள், விளம்பரப் பாணிகள் இவற்றைத்தாம் நம்புகிறார்கள். இனிக்க இனிக்கப் பேசுபவனுக்கே ஆதரவு என்கிற முறையில்தான் இன்னும் இருக்கிறார்கள். இன்றைக்கு ஏதாவது கொடுத்தால் சரி என்கிறார்களே தவிர 'நாளை' என்பதை நினைத்துப் பார்க்க மறந்துவிடுகிறார்கள். எதிர்காலத்தைப் பற்றியும், தங்கள் மக்களின் வருங்காலம் என்ன என்பதைப்பற்றியும் எண்ணிப் பார்க்கிறவர்களின் எண்ணிக்கை நம் நாட்டில் குறைவு என்பதையே இந்தத் தேர்தல் முடிவு வலியுறுத்துகிறது. எதிர் காலத்தைப் பற்றிச் சிந்திப்பவர்களின் எண்ணிக்கை உயரும் நாள் எந்நாளோ?

சென்னை—5
15—3—71 துலாமவன்

✿ இக்குறிப்பிட்ட கடிதம் ரூ. 15/- பரிசு பெறுகிறது.


✿ **அ**ரசினர் துறை நிறுவனங்களான பாங்குகள், தொழிற்சாலைகள், இந்தியன் ஏர்லைன்ஸ் போன்றவற்றில் கதவடைப்பு அல்லது வேலை நிறுத்தம் நடப்பது என்பது மிகவும் சர்வசாதாரணமாகி விட்டது. நிறுவனம் மூடிய ஒரு வாரத்துக்குள் பிரபல பத்திரிகைகளில் அந்நிறுவனத்தின் மானேஜ்மென்ட் ஒரு விளம்பரம் பிரசுரித்திருக்கும்.

''பொதுமக்களே, நீங்கள் தீர்ப்பு வழங்குங்கள்'' — இத்தலைப்பில் அவர்கள் தங்களது நிலையையும், ஸ்டிரைக், லாக்அவுட் எவ்வாறு ஏற்பட்டன என்பதையும் விளக்கியிருப்பார்கள். இதற்கு இரண்டொரு நாட்கள் கழித்து அதே பத்திரிகைகளில் அதே தலைப்பில் அந்த நிறுவனத்தின் தொழிலாளர் யூனியன் சார்பாக ஒரு விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருக்கும். இவர்கள் தங்கள் நிலையை விளக்கியிருப்பார்கள்.

இவ்விரண்டு விளம்பரங்களில் பொது மக்கள் யார் கூறுவதை நம்புவது? அப்படியே உண்மைநிலையை அறிந்து பொதுமக்கள் தீர்ப்பு கூறினாலும் அதை ஏற்றுக் கொள்ள இரு சாராரும் தயாராக இருப்பரா? அல்லது தீர்ப்பு கூறுவது மட்டும்தான் பொதுமக்கள் பணியா?

வீணாக இந்த மாதிரி விளம்பரங்களைப் பிரசுரித்து ஏன் பொதுமக்களைத் தங்கள் சார்பில் துணை இருக்க இவர்கள் அழைக்கின்றனரோ, அது அவர்களுக்கே வெளிச்சம்! தங்கள் ஸ்டிரைக், லாக் அவுட் மூலமாய்ப் பொது மக்கள்தாம் நிறையத் தொல்லைகளுக்கு உள்ளாகிறார்கள் என்பதை இவர்கள் உணர்ந்தால், அதுவே இவர்கள் மக்களுக்கு ஆற்றும் பெரிய நன்மையாகும்.

பரோடா — 1
11—3—71 ச. வே. சுந்தரம்



Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

GRASIM
STAPLE FIBRE A SUPPLEMENT TO COTTON AND OTHER FIBRES



Among Indian technological achievements Gwalior Rayon's success in producing Rayon Grade Pulp from indigenous raw materials without any foreign aid or collaboration has, perhaps, been the most remarkable. The staple fibre produced from the pulp has been a boon to the hard-pressed textile industry which was deprived of valuable raw materials when vast areas of cotton-growing land were lost to Pakistan as a result of Partition.

Grasim Staple Fibre is unique in many respects, and is, in effect, a supplement to all natural fibres including cotton, wool, silk, jute, as well as to synthetic fibres. When blended or mixed with other fibres, it increases the usefulness of the resultant fabrics, making them cooler, softer, and more comfortable while at the same time helping to lower costs.

Today Gwalior Rayon contributes substantially to the national economy. It keeps hundreds of textile mills busy, gives employment to thousands of people, helps clothe lakhs more, saves crores of rupees in foreign exchange, contributes handsomely and in ever-increasing amounts to the national exchequer—these are just a few of the calculable benefits.

Besides Rayon Grade Pulp and Staple Fibre, Gwalior Rayon also produces high quality fabrics and fabricates its own machinery and equipment.

As the needs of the nation for the basic necessities of life are constantly growing, Gwalior Rayon, conscious of its responsibilities, has already made plans to expand its production. It is the constant endeavour of the Company to serve the country to its utmost ability.

THE GWALIOR RAYON SILK MANUFACTURING (WVG.) CO. LTD.

Birlagram, Nagda.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon